திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"



ஸ்ரீ லட்சுமிநாராயணப் பெருமாள்,
சட்டநாதபுரம், சீர்காழி

மாலை 13] சாதாரண - பங்குனி - மார்ச், 1971 [மணி 6

தமிழ் நாடு அரசின் அறநிலைய
ஆட்சித்துறை வெளியீடு.



திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்க சுவாமி கோயிலில் நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்க விழாவில், ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருமுன்னிலையில், மதுரைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் உடனிருக்க, நமது அறநிலைய ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன் பி. ஏ., பி. எல்., ஐ. ஏ. எஸ், அவர்கள் சிறப்புரை நிகழ்த்துதல் (12—2—71).

பொருளடக்கம்.

1. திருநாவுக்கரசரும் திருவையாறும்
2. மாணிக்கவாசகர் மாட்சி
3. இராமலிங்க வள்ளலார்
4. ஜோதிலிங்கத் தலங்கள்
5. திருவரங்கம் கோயில்
6. அட்ட பந்தனம்
7. மதுர கவிகள்
8. சூரியனார் கோயில்
9. இந்தோனேசியாவில் இந்து சமயப் பிரசாரம்
10. திருவாய் மொழியின் தெளிபொருள் விழா
11. திருமுறைக் கருத்தரங்க விழா அருள் ஆசியுரை
12. தைப்பூசமும் தெப்ப விழாவும்
13. அடியவர்க்கு மெய்யன்

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

ஆண்டுச் சந்தா ரு. பத்து மட்டும் **தனிப்பிரதி விலை ரு. ஒன்று மட்டும்**

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆக சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்களாக சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும் மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறாமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்



மாலை 13]　　சாதாரண — பங்குனி — மார்ச், 1971　　[மணி 6

திருநாவுக்கரசரும் திருவையாறும்

(ந. ரா. முருகவேள், M. A., M. O. L.)

[திருவையாற்றில் மகா கும்பாபிஷேக விழா : 31—3—71]

முன்னுரை :

சைவ சமயப் பெருங்குரவராகிய திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்க்கையின் அருள் நிகழ்ச்சிகளிலும், தேவாரத் திருப்பதிகங்களிலும், ஒரு பெருஞ் சிறப்பிடம் பெறுவது திருவையாறு. திருநாவுக்கரசர் தென் கயிலாயமாகிய திருக்காளத்திக்குச் சென்று, அங்குள்ள காளத்தியப்பரை வணங்கி மகிழ்ந்து எழுந்தருளியிருக்குங்கால், வட கயிலாயத்தில் சிவபெருமான் எழுந்தருளி விளங்கும் திருக்கோலத் தைத் தரிசிக்க விரும்பினார்.

திருக்கயிலைச் செலவு :

திருக்காளத்தி மலையிலிருந்து வடதிசை நோக்கிப் புறப்பட்டுத் திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) சேர்ந்தார். அங்கு இறைவனைப் பாடி வழிபட்டார். பின்னர்த் தெலுங்கு கன்னட நாடுகளையும், காடு நதி மலை முதலிய பகுதிகளையும், மாளவம் இலாடம் (வங்காளம்) மத்திமபைதிரம் (மத்தியப் பிரதேசம்) முதலிய நாடுகளையும் கடந்து, கங்கைக் கரையை அடைந்தார். வாரணாசியைப் பணிந்து வழிபட்டார். பின்னர் அங்கிருந்து மனிதர்களால்

148688
JL
Q2 m 21,N59 TK

போக முடியாத வழிகளில் கயிலை மலையை நோக்கி நடந்து சென்றார். இராக்காலங்களிலும், இருளிலும் [illegible] அவர் தொடர்ந்து அவர் விரைந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது கொடிய விலங்குகளும் அவருக்குத் திங்கு செய்ய அஞ்சின. நஞ்சு உமிழ்கின்ற நாகங்களும் அவருக்குப் பரிந்து இருளில் மணி விளக்கு எடுத்து வழிகாட்டின. இலை சருகு கிழங்கு பழங்கள் என்பவற்றை உண்ணுதலும் தவிர்ந்து, இரவு பகலாக அவர் தமது பயணத்தை மேற்கொண்டார். அதனல் அவர் தம் பாதங்கள் பரடு வரையும் தசை தேய்ந்து போயின. கைகளும் மணிக்கட்டுகளும் அசைந்து தேய்ந்து சிதைந்தன. அப்போதும் அவர் தம் ஆர்வம் குன்ருமலும், உறுதி தளராமலும், மார்பினல் உந்தியும் உடலாற் புரண்டும் சென்று கொண்டிருந்தார்.

அந்நிலையில் சிவபெருமான் ஒரு முனிவர் வடிவத்தில் எதிர்ப்பட்டு ''கயிலை மால்வரை யாவது காசினி மருங்கு பயிலும் மானுடப் பான்மையோர் அடைவதற்கு எளிதோ?'' என்று திருநாவுக்கரசரை வினவி, ''ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டு அல்லால், மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்'' என்னும் உறுதிபூண்டிருந்த அவர்தம் உள்ளத் துணிவை ஆய்ந்துணர்ந்து மகிழ்ந்தார். ''ஓங்கும் நாவினுக்கு அரசனே! எழுந்திரு'' என்று பணித்தார், அவ்வளவில் தீங்கு நீங்கிய யாக்கையராய்த் திருநாவுக்கரசர் ஒளி திகழ எழுந்து,

''அண்ணலே எனை ஆண்டுகொண்
டருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி
வேத நாயகனே
கண்ணினல் திருக்கயிலையில்
இருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்
புரிஎனப் பணிந்தார்.''

திருவையாற்றில் திருக்கயிலைக் காட்சி :

அதுபோது சிவபெருமான் விண்வெளி ஒலியால், ''இதோ இங்குள்ள பொய்கையில் மூழ்கித் திருவையாற்றை அடைந்து நாம் கயிலையில் இருக்கும் கோலத்தைக் காண்க'' என்று அருளிச் செய்தார். திருநாவுக்கரசர் ''வேற்ருகி விண்ணுகி நின்ருய்போற்றி'' என்னும் போற்றித் திருத்தாண்டகம் பாடித் திருவைந்தெழுத்து ஓதி, அப் பனி வரையின்கண் அருகேயிருந்த ஒரு பொய்கையில் மூழ்கி, திருவையாற்றிற் கோயிலுக்கு வடமேற்கே சமுத்திர தீர்த்தம் என்றும், உப்பங்கொட்டைப் பிள்ளையார் கோயில் குளம் என்றும் வழங்கும் ஒரு திருக்குளத்தின் மீது, உலகெலாம் வியக்குமாறு வந்து தோன்றி எழுந்தருளினர்.

அந் நிலையில், அவர் அத்தலத்தில் நிற்பனவும் சரிப்பனவுமாகிய சரம் அசரம் ஆகிய எல்லாப் பொருள்களும், தத்தம் துணையாகிய பெண்ணுடன் விளங்கும் தோற்றத்தைக் கண்டார். அக்காட்சி ''பொன் மலைக் கொடியுடன் அமர் வெள்ளியம் பொருப்பின் தன்மையாம் படி சத்தியும் சிவமுமாம் தன்மையிற் பொலிந்து'' விளங்கியது. மற்றும் திருவையாற்றுக் கோயிலே, கயிலை மால் வரையாகவும்; அங்கு எழும் ஒலி, முனிவர்களும் தேவர்களும் மறைகளும்போற்றித்துதிக்கின்ற ஒலியாகவும், திருநாவுக்கரசருக்குப் புலனுயின. தேவர் தானவர் விச்சாதரர் இயக்கர் மாதவர் முனிவர்கள் ஆகிய பலரும் அங்குப் புடையெலாம் மிடைந்துதோன்றினர், அரம்பையர் கானமும் முழவும் தழைத்தன. கங்கையே முதற் பெருங் கடவுள் மாநதிகள் எலாம், திருவையாற்றிற் பெரும் தீர்த்தங்களாக வந்து பணிந்தன. பூத வேதாளங்கள் போற்றின. இங்ஙனம் திருக் கயிலைக் காட்சி திருநாவுக்கரசருக்குத் திருவையாற்றில் கிடைக்கப்பெற்றது.

''வெள்ளி வெற்பின்மேல் மரகதக்
கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவளவெற்
பெனஇடப் பாகம்
கொள்ளும் மாமலை யாளுடன்
கூடவீற் றிருந்த
வள்ள லாரைமுன் கண்டனர்
வாக்கின் மன்னவனர்''

N71·13·6

திருக்கயிலாயத் திருப்பதிகங்கள் :

இங்ஙனம் திருக்கயிலையில் சிவபிரான் வீற்றிருக்கும் காட்சியைத் திருவையாற்றிற் கண்டு களித்த திருநாவுக்கரசர், அத் திருக்கயிலைக் காட்சியை விதந்து வியந்து ''பொறையுடைய பூமி நீரானுய் போற்றி'' என்றும், ''பாட்டான நல்ல தொடையாய் போற்றி'' என்றும் தொடகங்கப் பெறுகின்ற இரு சிறந்த திருத்தாண்டகங்களை அருளிச் செய்தார். இங்ஙனம் திருக்கயிலாயம் பற்றித் திருநாவுக்கரசர் அருளிச் செய்த போற்றித் திருப்பதிகங்கள் மூன்று. இம்மூன்று பதிகங்களின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ''கயிலை மலையானே போற்றி போற்றி'' என்னும் அழகிய அருந்தொடர் அமைந்திருத்தல் காணலாம்.

இம் மூன்று திருப்பதிகங்களில் ''வேற்ருகி விண்ணுகி நின்ருய் போற்றி'' என்பது, ''இப் பொய்கையில் மூழ்கி நீ நம்மைக் கயிலையில் இருந்த கோலம் திருவையாற்றிற் காண்க'' எனச் சிவபெருமான் விண்வெளியினின்று அருளிச் செய்தபோது, பொய்கையில் மூழ்கும் முன்னர்ப் போற்றிப் பாடியது. ஏனைய இரண்டும் திருவையாற்றில் ஓர் வாவிமீது தோன்றி வந்து எழுந்து, திருக்கயிலைக் காட்சியைக் கண்டபோது பாடியனவாகும் என்பது, இங்கு நாம் உணர்தற்குரியது.

(1) அந்நிலையில், சிவபெருமான் தமது கயிலைக் கோலத்தைச் சேயதாக்கி, திருவையாறு அமைந்த கோலமே திகழச் செய்தார். அப்போது திருநாவுக்கரசர் ''வேத முதல்வர் ஐயாற்றில் விரவும் சரா சரம் எல்லாம் காதற் றுணையொடும் கூடக் கண்டேன்'' என்னும் கருத்து அமைய,

''மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்து ஏத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயாறு
அடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
களிறு வருவன கண்டேன்;
கண்டேன் அவர் திருப்பாதம்;
கண்டறி யாதன கண்டேன்''

என்னும் திருப்பதிகம் அருளிச் செய்தார். இதன்கண் ''யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது'' என்னும் தொடரால், திருநாவுக்கரசர் பனிமலைப் பொய்கையில் மூழ்கித் திருவையாறு அடைந்த அற்புதத் திறம் சுட்டப் பெற்றிருத்தல் காணலாம். களிறு கோழி குயில் மயில் பகன்றில் ஏனம் கலை தாரை கிளி காளை முதலியன, தத்தம் பெடையொடும் துணையொடும் பிணைந்து, சத்தியும் சிவமுமாம் தன்மை தோன்ற வருந்திறனை அவர் கண்ட காட்சியும், இத்திருப்பதிகத்திற் கவினுற விளக்கப்பட்டுள்ளது. இப்பதிகம், திருவையாற்றிற் கண்ட திருக்கயிலாயக் காட்சி சேயதாகிய பின்னர், அதனை நினைந்து நினைந்துருகித் திருநாவுக்கரசராற் பாடப் பெற்றது ஆகும். இது ''கண்டேன் அவர்(திருக்கயிலாயம் என்னுமல்) திருப்பாதம்'' என்று அருளியுள்ள குறிப்பால் புலனுகும்.

(2) இதன்பின் திருநாவுக்கரசர் திருவையாற்றில் நிலையாகச் சிலகாலம் தங்கியிருந்து ஐயாறப்பரை வழிபட்டு மகிழ்ந்தார். அப்போது அவர், மேலும் பல திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் ஆகிய திருப்பதிகங்களை அருளிச் செய்தார். ஒவ்வொரு பாடலினும் ''ஐயாறற்கு ஆளாய் நான் உய்ந்தேனே'' என்னும் ஈற்றுச் சொற்றொடர் அமைந்த திருநேரிசை, அனைவர் உள்ளமும் உருக்கும் தகையதாக உள்ளது.

(3) ''கங்கையைச் சடையுள் வைத்தார்'' எனத் தொடங்கும் திருநேரிசை சிவபிரானின் திருவுருவ அடையாளங்களையும், சிறப்பியல்புகளையும், அருளிச் செயல்களையும் விதந்தெடுத்துக் கூறுகின்றது. இப்பதிகத்தில் வரும்.

''இரப்பவர்க்கு ஈய வைத்தார்
ஈபவர்க்கு அருளும் வைத்தார்

காப்பவர் தங்கட் கெல்லாம்
கடுநர கங்கள் வைத்தார் ''

என்னும் வரிகள், இற்றை ஞான்றைச் சமுதாய வாழ்வில் நாம் அடிக்கடி நினைவு கூர்ந்து, பொன்னினும் மணியினும் போற்றிப் பொதிந்து கொண்டு கடைப்பிடித்து ஒழுகுதற்கு உரியனவாயுள்ளன.

(4) ''குண்டனாய்ச் சமணரோட கூடி'' எனத் தொடங்கும் திருநேரிசையில், திருநாவுக்கரசர் தாம் முன்பு சமணருடன் கூடி உழன்ற செய்திகளையும், அவர் தம் பல்வகைக் குற்றங்களையும் குறிப்பிட்டு வருந்துகின்றார். ஐயாறப்பரைத் 'திருவையாறு அமர்ந்த தேன்' என்று இப்பதிகத்தில் ஒவ்வொரு பாட்டிலும் குறிப்பிடுகின்றார். திருவையாற்றை வாலியார் வணங்குகின்றார்கள்; தேசத்தார் பரவுகின்றனர்; தவமுனிவர் ஏத்துகின்றனர். அங்கே கமலப் பொய்கைகளும், வாளை பாயும் மடுக்களும், நறவமார் பொழில்களும், மல்லிகை மலரும் சோலைகளும் உள்ளன என்று புகழ்கின்றார்.

(5) ''தானலாது உலகமில்லை'' எனத் தொடங்கும் திருநேரிசையில் ஐயாறனார்க்கு உரிய பல சிறப்பியற் பண்பு நலன்கள் குறிக்கப் பெற்றுள்ளன. ''தானலாது உலகம் இல்லை சகமலாது அடிமையில்லை'' ''அரியலால் தேவியில்லை'' ''தொண்டலால் துணையுமில்லை'' ''அன்பலால் பொருளுமில்லை'' ''தொண்டர் அகமலால் கோயில் இல்லை'' என்பன போன்று வரும் பற்பல தொடர்கள், மிகவும் சிறந்த ஆழ்ந்த பொருட் செறிவுடையனவாகத் திகழ்கின்றன.

(6) ''அந்தி வட்டத் திங்கட் கண்ணியன்'' என்று தொடங்கும் திருவிருத்தம், இப்போது முதல் இரண்டு பாடல்களை மட்டுமே கொண்டுள்ளது. இத்திருவிருத்தத்தில் வரும் ''புந்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய் என்பனோ'' என்னும் வரி, இறைவன் ஒருவன் உளன் என்பது பொய் என்று சமணர் கூறி வந்ததனைத் 'தன் நெஞ்சு அறிவது பொய்யற்க' என்னும் கோட்பாட்டின்படி ஏற்க முடியாமல் திருநாவுக்கரசர் இடர்ப்பாடுற்ற திறத்தினைச் செவ்விதிற் புலப்படுத்துகின்றது. இதனால் அவர் தம் திருவுள்ளத்தில் எத்தகையதொரு உணர்ச்சித் தடுமாற்றமும் கொந்தளிப்பும் போராட்டமும் ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பதனை, நாம் உன்னித்து உணர்தல் கூடும்.

'' அந்தி வட்டத் திளங்கண்ணியன்
ஆறமர் செஞ்சடையான்
புந்தி வட்டத் திடைப்புக்கு
நின்றானையும் பொய் என்பனோ ?''

எனப் பிறிதோர் இடத்தும் திருநாவுக்கரசர் அருளிச் செய்திருத்தல், நாம் பெரிதும் சிந்தித்து உணர்தற்குரியது.

(7) ''குறுவித்தவா குற்ற நோய் வினை காட்டி'' எனத் தொடங்கும் திருவிருத்தத்தில், சிவபிரான் சூலைநோய் மடுத்தருளித் தம்மை ஆட்கொண்ட திறனைத் திருநாவுக்கரசர் மிகவும் விதந்து எடுத்துக் கூறிப் புகழ்ந்து போற்றுகின்றார். இறைவன் தன்னை ஆட்கொண்டு செய்தருளிய பலவகை நன்மைத் திறன்களையும் ''தொண்டனேனைத் தன் பொன்னடிக் கீழ் எனையே செறிவித்தவா'' எனப் பாடல்தொறும் வரும் ஈற்றுச் சொற்றொடரால் எடுத்தோதி மகிழ்ந்து இன்புறுகின்றார்.

(8) ''சிந்திப்பரியன'' எனத் தொடங்கும் திருவிருத்தத்தில் ஐயாறன் அடித்தலத்தின் அருள் இயல்புகளை மிக விரிவாக எடுத்து விளக்கிப் பாடுகின்றார் திருநாவுக்கரசர். பொதுவாகத் தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்தும் பத்து அல்லது பதினொரு பாடல்களை மட்டுமே கொண்டனவாக இருக்கும், ஆனால் இத் திருவிருத்தப் பதிகம் மட்டும், இருபது பாடல்களைக் கொண்டு இருத்தல் ஒரு தனிச் சிறப்பாகும். இவ்விருபது பாடல்களில் ஒவ்வொன்றும், மிக்க இனிமையும் உருக்கமும் வாய்ந்து திகழ்கின்றது. இத் திருவிருத்தத்தில் உள்ள திருப்பாடல்கள் அனைத்தும் எவருள்ளத்தையும் கொள்ளை கொண்டு கரைவிக்கும் இயல்பின.

(9) ''சிந்தை வாய்தலுளான்'' என்னும் தொடக்கமுடைய திருக்குறுந் தொகையில்

நெஞ்சை நீள்கயமாக உருவம் செய்து, அதன் சுழியாக வஞ்சம் என்பதனைக் குறிப்பிடும் திருநாவுக்கரசர் ''துஞ்சும் போழ்தும் நின் நாமத் திருவெழுத்து அஞ்சும் தோன்ற அருளும் ஐயாறரே'' என இறைவனை வேண்டிக்கொள்கின்றார். திருவையாறு சென்று தாம் பெற்ற திருவருளின்திறனை, ''நான் ஐயாறு புக்கேற்கு அவன் இன்னருள் தேனை ஆறு திறந்தாலே ஒக்குமே'' என்று குறிப்பிடுகின்றார்.

(10) '' சிந்தை வண்ணத்தராய் '' எனத் தொடங்கும் திருக்குறுந்தொகை, ஐயாறப்பரின் பல்வகைப் பண்புகளாகிய வண்ண நலன்களைப் பாரித்து உரைத்துப் பாடிப் பரவுகின்றது.

இருள்தரு துன்பப் படலம் மறைப்ப,
மெய்ஞ் ஞானம் என்னும்
பொருள்தரு கண்இழந்து, உண்பொருள்
நாடிப் புகல்இழந்த
குருடரும் தம்மைப் பரவக்
கொடுநர கக்குழிநின்று,
அருள்தரு கைகொடுத்து ஏற்றும்
ஐயாறன் அடித்தலமே. (1)

எழுவாய் இறுவாய் இலாதன,
வெங்கட் பிணிதவிர்த்து
வழுவா மருத்துவம் ஆவன,
மாநரகக் குழிவாய்
விழுவார் அவர்தம்மை வீழ்ப்பன,
மீட்பன, மிக்க அன்போடு
அழுவார்க்கு அமுதங்கள் காண்க
ஐயாறன் அடித்தலமே. (2)

துன்பக் கடலிடைத் தோணித்
தொழில்பூண்டு, தொண்டர்தம்மை
இன்பக் கரைமுகந்து ஏற்றும்
திறத்தன; மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி
செய்யும்; அப் பொய்பொருந்தா
அன்பர்க்கு அணியன காண்க
ஐயாறன் அடித்தலமே. (3)

களித்துக் கலந்ததொர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்ற
அப்பத்தரைக் கோதில்செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி,
அமரர்கள் சூழ்இருப்ப
அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்கும்
ஐயாறன் அடித்தலமே. (4)

பேணித் தொழுமவர் பொன்னுலகு
ஆளப் பிறந்தருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக்
கொடுத்து இமையோர் முடிமேல்
மாணிக்கம் ஒத்து, மரகதம்
போன்று, வயிரம்மன்னி,
ஆணிக் கனகமும் ஒக்கும்
ஐயாறன் அடித்தலமே. (5)

ஓதிய ஞானமும், ஞானப்
பொருளும், ஒலிசிறந்த
வேதியர் வேதமும், வேள்வியும்
ஆவன; விண்ணும் மண்ணும்
சோதியஞ் செஞ்சுடர் ஞாயிறும்
ஒப்பன, தூமதியோடு
ஆதியும் அந்தமும் ஆவன
ஐயாறன் அடித்தலமே. (6)

(11) திருவையாற்றில் திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகங்கள் இரண்டு. அவற்றுள் ஒரு திருத்தாண்டகப் பதிகத்தில், திருவையாற்றுப் பெருமானைப் பலவகையாக விளித்துப் பாடிப் பரவித்தொழுகின்றார். ''ஐயாறனே என்றென்றே நான் அரற்றி நைகின்றேனே'' என்னும் தொடரைப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் அமைத்து நைந்துருகி பாடிப் போற்றுகின்றார் திருநாவுக்கரசர். மற்றொரு திருத்தாண்டகத்தில் ''திருவையாறு அகலாத செம்பொற்சோதீ'' என விளித்து, இறைவன் எவ்வாறெல்லாம் ஆகி விளங்குகின்றான் என்பதனைப் புலப்படுத்துகின்றார்.

'' ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடிஎன்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ''

'' எல்லா வுலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி யென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையா றகலாதசெம்பொற் சோதீ''

எனவரும் திருவையாற்றுத் திருத்தாண்டகங்கள், பெரியோர்களால் அவ்வப்போது சிறந்தெடுத்துப் பாடிப் போற்றப்படுவனவாகும்.

முடிவுரை :

திருநாவுக்கரசர் திருக்கயிலைக் காட்சி பெற்றதும், அவர் சிலகாலம் நிலையாகத் தங்கிப் போற்றி வழிபட்டதும் ஆகிய திருவையாறு, பெருஞ் சிறப்பு வாய்ந்த புனிதம் மிக்க சிவத்தலமாகும். திருக்கயிலைக்குச் சென்று அதனை வழிபடும் அரும் பெறற் பேறு பெற்ற தருமை யாதீன குரு மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளாட்சிக் காலத்தில் திருவையாற்று ஐயாறப்பர் கோயிலுக்குத் திருப்பணிகள் பல செய்யப்பெற்று, மகா கும்பாபிஷேக விழா நடைபெற இருப்பது, மிக்க பொருத்தமும் சிறப்பும் உடையதாய், அன்பர்களுக்கெல்லாம் மகிழ்ச்சி அளிக்கும் நிகழ்ச்சியாகும். திருவையாற்றுச் சிவதலத்தைத் தரிசித்தும், திருவையாற்றுத் தேவாரத் திருப்பதிகங்களை ஓதியும், திருநாவுக்கரசர் பெருமானைப் போற்றி, அவர் தம் தெய்விக நன்னெறியில் நின்றொழுகி வழிபட்டும், இறையருளை எய்தி நாம் அனைவரும் ஈடேற முயலுவோமாக !

—ஆசிரியர்



காஞ்சிபுரம் ஸ்ரீ தேவராசசுவாமி தேவஸ்தானத்தில் கட்டப்பெறவுள்ள ஸ்ரீ பெருந்தேவித் தாயார் நிலையத்திற்கு, காஞ்சிபுரம் நகரமன்றத் தலைவர் திரு. கே. டி. எஸ். மணி அவர்கள் தலைமையில், நமது அற நிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, பி.ஏ., அவர்கள் அடிக்கல் நாட்டுதல். (19—11—70).

மாணிக்கவாசகர் மாட்சி

திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ,பி.எல்., ஐ.ஏ.எஸ்,

(ஆணையாளர், அறநிலைய ஆட்சித்துறை, தமிழ்நாடு அரசு.)

மணிவாசகர் தமிழ்நாட்டில் தோன்றியருளிய தலைசிறந்த ஞானிகளுள் ஒருவர். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்போல, மணிவாசகர் இயற்றிய திருவாசகமும் அனைத்துலகப் புகழ்பெற்றுத் திகழ்கின்றது. உலகியலுக்குத் திருக்குறளும், அருளியலுக்குத் திருவாசகமும், நமக்குச் சிறந்த வழிகாட்டிகளாக விளங்குகின்றன. திருக்குறள், திருவாசகம் என்னும் இவ்விரு பெரு நூல்களையுமே, பேரறிஞர் திரு. ஜி. யூ. போப்துரை அவர்கள், தமது ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து வியந்து புகழ்ந்து போற்றியிருக்கின்றார்.

திருவாசகத்தின் பெருமை எல்லையற்றது. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. ''திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்து நெகிழ்ந்து உருகும்'' எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் போற்றியுரைத்துப் புகழ்கின்றார். ''திருவாசகப் பாடல்களைக் கேட்டபொழுதே, கீழான பறவைகளும் பொல்லாத விலங்குகளும் கூட, மெய்ஞ்ஞான நாட்டமுறும்'' என இராமலிங்க அடிகளார், திருவாசகத்தின் சிறப்பினை மிகவும் விதந்தெடுத்துப் பேசுகின்றார். ''தோத்திரத்திற் சிறந்தது திருவாசகம்; சாத்திரத்திற் சிறந்தது திருமந்திரம்'' என்பது வடலூர் இராமலிங்க அடிகளார் வற்புறுத்தியுணர்த்திய நற்பெருங் கருத்தாகும்.

திருவாசகம் தன்னை ஓதுபவரின் உள்ளங்களை உருக்கி உயர்த்தி உய்விக்கும் திறத்தில் தனிப்பெரும் சிறப்புடையதாகும். சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் மாண்புமிக வாய்ந்தது, மணிவாசகர் அருளிய திருவாசகம் என்பது, வாழையடி வாழையாக வந்த நம் சமய ஞானச் செல்வர்கள் அனைவரும், நன்கினிது கண்டுணர்ந்த உண்மை அனுபவமாகும்.

திருவாசகத்தின் சிறப்பினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், பின்வருமாறு உருவகம் செய்து கூறுகின்றார். ''சிவபெருமான் ஒரு பெரும் கருணைக் கடல். கடலில் நதி சென்று சேருவது இயல்பு. சிவபெருமானாகிய கருணைக் கடலின் தலையில், கங்கை நதி சேர்ந்திருக்கிறது கடலில் மேகங்கள் நீரை முகக்கும். அதுபோல மாணிக்கவாசகராகிய மேகம், சிவபெருமானாகிய கருணைக்கடலில் முகந்து, அருள் என்ற மழையைப் பொழிந்தது. அது திருவாசகம் என்னும் வெள்ளமாகப் பெருகியது. அத்திருவாசகமாகிய அருள் வெள்ளம் ஓதுபவர்களின் உள்ளமாகிய குளத்தில் புகுந்து நாக்கு என்னும் மதகில் நடந்து, கேட்பவர்களின் செவியாகிய மடையில் பாய்ந்து, உணர்வு என்னும் வயலில், அன்பாகிய விதையினின்று, சிவம் என்னும் மென்முளையைத் தோற்றுவிக்கும், பின்னர் அதனில் இருந்து கருணை மலரவும், முத்தி அல்லது வீடு பேறாகிய சிறந்த பயன் விளையவும் செய்யும்''.

"வலமழு உயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கருணைக்கடல்,
முகந்துஉல குவப்ப உகந்த மாணிக்க
வாசகன் எனும்ஒரு மாமழை பொழிந்த
திருவா சகம்எனும் பெருநீர் ஓழுகி,
ஓதுவார் மனம்எனும் ஒண்குளம் புகுந்து,
நாஎனும் மதகில் நடந்து, கேட்போர்
செவிஎனும் மடையிற் செவ்விதிற் செல்லா,
உளம்எனும் நிலம்புக ஊன்றிய அன்பாம்
வித்தில் சிவம்எனும் மென்முளை தோன்றி
வளர்ந்து, கருணை மலர்ந்து,
விளங்குறும் முத்தி மெய்ப்பயன் தருமே"

என்பது நால்வர் நான்மணிமாலைச் செய்யுள். இதனல் திருவாசகம் தன்னை ஓதுபவர்களுக்கு இம்மை மறுமை ஆகிய எல்லா நலங்களையும் விளைவிக்கும் சிறப்புடையதாதலை யுணரலாம்.

மணிவாசகர் திருவாசகம் மட்டுமேயன்றித் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் வேருெரு சிறந்த நூலையும் இயற்றியுள்ளார். திருவாசகம் அன்பு நூல். திருக்கோவையார் புலமை நூல். திருக்கோவையார் செந்தமிழ் நலத்திற் சிறந்தது; திருவாசகம் சிவநெறி மாட்சி மிக்கது. தமக்கும் சிவபெருமானுக்கும் இடையே நிலவிய தொடர்புகளை, மணிவாசகர் திருவாசகத்தில் விளக்குகின்ருர். தாம் பெற்ற இறையருட் பேரின்ப அனுபவச் செய்திகளை, நம்பொருட்டு உலகியற் சிற்றின்பத் துறைகளில் வைத்து, மணிவாசகர் அழகுற விளக்கிப் பாடியருளிய அரும்பெறல் நூலே, திருச்சிற்றம்பலக்கோவையார்! திருவாசகம், திருக்கோவையார் என்னும் இவ்விரு பெரு நூல்களும், செந்தமிழ்ச் சிவநெறி அன்பர்களுக்கு இரு கண்கள் போல்வனவாகும்.

திருவாசகம் திருக்கோவையார் என்னும் இருபெரு நூல்களும், நம் தமிழ் மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள், முதன்மைச் சிறப்பிடம் பெறுதற்குரியனவாய்ப் பெரும் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும். திருவாசகம் மாணிக்கவாசகரது அயரா அன்பின் திறனை விளக்குகின்றது; திருக்கோவையார் அவர்தம் அரிய புலமையறிவின் பெற்றியினைத் திறம் படப் புலப்படுத்துகின்றது. சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம்; நமதருமைச் செந்தமிழ் மொழியின் சீரிய அகப்பொருள் இலக்கணங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார். மாணிக்கவாசகப் பெருமானின் சிவானுபவ நலன்களைத் திருவாசகத்தால் உணரலாம்; அவர் தம் அளப்பரிய செந்தமிழ்ப் புலமை நலத்தின் சிறப்பினைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும். திருவாசகம் சிவநெறித் திருநூல்; திருக்கோவையார் செந்தமிழ் மொழிப் பெருநூல்; திருவாசகம் தெவிட்டாத தேனையனைய சிறப்பினதெனின், திருக்கோவையார் அத்தேனிடை யூறிய தெய்வநலம் சிறந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்.

''அறிவால் சிவமேயாவர்'' என்றும், ''திருவாதவூர் மகிழ் செழுமறை முனிவர் ஐம்பொறி கையிகந்து, அறிவாய் அறியாச் செம்புலச் செல்வர் ஆயினர்'' என்றும், பலவகையாகச் சான்ருேர்கள் புகழ்ந்து துதிக்கும் மாணிக்கவாசகரின் மாட்சி கடலினும் பெரிது. அவர் நம் பொருட்டு அருளிச்செய்த ஞானப் பனுவல்களாகிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு பெரும் அருள் நூல்களையும், அன்புடன் ஓதி இறைவனை வழிபட்டு உய்ய, நாம் அனைவரும் முயல்வோமாக!

செய்திச் சுருக்கம்

வெள்ளிப் பாத்திரங்கள் நன்கொடை:

திருச்செந்தூர் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திற்குச் சென்னை-33, அசோக் நகர் சி. 231 எண்ணுள்ள இல்லத்திலிருக்கும் திருமதி வி. நாகலட்சுமி அம்மாள் அவர்கள், தமது நன்கொடைக் காணிக்கையாக, 15750 கிராம் எடையுள்ளனவும், ரூ. 7862-50 மொத்த மதிப்புள்ளனவும் ஆகிய வெள்ளிப் பாத்திரங்கள் (42 items of 93 articles) மனமுவந்து வழங்கியுள்ளார்கள். அம்மையார் அவர்களின் அன்பும் பக்தியும் அறவுணர்வும், பெரிதும் போற்றுதற்குரியன. —ஆசிரியர்.



சென்னை நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில் என்னும் குமர கோட்டத்தில் நடைபெற்ற ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழாவில், நமது அற நிலைய் அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா அவர்களும், அற நிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L.,I.A.S., அவர்களும், துணை ஆணையர் திரு. கே. இராஜா, B.A. B.L., அவர்களும், பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

திருநெல்வேலி காந்திமதியம்மை பெண்கள் உயர்நிலைப் பள்ளியில், **பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்தினை**, நமது அற நிலைய அமைச்சர் மாண்புமிகு **திரு. கே. வி. சுப்பையா, B. A.** அவர்கள் திறந்து வைத்தல் (19-10-70).



நாகப்பட்டினம் ஸ்ரீ காயாரோகணசுவாமி கோயிலில் நடைபெற்ற பாவைவிழாவில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன் B.A.,B.L, I.A.S. அவர்கள் "திருநாசைக் காரோணம் புராணம்" பதிப்பித்த திருவாவடுதுறை ஆதீன வித்வான் திரு. த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்து, அதன் முதற் பிரதியினை டாக்டர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை, அவர்களுக்கு வழங்குதல். *(9—1—71)*

நாகப்பட்டினம் ஸ்ரீ காயாரோகண சுவாமி கோயிலில், மாவட்ட நீதிபதி திரு. சி எம். கருப்பண்ணன் அவர்கள் தலைமையில், நடைபெற்ற பாவைமாநாட்டில், நமது அற நிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A.,B.L.,I.A.S., அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

இராமலிங்க வள்ளலார்

டாக்டர் திரு. மு. வரதராசனர், M. A., M. O. L., PH. D.

துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்.

கோடிக் கணக்கான மக்கள் கடவுளை வழி படுகிறார்கள். ஆனால் கடவுள்நெறியில் நின்று, உண்மையையும் அன்பையும் போற்றி, நல்ல வாழ்வு வாழ, எல்லோராலும் முடிவதில்லை. ஒரு சிலர் மட்டுமே கடவுளை யுணர்ந்து வழிபடு கின்றார்கள். அவர்கள் மட்டுமே அறநெறியில் நின்று தூய நல்ல வாழ்க்கையை நடத்த முடிகின்றது.

ஐந்து ஆறு முப்பது என்று பெருக்கல் வாய்பாடு கற்பிக்கப்படுகிறது, கற்கும் சிறுவர்கள் எல்லோரும் ஐந்தாறு முப்பது என்று பலமுறை அந்த வாய்பாட்டைச் சொல்லிச் சொல்லி மனப்பாடம் செய்கிறார்கள். பெருக்கலும் வகுத்தலும் கற்றுக் கொள்வதற்கு அந்த வாய்பாடு உதவியாக இருக்கிறது. சிறுவர்கள் கண்மூடி வாய்பாடு கற்றுக் கணக்குப் போடுவதில் முன்னேறுகிறார்கள். ஐந்தாறு எப்படி முப்பதாயிற்று என்று விளங்காமலே கற்றுக் கொண்டாலும், ஓரளவு பயன்பெற முடிகிறது சிறுவர் வளர்ந்த பிறகு பிற்காலத்தில் ஐந்தாறு எப்படி முப்பது ஆயிற்று என்பதைத் தெளிவாக உணர்கிறார்கள். கண்மூடிக் கற்ற வாய்பாட்டில் அப்போது தெளிவு பெறுகிறார்கள். உணராமல் பயன் பெறுவது வேறு; உணர்ந்து தெளிவு பெறுவது வேறு. அதுபோலவே கடவுள் வழிபாட்டிலும் இரு வேறு நிலை உண்டு. கடவுளை ஒருவாறு நம்பி வழிபடுவது ஒரு நிலை. கடவுளை உணர்ந்து வழிபடுவது மற்றொரு நிலை, கோடிக்கணக்கானவர்கள் நம்பிக்கையால் வழிபடுகிறார்கள். ஓரளவிற்குப் பயன் பெறுகிறார்கள். ஒரு சிலர் மட்டுமே கடவுளை உணர்ந்து வழிபடுகிறார்கள்; வாழ்க்கையில் தெளிவு பெற்று உயர்கிறார்கள்.

கடவுளை உணர்ந்து வழிபடும் தெளிவு, இராமலிங்க வள்ளலார்க்கு இளமையிலேயே வாய்த்துவிட்டது, திருவருளின் ஒளியில் திளைக்கும் பேறு இளமையிலேயே அவருக்கு நிரம்ப வாய்த்தது. அதனால் அவருடைய வாழ்க்கையே அருளாளர் வாழ்க்கையாக விளங்கியது. சிந்தையும், சொல்லும், செயலும் ஆகிய எல்லாம் அருள் குவிந்தனவாக அமைந்தன. ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்னும் அருள் நெஞ்சம் அவருக்கு இயல்பாக அமைந்தது. அவர் சொல்லிய சொல்லெல்லாம் கனிந்த சொல்லாகவும், பாடிய பாட்டெல்லாம் அருட்பாவாகவும் அமைந்தன. ''தெற்சபை உலகத்து உயிர்க்கெல்லாம் இன்பம் செய்வது என் இச்சையாம் எந்தாய்'' என்று எல்லா உயிர்க்கும் இரங்கி வாடும் அருள் வாழ்வாக அவருடைய வாழ்வு முதிர்ந்தது. எளியகோலம் தாங்கி, எளிய வாழ்வு வாழ்ந்து, அருள் ஒளி மிக்கவராய் விளங்கினார்.

வாழ்க்கையை எளிமையாக்கிக் கொண்டு உயர்ந்த நிலை பெற்றவர்களுள் காந்தியடிகளும் ஒருவர். வள்ளலார்க்குப் பின் வந்தவர்களுள் பெருவாழ்வு வாழ்ந்தவர் அவர். அவருடைய

வாழ்விலும் உலகம் போற்றும் எளிமை விளங்கியது. இந்தியத் தலைநகராகிய தில்லி மாநகரில் அவர் பாடுபட்டுப் பெற்றுத்தந்த உரிமைத் திருநாள், சுதந்திரப் பெரு விழாவாகக் கொண்டாடப்பட்டது. ஆரவாரம் மிகுந்த அந்தப் பெருவிழாவில், நாட்டின் தந்தையாகிய அவர் கலந்து கொள்ளவில்லை. தலைநகரை விட்டு வங்காள மாநிலத்தில் ஒரு மூலைக்குச் சென்றார். எல்லோரும் தலைநகரில் கூடி மகிழ்ச்சியில் திளைத்த அந்நாளில் அவர், நவகாளிப் பகுதியில் ஊர் ஊராகத் தெருத் தெருவாக வீடு வீடாக நடந்து கொலை வெறி பிடித்த மனங்களில் அன்பை விதைக்க முயன்றார். கொடுமைகளுக்கு ஆளாகிக் கலங்கிய நெஞ்சங்களில் நம்பிக்கை ஊட்ட முயன்றார், காலில் செருப்பும் இடாமல் பல இடங்களிலும் தனியே நடந்து களைத்தார். ஓயாமல் நடந்து களைத்து நொந்த அவருடைய பாதங்களைக் கழுவி ஒத்தடம் கொடுக்க வெந்நீர் வைத்துக் கொண்டு வந்தார் அவருடன் இருந்தவர். அந்த வெந்நீரைப் பார்த்ததும் அடிகள் வருத்தமுற்றார், ''இந்த வெந்நீர் வைப்பதற்கு விறகு ஏது?'' என்று வருத்தத்தோடு கேட்டார். ''நடந்து களைத்த உங்கள் பாதங்களின் நோவை மாற்ற வெந்நீர் வைத்தேன்'' என்ற விடை வந்தது. காந்தி அடிகள் மேலும் வருந்தினர். ''இந்தக் கலவரத்திற்கு இடையே வறுமையால் வாடும் குடும்பங்கள் உணவுக்காக அடுப்புப் பற்றவைக்கும்விறகு இல்லாமல் தவிக்கிறார்கள். உணவு சமைப்பதற்கே விறகு இல்லாத குடும்பங்களுக்கு நடுவே இருக்கும் நமக்குக் கால்கள் கழுவுவதற்கு வெந்நீர் வேண்டுமா? விறகை அப்படிச் செலவிடலாமா?'' என்று உருகிய உள்ளத்தோடு அறிவுரை கூறினர்.

இந்த உலகமே கடவுளின் குடும்பம் என்றும், உயிர்கள் எல்லாம் உடன்பிறப்பு என்றும், உணர்ந்து தெளிந்த அருளாளரின் வாழ்க்கை இவ்வாறு தான் அமையும். "பிறப்பு அறுக்கலுற்றார்க்கு உடம்பும் மிகை" என்கின்றார் திருவள்ளுவர். அருள் வாழ்வு வாழ்ந்து முத்தி பெறுவதற்கும் உடம்பே மிகை என்று உணரும் அளவிற்கு மனம் மாறி விட்டால், அந்த உடம்பிற்காகப் பகட்டான பட்டும் பொன்னும் ஆடம்பர உணவும் தேடுவதற்கு மனம் வருமா? மானத்தை மறைக்கும் எளிய உடையும், உயிரைக் காக்கும் எளிய உணவுமே போதும் என்ற மனப்பான்மை, அத்தகைய அருளாளர்க்கு அமைந்து விடும். அதனால் வெந்நீரும் வேண்டாத எளிமை இயல்பாகி விடும்.

அத்தகைய அருள் நெறியை நூல்களில் படிப்பதும், போற்றுவதும் பலராலும் முடியும். அந்த நெறியில் நின்று அற வாழ்வு வாழ்வதற்கு ஒரு சிலரால்தான் முடியும். இராமலிங்க வள்ளலாரின் வாழ்வில் அத்தகைய அருள் நெஞ்சம் ஆற்றலுடன் அமைந்திருப்பதைக் காணலாம். 'வேண்டாமையே விழுச் செல்வம்' என்ற திருவள்ளுவரின் நெறி அவருக்கு இளமையிலேயே விளங்கி விட்டது. அதனால் சுவையான உணவும், உண்ண விரும்புவதற்குத் தயங்கினர். உடம்பு உயிரோடு வாழ்வதற்காகக் கீரை உணவு வேண்டும் என்று உணர்ந்தார். அந்தக் கீரை வெறுங் கீரையாக இருக்காமல் பருப்புடன் சமைத்த கீரையாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணினர். உடனே மனம் வருந்தினர். ''இறைவனே! வெறுங் கீரையை விரும்பாமல் பருப்போடு கலந்த கீரையை என் மனம் விரும்பி விட்டதே, வெறுந் தண்ணீரை விரும்பாமல் இளநீரை விரும்பி விட்டேனே, என்ன தவறு செய்தேன்'' என்று நொந்து முறையிட்டார்.

''கீரையே விரும்பேன் பருப்பொடு கலந்த
கீரையே விரும்பினேன்; வெறுந்தண்
நீரையே விரும்பேன் தெங்கிளங் காயின்
நீரையே விரும்பினேன்...''

என்று முறையிட்டார். முத்தி பெறுவதற்காகவும் உயிர் வாழ முயலாதவர் அவர். எப்பாரும் எப்பதமும் எங்கணும் சென்று இறைவனுடைய அருட்புகழை இயம்ப வேண்டும் என்றே, அவர் உயிர் வாழ விரும்பினர், அவ்வாறு சன்மார்க்கம் தழைக்கச் செய்வதற்காகவே உடம்போடு வாழ்ந்தார். அந்த உடம்பு நலம் பெற்று விளங்குவதற்காகவே உணவை விரும்பி உண்டார். ஆயினும் உணவை விரும்பிய மனம் எளிய உணவாக விரும்ப வில்லையே என்று நொந்தார். உடலுக்கான தேவைகளை இயன்ற அளவுக்குக் குறைத்து வாழவேண்டும் என்ற நோக்கமே அதற்குக் காரணம் ஆகும்,

''அப்பனே'' நான் உணவை விரும்புகின்றேன், ஆனாலும் உன் அருள்நெறியை விட்டு விலக மாட்டேன், இன்று மட்டும் அல்லாமல் என்றும் உன்னை அண்டியே இருப்பேன். உன் ஆணையாகச் சொல்கிறேன்'' என்று மேலும் முறையிடுகின்றார்,

''உண்டியே விழைந்தேன் எனினும் என்
உடையவா! அடியனேன் உனையே
அண்டியே இருந்தேன் இருக்கின்றேன் இருப்பேன்
அப்ப நின் ஆணை...''

ஆனால் இன்று கடவுளை வழிபடும் கோடிக் கணக்கான மக்களில் எத்தனை பேர் உடம்பும் மிகை என்று உணர்கிறார்கள்? கடவுள் பக்தர்களில் எத்தனை பேர் இன்று ஆடம்பரத்தை வெறுத்து எளிய வாழ்க்கை மேற் கொள்ளுகிறார்கள்? சுற்றுப் புறத்தார்க்கு இல்லாத சுக போகம் நமக்கு வேண்டா என்று ஒதுக்கும் மனப்பான்மை இன்று எத்தனை பேர்க்கு உள்ளது? கடவுளை அன்றாடம் வழிபடுவோர் பலர், மேலும் மேலும் ஆடம்பரத்தையே நாடி அலைகிறார்கள். கோயிலுக்குச் சென்று அருச்சனையும் அபிஷேகமும் செய்வோர் பலர், அக்கம் பக்கத்தார்க்குக் கிடைக்காத வைர நகைகளும் உல்லாச வாழ்வும் தமக்கு வேண்டும் என்றே கடவுளை வேண்டிக் கொள்கிறார்கள். பருப்பொடு கலந்த கீரையை நாடுவதற்குத் தயங்கும் அருள் நெஞ்சத்தைப்பற்றி எண்ணிப் பார்க்காமல், வெளியார்க்கு நல்ல அரிசி பருப்பு முதலியவை கிடைக்காதபடி பதுக்கி வைக்கும் வியாபாரிகளும் இருக்கிறார்கள். அவர்களும் கடவுள் வழிபாடு செய்கிறார்கள். கடவுளன்பு அவர்களுக்கு இல்லை என்று மறுக்க முடியாது. ஆடம்பரமான திருமணம் முதலியவை நடத்தி ஊரார் புகழப் பெருஞ் சடங்குகள் செய்து, வீண் பெருமை தேடிக் கொள்வோர்க்கு எளிய வாழ்வில் நாட்டம் வருமா? அவர்கள் பக்தி இல்லாதவர்கள் என்று சொல்ல முடியாது; அவர்களும் கடவுள் வழிபாடு செய்பவர்களே! ஆனால் இராமலிங்க வள்ளலார்போல், எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே ஒத்துரிமை உணரும் ஆத்திக உணர்வு - உண்மையான கடவுளுணர்வு - ஏற்படாத குறையை அவர்களிடம் காணலாம், அகிலமெல்லாம் ஒரு குடும்பம் போல் காத்து அளித்திடும் கடவுளின் அருளாட்சியை அவர்கள் உணரவில்லை, அதனால் ஐந்தாறு முப்பது என்று தெரியாமல் கண்மூடி உருப்போடும் சிறுவர்களின் மனநிலையில் அவர்கள் உள்ளனர்.

ஆனால் வள்ளலாரின் வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும், அருட்பாவின் ஒவ்வொரு பாடலையும் ஆராய்ந்தால், கடவுளை உணர்ந்து வழிபட்டுத் தெளிந்த தெளிவைக் காணலாம், ''ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்'' என்ற அவருடைய அருள் நெஞ்சத்தின் அடிப்படையாக விளங்கியது, இந்த உண்மைக் கடவுள் நெறி பற்றிய தெளிவே ஆகும்,

நாகை வட்டம் திருவாய்மூர் ஸ்ரீ தியாக ராஜ சுவாமி கோவிலில், தன்வந்தரி மருத்துவ இல்லத்தைத் தஞ்சைத் துணை ஆணையர் அவர்கள் திறந்து வைத்தல். (24—9—70)

சோதிலிங்கத் தலங்கள்

தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்,
தருமையாதீனம்.

இறைவன் அறிவுமயமாக, அறிவே உருவாக உள்ளவன். அறிவு ஒளிவடிவாக இருப்பது. ஆகவே, நம் ஆன்றோர்களும் சான்றோர்களும் சோதியாய் சுடராய் சூழொளி விளக்காய் இறைவனைக் கண்டு அநுபவித்தனர்: நமக்கும் அறிவித்துள்ளனர். ஆண்டவன், ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாய்த் தோன்றிய நிகழ்ச்சியைச் சிவ மகா புராணமும், ஏனைச் சிவ புராணங்களும் கூறுகின்றன. இங்ஙனம், இறைவன் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய இடமே திருவண்ணாமலை. அவ்வண்ணாமலை இன்னும் செம்மை நிறத்துடன் செம்மாந்திருப்பதே சிறந்த சான்று. இதே வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு விளங்குபவை தாம் துவாதச சோதிலிங்கத் தலங்கள், துவாதசம்-பன்னிரண்டு, பன்னிரண்டு தலங்கள் என்பது இதன் பொருளாம். சோமநாதம், மல்லிகார்ச்சுனம், உஜ்ஜைனி, மகாகாளம், ஓங்காரம், வைத்தியநாதம், பீமசங்கரம், இராமேசுவரம், நாகேசம், விசுவேசம், திரியம்பகம், கேதாரம், குசுமேசம் என்பன பன்னிரு சோதிலிங்கத் தலங்களாகும்.

(1) சோமநாதம் :

சௌராஷ்டிரம் எனப்படும் பம்பாய் நகரத்தை அடுத்த குஜராத் மாநிலத்தின் கத்தியவார்த் தீப கற்பத்தின் தென்கரையில் அமைந்த பட்டினமாக விளங்குவது சோமநாதம். பன்னிரு சோதிலிங்கத் தலங்களுள் முதன்மையாக வைத்து எண்ணப்படும் சிறப்பு மிக்கது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. மொகலாய மன்னர்களால் பதினறு முறை கொள்ளையிடப்பெற்றும், இக்காலத்தில் சர்தார் வல்லபாய் படேல் அவர்கள் முயற்சியால் கோடிக் கணக்கில் செலவுசெய்து திருப்பணி செய்யப்பெற்றுப் பொலிவுடன் திகழ்கிறது. இக்கோயில் கோட்டை வடிவில் அமைந்துள்ளது. இத்தலத்தை வழிபட்டோர் முற்பிறப்பை உணர்வர். பிரதான லிங்கம் பூமிக்கடியில் மறைவாக உள்ளது. இரண்யா முதலிய ஐந்து நதிகள் சோமநாதத்திற்கு அருகில் பாய்கின்றன. முத்தியளிக்கும் ஏழு தலங்களுள் முக்கியமானது இது.

சோமன் எனப்படும் சந்திரன் ரோகிணியிடம் மட்டும் அன்பு செலுத்தியதனுல் தட்சனுல் சாபம் பெற்றுன். சாப நீக்கம் பெறுவதற்குப் பிரமதேவன் கட்டளைப்படி இத்தலத்தின் சிவபெருமானைக் குறித்துப் பத்துக்கோடி முறை 'மிருத்யுஞ்சய' மந்திரத்தைச் செபித்தான். சிவபரம்பொருள் வெளிப்பட்டுச் சந்திரனுகிய சோமனுக்கு வளரவும் தேயவும் அருள் வழங்கினுர். சோமன் அருள் பெற்ற தலமாதலின் சோமநாதம் எனப்பெற்றது, சோமவாரத்தில் வரும் அமாவாசை இரவும், சிவராத்திரியும் இத்தல வழிபாட்டிற்குச் சிறந்த காலமாகக் கருதப்படுகின்றன,

(2) மல்லிகார்ச்சுனம் :

அர்ச்சுனம்-மருத மரம். குப்த பரம்பரையில் வந்த இளவரசி சந்திராவதி என்பவர் மல்லிகை மலர்கொண்டு இங்குள்ள இறைவனைப் பூசித்தமையாலும், அர்ச்சுன விருட்சம் (மருத மரம்) தல விருட்சமாக இருப்பதாலும், மல்லிகார்ச்சுனம் எனப்பெயர் பெற்றது இத்தலம். இது ஸ்ரீசைலம், மல்லிகார்ச்சுனம் எனவும்,

தேவாரத்துள் திருப்பருப்பதம் எனவும் வழங்கப்படுகிறது. இது பாரத நாட்டின் நடுவிடமாகிய ஆந்திர மாநிலத்தில் உள்ளது. மருத மரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட மூன்று தலங்களுள் இது வடக்கில் உள்ளது. தெற்கில் நெல்லை மாவட்டத்தில் புடார்ச்சுனமும் (திருப்புடை மருதூர்), தஞ்சை மாவட்டத்தில் இவ்விரண்டிற்கும் நடுவிலிருப்பதாகிய மத்தியார்ச்சுனமும் (திரு இடை மருதூர்) உள்ளன. சோதிலிங்கத் தலங்களுள் மூவர் தேவாரமும் பெற்ற சிறப்புடையதலம் இது. ஞானசம்பந்தர் 'சுடுமணி உமிழ் நாகம்' எனத் தொடங்கும் பதிகத்தாலும், நாவரசர் 'கன்றினர் புரங்கள் மூன்றும்' என்னும் பதிகத்தாலும், நாவலர் கோன் 'மானும் மரையினமும்' எனத் தொடங்கும் பதிகத்தாலும் போற்றி வழிபட்டு உள்ளனர்.

நந்தி எம்பெருமான் பர்வத (மலை) வடிவமாகிச் சிவபெருமானைத் தாங்குவதால் பருப்பதம் எனப்பெற்றது. உலகத்தை முதலில் சுற்றி வருபவருக்கே முதலில் திருமணம் என விநாயகருக்கும், முருகனுக்கும் பெருமானும் பிராட்டியும் ஒரு போட்டி யமைத்தனர். விநாயகர் அம்மையப்பரை 'அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்' என்ற கருத்தோடு இருவரையும் ஏழு முறை வலம் வந்து போட்டியில் வெற்றி பெற்றுச் சித்தி, புத்தி இருவரையும் திருமணம் புரிந்துகொண்டார். உலகம் முழுவதும் சுற்றிவந்த முருகன் விநாயகர் வெற்றியுற்றது கண்டு சினமுற்றவராய்க் கிரவுஞ்சகிரிக்குச் சென்று பிரம்மசாரியாய் வாழ்கிறார், தாய் தந்தையர் தேடிவந்தனர். வருவதை அறிந்த முருகன் மேலும், அப்பாற் செல்ல, தேவர்களின் வேண்டுகோட்படி மூன்று யோசனை தூரத்தில் தங்கினர். இவரைத் தேடிவந்த அம்மையப்பர் தங்கிய இடமே ஸ்ரீசைலம் என வழங்கப்படுகிறது. இது கயிலை மலைக்குச் சமமாக எண்ணப்படுகிறது. அமாவாசையில் சிவனும், பௌர்ணமியில் அம்மையும் குமரனைச் சென்று கண்டு மகிழ்கின்றனர் என்பது ஐதிகம். லிங்காயத்துக்களான வீரசைவர்கள் இத்தலத்தைப் பூகைலாசம் எனப் பெரிதும் போற்றுகின்றனர். இது கிருஷ்ணா நதிக்கரையருகில் உள்ளது.

(3) மகாகாளம் :

உஜ்ஜைனி என்னும் ஏழு மோட்சத் தலங்களுள் ஒன்றாகிய அவந்திகா எனப்படுவது, இது மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள சோதிலிங்கத் தலமாகும். இத்தலம் பண்டைக்காலத்தில் அமராவதி, அவந்திகா என வழங்கியது. மாளவ தேயத்தின் தலைநகர். விக்கிரமாதித்தனும், அவனுக்கு எதிரியாகிய சாலிவாகனனும் தோன்றிய இடம். இவ்விருவர் பெயராலும் சகாப்தங்கள் தோன்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது, காளிதாசர், தண்டி முதலிய புலவர்கள் வாழ்ந்த இடம். இரு காளி கோயில்கள் இங்கே சிறப்புறத் திகழ்கின்றன. மகா காளருடைய திருக்கோயில் சிப்ரா நதிக்கரையில் அமைந்துள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் கும்பமேளா இங்கேதான் நடக்கிறது.

அவந்தி தேசத்தில் வேதப்பிரியன் என்ற அந்தணனுடைய குமாரர்கள் நால்வரும், சிவ பூசைச் சிறப்பாலும் நல்லொழுக்கத்தாலும் அந்நாட்டை வளமுடைய தாக்கினர். அப்பொழுது, இரத்தினமாலா என்னும் மலையிலிருந்து வந்து தூஷணன் என்ற அரக்கன், எங்குமே நன்மை நடக்கவொட்டாது தடுத்தனன். பல ஊர்களிலும் உள்ள அந்தணர்கள் ஒன்றுகூடி வேதப் பிரியனின் குமாரர்களோடு சேர்ந்து, இவ்வரக்கனை அழிக்க இயலாது என்று கருதியவர்களாய் நாள்தோறும் பார்த்திவ பூசை செய்துவந்தனர். அவர்கள் நாள்தோறும் பூசை செய்வதற்கு மண் எடுத்த இடம் பெரிய குளமாக ஆயிற்று. அந்தணர்கள் யாவரும் பூசை புரிந்து தியானத்தில் இருக்கும் போது, தூஷணன் என்னும் அரக்கன் அவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினன். அப்பொழுது அக்குளத்தினின்றும் மகா காளேசுவரர் தோன்றி அரக்கரை அழித்து அமரர்களைக் காத்தார். அவர்கள் வேண்டுகோளின்படி சிப்ரா நதிக்கரையிலேயே பெருமான் எழுந்தருளினர்.

(4) ஓங்காரம் :

நர்மதா நதியும் காவேரி எனப்படும் நதியும் சங்கமமாகி ஓடிவரும் அமைப்பு ஓங்கார வடிவமாக உள்ளதால், இத்தலம் ஓங்காரம் எனப் பெற்றது. மத்தியப் பிரதேசத்தில் நர்மதை நதிக்கரையில் அமைந்துள்ளது. நர்மதா நதியில் பல நிறமுள்ள பாண லிங்கங்கள் கிடைக்கின்றன. கங்கையாற்றின் இடக் கரைமட்டுமே புனிதமானது என்பர். ஆனல் நர்மதையின் இரு கரைகளுமே புனிதமானவை யென்று கூறுவர். இப்புண்ணிய நதி, இத்தலத்தில் பிரணவ வடிவமாக ஓடுவது சிறப்பாகும். விநாயகர் ஐந்து முகத்துடன் காட்சி யளிக்கிருர். விந்தியமலே, மேருமலேபோல் சிறப்புற வேண்டி, நாரதர் சொற்படி சிவபூசை செய்யக் கருதி, ஓங்கார ரூபமாய் ஓர் எந்திரம் அமைத்துப் பார்த்திவலிங்க பூசை ஆறுமாத காலம் இயற்றி வரம் பெற்றது. இதுவே ஓங்காரேசுவரம் ஆயிற்று என்பர்.

(5) வைத்தியநாதம் :

இத்தலம் ஆந்திர மாநிலத்தில் (ஐதராபாத்) முற்காலத்திலிருந்தது. தற்போது மகாராஷ்டிர மாநிலத்தில் விளங்குகிறது. மாபெருந் தூண்களுடன் மர வேலேப்பாடு மிக்கதாகச் சிறந்து விளங்குவது இக்கோயில். தென்னுட்டில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள வைத்தியநாதர் ஆலயத்தைப்போலவே முடி இறக்குதல், மாவிளக்குப் போடுதல் முதலிய பிரார்த்தனேகளே மக்கள் இங்கே நிகழ்த்துகின்றனர். சாமகானம் இசைத்துச் சிவனருள் பெற்ற இராவணன், அவரிடமிருந்து ஆத்மலிங்கத்தைப் பெற்று இலங்கைக்கு எடுத்துச்செல்ல முற்பட்டான். இயலாமையினல் சிவபெருமானிடம் முறையிட, அதனே அவர் இரு பிளப்பாக்கிக் காவடியில் வைத்துச் செல்ல அருளினுர். அவ்வாறு தூக்கிச்சென்ற இராவணன் இத்தலத்திற்கு வந்தவுடன், சிறுநீர் கழிக்க வேண்டி யிருந்ததால், அருகில் நின்ற சிறுவனிடம் காவடியைக் கொடுக்க, சிறுவனுக வந்த விநாயகர் காவடியைக் கீழே வைத்து மறைந்தார். முற்பகுதிப் பிளப்பு கோகரணத் தலமாகவும், பிற்பகுதிப் பிளப்பு இத்தலமாகவும் விளங்கலாயின.

(6) பீமசங்கரம் :

இத்தலம் மகாராஷ்டிர மாநிலத்தில் பம்பாயிலிருந்து 60 கல் தொலேவில் உள்ளது. காட்டின் நடுவிடத்தில் உள்ளது. ஆலயம் இப்போது சிறிது சிதைந்துள்ள நிலேயில் காணப்படுகிறது, ஆலயம் சிறியது. பீமாநதி இவ்வாலயத்தின் அருகில் உற்பத்தியாகிறது. இங்கே இலிங்கமூர்த்தி ஒரு முழ உயரத்தில் காட்சி தருகிருர். கும்பகர்ணனுக்கும் கற்கடி என்ற அரக்கிக்கும் பிறந்த பீமன் என்ற அசுரன், பிரியதர்மன் என்ற அரசனின் சிவபூசையைத் தடுத்து அவனேக் கொல்ல முயன்றபோது, சிவபெருமான் அவ்வரசன் பூசித்த மண்ணுலாகிய சிவலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, பீமனேச் சங்கரித்து, தேவர் வேண்டுகோட்கிணங்கிச் சாந்தமூர்த்தியாகப் பீமசங்கரர் என்ற பெயரில் விளங்குகிருர். பீமனேச் சங்கரித்ததால் பீமசங்கரம் என்ற பெயர் பெற்றது இத்தலம்.

(7) இராமேசுவரம் :

தமிழ்நாட்டின் தென் பகுதியில் வங்கக் கடலில் அமைந்த ஒரு சிறு தீவாக உள்ளது இத்தலம். கடல் நீராட்டு இத்தலத்திற் சிறப்பு மிக்கது. ஆலயத்துள் பதினுன்கு நீர்த்தேக்கங்களுக்குமேல் உள்ளன. எல்லாவற்றிலும் கோடி தீர்த்தம் மிக்க சிறப்பு வாய்ந்தது. காசி யாத்திரை செய்தவர்கள், இராமேசுவர யாத்திரை செய்தால்தான் யாத்திரை நிறைவு பெற்றுப் பயனடைகின்றனர் என்பது ஐதிகம். தமிழ்நாட்டிலுள்ள சோதிலிங்கத்தலம் இது ஒன்றே என்பது குறிப்பிடத்தக்கது ஞானசம்பந்தரும், நாவரசரும் பாடியுள்ள நன்மை மிக்க தலம். ஆலயம் மிகப் பெரியது. உலகிலேயே மிகப் பெரிய பிராகாரத்தை உடையது. இராவணனேக் கொன்று பழி நீங்குவதற்குக் கழுவாயாக இராமன் மணலால் சிவலிங்கம் அமைத்து வழிபட்ட சிறப்புடைமையின் இராமேசுவரம் எனப் பெயர் பெற்றது. இராவணனே அழிப்பதற்கு முன்பு அவனே அழிப்பதற்காகவே இங்குள்ள இறைவனே இராமன் வழிபட்டு அருள் பெற்றுர் என்பதும் மற்ருெரு வரலாருகும்.

(8) நாகேசம் :

மகாராட்டிர மாநிலத்தில் கோண்டி ரெயில் நிலேயத்திலிருந்து 14 கல் தொலேவி

லுள்ளது நாகேசமென்னும் இத்தலம். சிவலிங்கத்தின் கோமுகம் கிழக்கு முகமாக இத் தலத்தில் திரும்பியுள்ளது. நாமதேவ சுவாமி களின் பெருமையை வெளிப்படுத்துவதற்காகச் சிவபிரான் இவ்வாறு திரும்பியுள்ளார் என்பது ஐதிகம். சிவலிங்கம் ஒரு மலைக் குகைக்குள் இடம் பெற்றுள்ளது. மோகினி வடிவங் கொண்ட திருமாலும், பிட்சாடனர் வடிவங் கொண்ட சிவபெருமானும், தாருகா வனம் சென்ற வரலாறு இத்தலத்தோடு தொடர்பு படுத்திப் பேசப்படுகிறது. அயோத் திக்கருகிலுள்ள சரயூ நதிக்கரையில் நாகேசு வரர் என்ற பெயரோடு ஒரு சிவலிங்கம் உண்டு. இதனையே நாகேசம் எனச் சிலர் கூறுவர். ஆனால், வரலாற்றுப்படி ஔண்டாவில் உள்ள சிவலிங்கமே சோதிலிங்கம் என உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

(9) விசுவேசம் :

வருணை, அசி என்ற இரு நதிகளின் சங்கமத்திற்கு இடையில் உள்ளதால் இத்தலம் வாரணாசி எனப்பட்டது. கர்மங் களைப் போக்குவதாலும், சிவஞானத்தால் உயிர்கள் ஒளிபெறுவதாலும், காசி எனவும் இது பெயர் பெற்றது. இது உத்தரப் பிர தேசத்தில் அமைந்துள்ளது. முத்தி தரும் தலங்களில் இதுவும் ஒன்று. கங்கை இத் தலத் தில் உத்தரவாகினியாக (வடக்கு நோக்கி)ச் செல்கிறது. இவ்வாறு செல்வது சிறப்புடைய தாகும். கங்கையின் மேற்குக் கரையில் விசுவ நாதர் ஆலயமும், கேதாரநாதர் ஆலயமும் சிறப்புடையவை. வருணை அசி என்ற இரு நதிக்கும் இடையில் 64 தீர்த்தக் கட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் மனிகர்ணிகா கட்டம் மிகச் சிறந்துள்ளது. அன்னபூரணி, விசாலாட்சி, காலபைரவர், துண்டிராஜ கணபதி முதலிய மூர்த்திகட்குத் தனித்தனிக் கோயில்கள் உள்ளன. இத்தலத்தில் இறப்ப வர்கள் முத்தி பெறுவர் என்பது வரலாறு.

(10) திரியம்பகம் :

மகாராஷ்டிர மாநிலத்தில் நாசிக்கி லிருந்து தென் கிழக்கில் 18 கல் தொலை வில் உள்ளது இத்தலம். பிரமகிரி என்ற மலையைச் சார்ந்துள்ளது இத் தலம். இம் மலையில் கோதாவரி, அகல்யா, வைதர்ணு, மேற்கு நோக்கிச் செல்லும் கங்கை ஆகியவை உற்பத்தியாகின்றன. அங்குள்ள காட்டில் மூன்று லிங்கங்கள் மூன்று கண்போல் உள்ளன. இதனால் திரியம்பகம் எனப் பெயர் வந்த தென்பர். பிரமன் சிவபெருமானின் திருமுடி யைக் கண்டதாகப் பொய் உரைத்ததால், அவனை மலையாகுமாறு சபித்தார் பெருமான். பிரமனது தவத்திற்கு இரங்கிப் பேத பாவனை யின்றிப் பிரமகிரியில் இருப்பதாக அருள் பாலித்தார். இது காரணமாகவே இம்மலைக்குப் பிரமகிரி எனப்பெயர் வந்ததென்பர். அஷ்ட பைரவர் முதலிய திருவுருவங்கள் இங்கே உள்ளன. மாக்கல்லாலான லிங்கத்திற்குரிய பீடம் மட்டுமே உள்ளது. பீடத்தின் நடுவில் ஒரு சிறு செம்பு கொள்ளக் கூடியதாக ஒரு குழி உண்டு: இதனுள் மூன்று சிவலிங்க வடி வங்கள் இருக்கின்றன. இக்குழியிலிருந்து கங்கை வெளிப்படுகிறது.

(11) கேதாரம் :

உத்தரப் பிரதேசத்தில் இமயமலை யில் உள்ளது திருக்கேதாரம். தெற்கு நோக்கிய சந்நிதி. திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகிய இருவராலும் பாடப் பெற்ற சிறப்புடையது. அரித்துவாரம் வழியாக ருத்திரப் பிரயாகை வரை நடந்து செல்ல வேண்டும். குப்த காசிவரை பேருந்துகளில் செல்லலாம். கேதாரம் செல்லும் வழியில் இந்திர நீல பருப்பதம், அநேகதங்காவதம் ஆகிய பாடல் பெற்ற தலங்களையும் தரிசிக்க லாம். 'கேதார' என்னும் சொல் சிவபெரு மான் கங்காதேவியை முடியில் வைத்திருக் கிறான் என்பதை உணர்த்தும். கேதார நாதர் ஆலயம், கடல் மட்டத்திலிருந்து 11, 750அடி உயரத்தில் உள்ளது, இங்குள்ள விஷ்ணுவைத் தரிசித்தால் பதரியிலுள்ள நாராயணனைத் தரிசித்த பலன் உண்டு. திருமால் நரநாராயண வடிவத்தில் இருந்து பார்த்திவ லிங்கத்தில் சிவபெருமானைப் பூசித்து, 'கேதார மலையில் தேவரீர் எழுந்தருளியிருக்க வேண்டும்' என்ற பிரார்த்தனைக்கு இணங்கச் சுவாமி இங்கு எழுந் தருளியுள்ளார் என்பது ஐதிகம். கேதார

நாதர் ஏப்ரல் முதல் செப்டம்பர் முடிய மனிதர்களால் பூசிக்கப்படுகிறுர். அக்டோபர் முதல் மார்ச்சு முடியப் பனியால் மூடப்பட்ட நிலையில் சிவபெருமானுக்குத் தேவ பூசை நிகழுகிறது.

(12) குசுமேசம் :

ஆந்திர மாநிலத்தில் ஔரங்கபாத்தில் இறங்கி இத்தலத்திற்குச் செல்லவேண்டும். சுதர்மன் என்ற அந்தணனின் மனைவியான குசுமையின் பெயரால் இறைவன் குசுமேசுவரன் எனப் பெயர் பெற்ருன். இங்குள்ள சிவலிங்கம் செந்நிறம் உள்ளதாகக் காட்சி அளிக்கிறது. அம்பிகை குங்குமப் பூவால் வழிபட்ட சிறப்புடையது. சுதர்மனின் இரண்டாவது மனைவியான குசுமையின் புத்திரன் கொலை செய்யப்பட்டபோது, அவள் பூசைக்கிரங்கி இறைவன் அவளுக்கு மகனை எழுப்பியருளிய சிறப்புடையது. பின்னே சொல்லப்பட்ட இரண்டு சோதிலிங்கத் தலங்களிலும் உள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், சகல பாவங்களையும் போக்கி, மனத்திற்கு அமைதியை அளித்து வீட்டுலகையும் நல்கும். இங்குள்ள இலிங்கங்களின் பெயர்களை நாடோறும் காலையில் நினைத்த மாத்திரத்தே பாபம் அகன்று நினைத்த செயல் நிறைவேறும் என்பது ஆன்ருேர் துணிபு.



காஞ்சிபுரம் ஸ்ரீ தேவராசசுவாமி தேவஸ்தானத்தில் கட்டப்பெறவுள்ள ஸ்ரீ பெருந்தேவித்தாயார் நிலையத்திற்கு, காஞ்சிபுரம் நகர மன்றத் தலைவர் திரு. கே. டி. எஸ். மணி அவர்கள் தலைமையில் நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா, பி. எ. அவர்கள் அடிக்கல் நாட்டுதல், *(19—11—70)*

திருவரங்கம் கோயில்

(முற்றொடர்ச்சி)

ந. ரா. முருகவேள் M. A., M O. L.

(கோயிலின் ஆட்சி நடைமுறை, வரலாற்றுப் பின்னணி)

மேலே குறிப்பிட்டபடி, தென்னிந்தியப் பெருங் கோயில்கள் சமய நிலையங்களாகமட்டும் இல்லாமல், பண்பாட்டு நிறுவனங்களாகவும் விளங்கின; அவைகள் அறிவு வளர்க்கும் நிலையங்களாகத் திகழ்ந்தன. சமுதாய வாழ்க்கைத்துறையிலும், கலையியல் வாழ்க்கைத் துறையிலும், அவைகள் மிகவும் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தன; இந்தியத் தத்துவ வளர்ச்சியில் அவைகள் மிகப் பெரிய பங்கு பெற்று இயங்கி வந்தன.

தம்முடைய சொந்த வளர்ச்சிகளைப் பெருக்கிக் கொள்ளவும் தம்முடைய பணி இயக்கத்தை நடத்தி வரவும், பலதரப்பட்ட பெருவாரியான மக்களைத் தொண்டுகளில் ஈடுபடுத்துவது, அவற்றிற்கு மிகவும் இன்றியமையாத தொன்று ஆயிற்று. அவர்களுள் சிலர் தாமாகவே முன்வந்தும், மற்றும் சிலர் ஊதியம் பெற்றும் பணி புரிந்தனர். அவர்கள் எல்லோரும் சேர்ந்து கல்வியைப் பரப்பவும், கோயிலைச் செழிப்பான சிறந்த நிலையில் வைத்திருக்கவும், கோயிலைப் பலப்படுத்துவதற்குரிய ஆட்சியின் அமைப்பை மென்மையான நன்முறையில் இயக்கி உறுதிப் படுத்தவும், கோயிலுக்கு அளிக்கப்பெற்ற பல்வேறு சொத்துடைமைகளைத் திறம்பட நடத்தவும், வெவ்வேறான பணியாளர்கள் எல்லோருடையவும் வேலை பயிற்சி வாழ்க்கை நலம் ஆகியவற்றை மேற்பார்க்கவும், பெரிதும் துணை செய்தனர். இவ்வாற்றால் கோயிலின் நடைமுறை ஆட்சியானது எத்தனையோ பல வகையான சிக்கல்களை உட்கொண்டிருந்தது. ஓர் உண்மையான செயலாட்சி ஒழுங்குமுறை இதற்குத் தேவையாக இருந்தது; அஃது அவ்வப்போது பல சிக்கல்களை உடையதாக இருந்தது. அவற்றைத் தவிர்ப்பதற்கு எல்லா நிலைகளிலும் முதன்மையான செயற்றிறம் வேண்டியிருந்தது. மூலத் தானத்திலும் பிற சந்நிதிகளிலும் வழிபடப் பெறுகின்ற கடவுள் அல்லது கடவுளரின் கைங்கரியத்திற்கு உரிய தேர்ச்சியும் செயற்றிறமும்கூட இதில் உள்ளடங்கி இருந்தன. கோயில் உள்துறைப் பணியாளர் குழு மட்டுமேயன்றி, யாத்திரிகர்கள், மூலத்தானத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள், வேலைக்காரர்கள், கோயிற் பணியாற்றும் கைவினைக் கம்மியர்கள் இசைவாணர்கள் பாடுநர் ஆடுநர் ஆகிய அனைவரையும் ஒருசேரத் தழுவியதாக விளங்கியது.

கோயிலின் ஆட்சி நடைமுறையானது பலவகைப்பட்ட அமைப்புக்களையுடைய ஓர் பேரவையினரிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. அதன் உறுப்பினர்கள் சிலர் மதிப்பியற் பதவிகளுக்கும், மற்றும் சிலர் பரம்பரை அலுவல்களுக்கும் நியமிக்கப் பெற்றிருந்தனர். வேறு சிலர் கிராம சபையாலும், வணிகர் குழுவாலும்

---

* திருவரங்கம் கோயிலைப்பற்றிய இக் கட்டுரை, யுனெஸ்கோ நிறுவனத்தின் ஆதரவில் Miss Jeannine Auboyer என்னும் ஃபிரான்சு நாட்டு அம்மையார் அவர்கள் எழுதியுள்ள ஆங்கில நூலின் தமிழாக்கம் ஆகும்.

—ஆசிரியர்.

கோயில் அர்ச்சகர்களாலும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். எப்போதேனும் சில சமயங்களில், அமைதியான காலங்களில் படைத் துறையினர் பொறுப்பு ஏற்றனர். இச் செயல்களில் ஒன்றிற் கும் ஊதியம் அளிக்கப்படவில்லை.

இப்பேரவையில், செயலியல் அடிப்படை முதன்மையுடையதாய் அமைந்து இருந்தது. கோயில் அர்ச்சகர்கள் கருவூலர்கள் கணக்கர்கள் மற்றும் கோயிலின் நடைமுறை ஆட்சியில் பங்குகொள்ளும் ஊழியர்கள் ஆகிய அனைவரை யும், அப் பேரவை தன்னோடு இணைத்துக் கொண்டது. அதன் ஆய்வுக் கூட்டங்களில் அரசு அலுவலர்கள் வருகை தந்து இருந்தனர்.

பணியாளர்களின் பலதிறப்பட்ட படிநிலை யில் உள்ளவர்களுக்கு வழங்குதற்குரிய ஊதி யத்தை ஆய்ந்து முடிவு செய்வதற்குங்கூட, இவ்விணைப்பு முறை மேற்கொள்ளப்பெற்றது. கிராம சபை, பிராமணர்கள், திவ்வியப் பிர பந்தம் ஓதுவோர், கோயில் அலுவலர்கள் ஆகி யோர், இதுபற்றித் தொடர்புடைய பலரையும் அழைத்து, அவர்களும் கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பளித்து, அவர்களின் முன்னிலையிற் கலந்து பேசி முடிவெடுத்தனர். சாதி வேறுபாடு பற்றிச் சிறிதும் கருதாமல் தனி மனிதரின் பொறுப்புக்கும் திறமைக்கும் ஏற்ப ஊதிய அளவுகள் படிமுறையில் வகுக்கப்பெற்றன. ஒரு பெரிய கோயிலின் பணியாளர் குழு பெரிய தாக இருந்தது. அதன் பட்டியல், அவர்களிட மிருந்து எதிர்பார்க்கப்பெற்ற கைங்கரியங் களின் வகையினைப்பற்றிய சிறப்புமிக்க குறிப் பினைச் செவ்விதிற் புலப்படுகின்றது. முதலாவ தாக, கருவூலர்களையும் கணக்கர்களையும் உள் அடக்கிய ஆட்சியாளர்கள் இருந்தனர்; அவர் கள் ஒரு முதன்மையான இன்றியமையாத நிலையில் பணியாற்றினர். கருவூலர்கள் கோயி லின் கருவூலத்தை மேற்பார்த்து வந்தனர். கணக்கர்கள் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்ளுவதற்குப் பொறுப்பாளர்களாக விளங் கினர். அவர்கள் உரிய வரிகளை வசூலித்தும், வேலையாளர்களுக்கும், கம்மியர்களுக்கும் அனு மதிக்கப்பெற்ற படித்தரங்களைப் பணமாகவோ தானியமாகவோ வழங்கியும் வந்தனர். இக் கணக்கர்கள் கிராம சபைகளால் தேர்ந்தெடுக் கப்பெற்றனர்.

பணியாளர் குழுவில் பிராமணர்களும் உதவியாளர்களும்கூட இருந்தனர். அவர்கள் நித்திய நைமித்திகப் பூசைகளைச் செய்து வந்த னர். தனிச் சிறப்பாக, கடவுள் அல்லது கடவுள ரின் திருமஞ்சனம், நித்திய பூசை ஊசல்விழா முதலியவற்றிற்கு உரியவர்கள் இருந்தனர். சுவாமிக்குத் திருமஞ்சன நீரை உரிய பாத்திரங் களில் கொணர்வதற்கும், குடைகள் பிடிப்பதற் கும், உதவியாளர்கள் பொறுப்புடையவர்களாக விளங்கினர். சுவாமிக்கு உரிய நிவேதனத்தைச் செய்யும் திருமடைப்பள்ளியாளர்களும், இவ் உதவியாளர் பட்டியலில் சேர்ந்தவரேயாவர்.

நித்திய நைமித்திக பூசைகளிற் கலந்து கொள்ளுபவர்களுள், இசைவாணர்கள் கூத்தர் கள் நடனமகளிர் அடங்கிய தொகுதியும் சேர்ந்ததாகும். இத் தொகுதியில் வடமொழி வேதங்களை ஓதுபவர்களும், தென்றமிழ் மறை களைப் பாடுபவர்களும், பலவகை வாத்தியங் களை வாசிப்பவர்களும் இடம் பெற்றிருந்தனர். நடனமகளிரின் எண்ணிக்கை, பெரும்பாலும் மிக அதிகமாக இருந்தது- இராஜ ராஜ சோழன் அமைத்த தஞ்சைப் பெரிய கோயிலில்மட்டுமே, நானூறு நடன மகளிர் இருந்தனர். முதன்மை யான விழாக்களில் கூத்தர்கள் பங்குபெற்றனர். மிக முக்கியமான ஆண்டின் பெருவிழா நிகழ்ச்சி களுள், ஒரு கோயிலில் ஒரு குறிப்பிட்ட காலத் தில், அவர்கள் தங்கள் கலை நிகழ்ச்சிகளை நிகழ்த் தினர். ஆண்டில் மற்றைய காலங்களில் வேறு இடங்களில் எங்கேனும், அவர்கள் தமது கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவதற்கு உரிமை பெற்றிருந்தனர்.

மேற்குறித்த அலுவலர்களுக்கு மேலும், கோயில் வழிபாட்டில் தொடர்புடையவர்கள் வேறு சிலரும் இருந்தனர். கோயிலுக்கு ஊழியம் செய்யும் கைவினைஞர்களும் கலைஞர்களும் அவ் வகையைச் சேர்ந்தவராவர். நாள்தோறும் பயன்படுத்திப் பிறகு உடனே உடைக்கப் பெறும் மட்பாண்டங்களைச் செய்யக் குயவர் களும், நிலையாகப் பயன்படும் செப்புப் பாத்தி ரங்களைச் செய்யும் கன்னார்களும், கடவுளரின் ஆடைகளைத் தூய்மைப்படுத்த வண்ணார்களும், கோயிற் பிராமணர்களுக்கும் யாத்திரிகர்களுக் கும் குறிப்பாகச் சவச் சடங்குகளில் முடிகளைய நாவிதர்களும், நியமிக்கப் பெற்றிருந்தனர்.

கடவுளரின் உடைகளையும், பூசை செய்யும் அருச்சகர்களின் உடைகளையும் கவனித்துக் கொள்ளத் தையற்காரர்களும், கடவுளரின் நகைகளையும் அணிகலன்களையும் புதிது புனையவும் பழுதுபார்க்கவும் பொற்கொல்லர்களும், வாகனம் தேர் முதலியன செய்வதற்குத் தச்சர்களும் கோயில்களில் இருந்துவந்தனர்.

மற்றும் கோயிற் பணியாளர் குழுவிற் கோயிலைக் காவல் புரியும் சேவகர்களும், அதனை நன்னிலையில் போற்றிவரும் பாதுகாவலர்களும் இருந்தனர். கோயிலுக்குப் புறம்பேயுள்ள கட்டிடங்களையும், பல்வேறு இடங்களில் சிதறிக்கிடந்த நில புலன்களையும் காக்கும் பொறுப்பு இவர்கள்பால் இருந்தது. கிராம சபையால் இவர்கள் நேரடியாக நியமிக்கவும் ஊதியமளிக்கவும் பெற்றனர்.

இறைவன் திருவுலா எழுந்தருளும் திருவீதிகளில் தண்ணீர் தெளிக்கவும், இறைவனுக்குச் சாத்துதற்குரிய அருச்சனை மலர்கள் தயாரிக்கவும், வகை வகையான பூமாலைகள் கட்டவும், திருவுலாக் காலங்களில் அவற்றை ஏந்தவும், இருந்த பணியாளர்கள் பலரையும் பற்றிக்கூட இங்குக் குறிப்பிடுதல் வேண்டும்.

கோயில்களின் முதன்மையான அலுவலர்களுள், கோயிலைச் சார்ந்திருந்த ஆசிரியர் குழு உறுப்பினர்களும் உள்ளடங்கியவராவர். ஆசிரியர்களும் அவர்களின் உதவியாளர்களுமே மிக உயர்ந்த ஊதியம் பெற்றனர். கோயிற் கல்லூரி அல்லது கல்லூரிகளில் போதிய அளவு கணிசமான எண்ணிக்கையுள்ள மாணவர்கள் இருந்தனர். ஒரு கல்லூரிக்கும், மற்றொரு கல்லூரிக்கும் இடையே மாணவர்களின் எண்ணிக்கை சிறிது சிறிது வேறுபட்டது.

கோயிலைச் சார்ந்த ஒரு மருத்துவப் பணியமைப்பும் கூட இருந்தது. அது பொதுவாக ஒரு மருத்துவர், ஓர் அறுவையர், ஓர் உதவியாளர், பல செவிலியர்கள் ஆகியோரைக் கொண்டிருந்தது. கல்லூரிகளில் வசித்துக் கொண்டிருப்பவர்களுக்கும், கோயிலில் பணிபுரியும் பொறுப்புள்ள அர்ச்சகர்களுக்கும் பயன்படும்படி. அதன்கண் 15 படுக்கைகள் ஏற்பாடு செய்யப்பெற்றன. ஏராளமான மருத்துவப் பொருள் தொகுதிகள் அம் மருத்துவச் சாலையில் தொகுத்து வைக்கப்பெற்றன.

பெரும்பாலான இப்பதவிகள், பொதுவாகப் பரம்பரையாக வந்தன. ஆனால் தண்ணீர் தெளிப்போர், திரு அலகிடுவோர், காவல் புரிவோர் முதலியவர்களுக்குத் தனிச் சிறப்பான திறமையும் பயிற்சியும் தேவைப்படாமையால், அவர்களைத் தவிர்த்த ஏனைய பதவியாளர்கள் அனைவரும், தத்தமக்குரிய துறைகளில் மிகவும் உயரிய தகுதிப்பாடுகளைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாக இருந்தது. வழிபாட்டுக் கிரியைகள் புரிவதற்கு நம்பிகள் என்போர் மட்டுமே தெரிந்தெடுக்கப்பெற்றனர். அவர்கள் தொன்றுதொட்டு வரும் சைவாகமங்கள் அல்லது வைஷ்ணவ சம்ஹிதைகள் முதலியன போன்ற பல தாந்திரிகத்திரங்களிலும், பயின்று இருத்தல் வேண்டும். இவ்வாறே ஒரு புதிய கோயில் கட்டப்படும் பொழுது, ஏற்கெனவே வேறு ஒரு கோயிலில் நல்ல அனுபவம் பெற்றுள்ள தொழிலாளர்கள் அழைக்கப்படுவர்.

அலுவல் எதுவாயினும், அந்தந்தத் துறைகளில் தனிப்பெரும் பயிற்சித் திறனைப் பெற்றிருத்தல் ஒரு முதன்மையான நிபந்தனையாக இருந்தது. உதாரணமாக, கோயிலின் ஒரு பதவிக்குக் குறிப்பிட்ட ஒருவரைக் கிராம சபை பரிந்துரை செய்யுமாயின், அவர் தம் தொழிலில் தேர்ச்சி மிக்கவராக இல்லையாயின், தேர்ச்சி பெற்ற வேறு ஒருவரை ஊதியம் கொடுத்து அவர் தமக்குப் பதிலாகப் பணியாற்ற அமர்த்தலாம். அங்ஙனம் பதிலிகள் அமர்த்தப்படுங்கால் பணியாளர்களின் புதல்வர்கள் அல்லது நெருங்கிய உறவினர்களுக்கு முதன்மை கொடுக்கப்படும். ஓர் அலுவலர் இறந்து போனாலோ அல்லது தமது பணியை விடுத்து வேற்றிடம் சென்றுவிட்டாலோ, அல்லது நீண்ட காலமாக வராமலிருந்தாலோ, பரம்பரைச் சட்டம் செயற்படும். அப்போது அப்பணியாளருக்குப் பதில், அவர் தம் மரபுவழி உரிமையர் போதிய தகுதிகளைப் பெற்றிருந்தால், நியமிக்கப் பெறுவர். அதன்படி அவர் அப்பணியாளரின் மூத்த மகனாகவோ, மருமகனாகவோ, உடன் பிறந்தாரின் மூத்த மகனாகவோ அல்லது மிக நெருங்கிய உறவினராகவோ இருக்கலாம்.

48688
600 008.

சில பணியாளர்கள், உதாரணமாக, நடன மகளிர் கோயிலில் தமக்கென ஊதியப்பங்கு பெறுவர். அவர்களில் சிலர் முக்கால் பங்கு பாகம் பெறுவர். ஏனையோர் கால்பாகம் ஒன்றே பெறுவர். இந்தப் பங்குகள் அவர்களுடைய சொத்துரிமையில் ஒரு பகுதியாகும். அதனுல் அது தமது மரபுரிமையர்களுக்கும், பிற்சந்ததியினருக்கும் உரியதாக மாற்றி அளிக்கப்படலாம். எல்லோருமே இதற்கு உரிமை பெற்றவர்கள் அல்லர். பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தின் அளவு, ஒரு கோயிலுக்கும் மற்ருெரு கோயிலுக்கும் வேறுபட்டிருந்தது. பொதுவாக ஊதியங்கள் பொன் நாணயங்களாகவோ, தானிய வகைகளாகவோ வழங்கப்பெற்றன. பாகங்களைப்போலவே இவ் ஊதியங்களும் அலுவலரின் இறப்பிற்குப் பிறகு அவர் தம் குடும்பங்களுச்கு அளிக்கப்பெற்றன. ஆனுல் அக்குடும்பத்தின் உறுப்பினர்கள் கோயிலிலோ, அல்லது அதற்குப் புறம்பேயுள்ள கட்டிடங்களிலோ தொடர்ந்து பணியாற்றி வருபவர்களாக இருத்தல் வேண்டும்.

தற்காலிகப் பணியாளர்களை விட, கோயிலுக்கு வாழ்நாள் முழுவதும் நிரந்தரச்சேவை செய்வதாகச் சூளுரைத்துத் தம்மை ஒப்படைத்துக்கொண்டவர்கள், மிகுதியான ஊதியம் பெற்றனர். சில பணியாளர்கள் கூடுதல் ஊதியங்கள் பெற்றிருந்தனர். உதாரணமாகத் திருமடைப்பள்ளியர், மெய்காவலர், மற்றும் பிறர், ஒரு குறிப்பிட்ட அளவு சாதம் காய்கறி வகைகள் வெண்ணெய் முதலிய உணவுப் பொருள்கள் பெறுவர். கிராம சபையின்மூலம் நேரடியாகவே ஊதியம் பெறும் காவலர்கள், கிராம மக்களிடமிருந்து ஆண்டுக்கு ஒரு முறை எத்தகைய குறைப்பும் இன்றித் தமக்குரிய தினப் படியை ஒரு சேர அளிக்கப்பெறுவர். இயல் பாக ஊதியம் என்பது, ஆண்டிற்கு ஒரு முறை அளிக்கப்பெறும். அது பெரும்பாலும் பணி ஒப்பந்தம் ஏற்பட்டபொழுது வரையறுக்கப் பெற்றபடி பலவகைத் தானியங்களாகவோ, அல்லது அறுவடை நிலையின் அளவுக்கு ஏற்ற படியோ, வழங்கப்படும். அவற்றுடன் பணியாளர்களின் துணிமணி வகைகளுக்காக, ஒரு சில பொற்காசுகளும் வழங்கப்படுவது உண்டு. வேதாந்தம் மீமாம்சம் வியாகரணம் என்பவற்றைக் கற்பிப்பவர்கள் தவிர, ஏனைய ஆசிரியர்கள்மட்டும் தம்முடைய ஒவ்வொரு தொழில் நிலைப் போக்கு அல்லது ஆராய்ச்சிகளுக்கு ஏற்பப் பொன் நாணயங்களை ஊதியமாக வழங்கப் பெறுவர்.

கோயிற் பணியாளர்களால் அனுபவிக்கப் பெற்ற நன்மைகளுள், வீட்டு வசதிகள் வழங்கப் பெற்றமை, குறிப்பிடத்தக்கனவாகும். அதுபற்றிக் கல்வெட்டுகளில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளன. இராஜ ராஜசோழன் தஞ்சாவூரில் ஒரு பெரிய குடியிருப்பையே அமைத்தான். அக் கோயிலின் நானூறு நடன மாதர்களில், ஒவ்வொருவருக்கும் தனித் தனியான வீடுகள் வழங்கினுன். இதனைக் கூறுகின்ற கல்வெட்டு, அவ் வீடுகளின் உரிமையாளர் பெயர்கள், முறையே அவரவர்க்குரிய வீட்டின் எண்கள், அங்ஙனம் அவை அமைக்கப் பெற்ற தெருக்களின் பெயர்கள் ஆகியவற்றைப் பதிவு செய்துள்ளது. மற்றும் பலவகை நிலையினரான அலுவலர்களும் இத்தகைய நன்மைகளைப் பெற்றிருந்தனர்.

எத்தகைய திண்ணமான முடிவுகளுக்கும் வரவிரும்பி முயலாமல், ஊதிய அலுவல்களின் படிநிலை அமைப்பை, ஓரளவு குறிக்கும் வகையில், ஒரு விளக்க அட்டவணை கீழே தரப்பெறுகின்றது.

ஊழியர்களுக்கு ஊதியமும் வீட்டு வசதியும் அளிப்பது மட்டுமேயன்றி, கோயிலானது தனது பணியாளர்களுக்குப் பஞ்சகாலத்திலும் அல்லது அவர்களுக்கு ஏதேனும் எதிர்பாராத இடுக்கண்கள் ஏற்பட்டபோதும், மிகவும்தேவை ஏற்பட்ட போதும் உதவிபுரிய முன்வந்தது. மிகவும் தேவை ஏற்பட்ட நெருக்கடியான காலங்களில் கோயிற் கிராம மக்கள், கோயிற் கருவூலத்தினின்று மிகக் குறைந்த விலை மதிப்புள்ள உலோகச் சிலைகள் அல்லது அணிகலன்கள் வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியவற்றை, உணவுக்குத் தேவைப்படும் தானியவிதைகளை வாங்குவதற்கு உதவும் வகையில், கடன்பெற முடியும். கோயில்களின் செல்வச் செழிப்பு வளம், இருவகை வழிகளில் அமைந்தது. முதலாவது, நன்கொடைகள். அது கோயிற் கருவூலத்தைச் செழிப்பித்ததுடன், அதன்

ஆண்டுக்கு ஒருமுறை	அலுவல்கள்
400 கலம் நெல்.	வேதாந்தம் கற்பிக்கும் ஆசிரியர்கள்.
300 கலம் நெல்.	மீமாம்சம் வியாகரணம்கற்பிக்கும் ஆசிரியர்கள்.
200 கலம் நெல்.	தலைமைக் கணக்கர்.
,, ,,	சோதிடர்கள்.
,, ,,	சூத்தர்கள்.
,, ,,	நடனக்கலை ஆசிரியர்கள்.
150 கலம் நெல்.	குழல் வாசிப்போர்.
150 கலம் நெல்;	தையற்காரர்.
,, ,,	தலைமைத் தச்சர்,
,, ,,	அணிகலப் பொற்கொல்லர்.
,, ,,	சிறுபறைகள் வாசிப்போர்.
,, ,,	வடமொழி, தென்மொழி மறைகள் ஓதுவோர்,
120 கலம் நெல்.	வைகாசித் திருவிழாவில் நாடகங்கள். நடிப்போர்.
100 கலம் நெல்.	ஏனைய ஆசிரியர்கள்.
,, ,,	தலைமைப் பொற்கொல்லர்.
,, ,,	நாவிதர்.
,, ,,	வண்ணார்.
,, ,,	தலைமைக் குயவர்.
,, ,,	தண்ணீர் கொணருபவர்.
,, ,,	குடைபிடிப்போர்.
,, ,,	சங்கு முழங்குவோர்.
,, ,,	நடன மகளிர்.
,, ,,	காவலர்கள்.
75 கலம் நெல்.	இவர்களின் உதவியாளர்கள்.

மூலதனத்தை மிகுதிப்படுத்தியது. தந்தத்தால் ஆன மேடைகள், தூக்கிச் செல்லக்கூடிய நாற் காலிகள், பலவகைப் பேழைகள், படிமங்கள், வைரம் மாணிக்கம் முத்து பவளம் முதலிய வற்ருல் இயன்ற அணிகலங்கள், கடவுள் வழிபாட்டிற்குரிய பொற்கலங்கள், முத்துக் கள் முதலிய விலை உயர்ந்த மணிகள், நிரந்தரக் கிரியைகளுக்குக் கட்டணமாகச் செலுத்தும் பொன் நாணயங்கள், விலை உயர்ந்த உலோகங் களால் அமைந்த கடவுட் படிமங்கள், பொற் பாத்திரங்கள், பொற்குடைகள், கொடிகள் விளக்குகள் முதலியன அளிக்கப்பட்டதனைச் சொத்துப் பதிவேடுகள் அறிவிக்கின்றன. நிலங்கள், கிராமங்கள், பண்ணைகள் ஆடுமாடு களின் தொகுதிகள் ஆகியவை வழங்கப்படுவது கோயிலின் செல்வச் செழிப்பிற்கு இரண் டாவது மூலாதாரமாக விளங்கியது. அதன் விளைவாகக் கோயில்கள் வாழ்ந்ததுடன் வள மடைந்தன. நன்கொடை வழங்குபவர்கள் தெரிவித்த விருப்பங்களுக்கு ஏற்ப, அவர்கள் அளித்த குறிப்பிட்டதொரு விலைப்பொருட் பணத்தொகையைக்கொண்டு, பெரும்பாலும் இத்தகைய சொத்துக்கள் கோயிலால் முழுதும் வாங்கப்பெற்றன.

இந்தச் சொத்துக்கள், கோயில் பணியாளர் களுக்கும் அருச்சகர்களுக்கும் உரிய ஊதியம் வழங்குவதற்கும், கடவுளின் நிவேதனத்திற்கும் நித்திய நைமித்திக வழிபாடுகளுக்கும் வழி வகைகள் செய்தன. பெரும் செல்வர்கள் அரசர்கள் அரசிளங்குமரர்கள் வள்ளல்கள் பெருமக்கள் பக்தர்கள் ஆகியவர்களால், இத்தகைய நன்கொடைகள் வழங்கப்பெற்றன, இங்ஙனம் ஏற்கப்பெற்ற நன்கொடைகளின் நுணுக்கமான விவரங்கள் கோயிற் சுவர்களில், வழங்கியவர்களின் பெயர்களுடன் செதுக்கப் பெற்று நமக்குக் கிடைத்திருக்கின்றன,

அதே சமயத்தில், கோயிலானது இடை யருது பலவகைகளில் புதுப்பித்தும், அழகு படுத்தப்பெற்றும் வந்தது. கட்டிட வேலையும் பழுதுபார்க்கும் வேலையும் ஒருபோதும் நின்ற தில்லை. அழிந்துபோன அல்லது சிதைக்கப் பெற்ற கட்டிடங்கள், அவ்வப்போது புதியன வாக மாற்றப்பெற்று வந்தன. கட்டிடங்களின் சில பகுதிகள் பித்தளைத் தகடுகள் வேயப் பெற்றன ; மற்றவைகள் அக்கறையுடன் புதிய தளவரிசைகள் அமைக்கப்பெற்றன. திருக்குளம் அகழப்பெற்றது. முதன்மையான திருவிழாக் களுக்காக அழகிய முகப்பு மண்டபங்களும் தற்காலிகப் பந்தல்களும் வேயப்பெற்றன, பிற்குறிப்பிட்ட பந்தல்கள் விலையுயர்ந்த பொருள்களாலும் முத்துக்களாலும் அமைக்கப் பெறுவதும் உண்டு.

(தொடரும்)

—ஆசிரியர்.



நாகை வட்டம் திருவாய்மூர் ஸ்ரீ தியாக ராஜசுவாமி கோவிலில், தன்வந்தரி மருத்துவ இல்லத்தைத் தஞ்சைத் துணை ஆணையர் அவர்கள் திறந்து வைத்தல். (24—9—70)

அட்ட பந்தனம்

திரு. சா. கணேசன் அவர்கள்,

கம்பன்கழகம், காரைக்குடி

திருக்கோயில்களில் கடவுள் மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப் பெறும் கல்லால் ஆன தெய்வப் படிமங்கள் ஆடாமல் நிலைபெற, இருப்பிடம் (பீடம்), படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்திப் படியச் செய்யும் ஒரு கூட்டுக் கட்டுப் பொருளை அட்ட பந்தனம் என்பர். இப்பொருள் ஓர் அருமையான படைப்பு; அற்புதமான கண்டுபிடிப்பு. எட்டுப் பண்டங்களின் கலவையானதாலும், இருப்பிடத்தையும், தெய்வப் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதாலும் இது 'அட்ட பந்தனம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.

அட்டபந்தன மருந்தில் கலக்கும் பொருள்கள் :

1. கொம்பரக்கு, 2. சுக்கான் தூள், 3. குங்கிலியம், 4. கற்காவி, 5. செம்பஞ்சு, 6. சாதிலிங்கம், 7. தேன்மெழுகு, 8. எருமை வெண்ணெய், ஆகிய எட்டுமே. இவற்றை எல்லாம் கலந்து செய்யும் முறை இருவகையாகும். ஒன்று இடிமுறை; மற்றது காய்ச்சு முறை. காய்ச்சுமுறை மிக விரைவாக ஆகிவிடும். ஆனல் காய்ச்சு மருந்து சார்த்தியதை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் அகற்றல் கிட்டத்தட்ட இயலாது. வலிந்து செயற்படும் பொழுது சிலையுருவிற்குச் சேதம் விளையவும் கூடும். ஆனதால் மிகப் பெரும்பாலும் இடிமுறையை மேற்கொள்ளலே நன்று.

மேலே சொன்ன பண்டங்களை நன்கு சோதித்து வாங்கவேண்டும். பின்னர், தூசு, துப்பட்டை முதலிய களைந்து தூய்மை செய்ய வேண்டும். அதன் பின்னர் அளவுப்படி கலக்க வேண்டும். கலந்தபின் இடிக்க வேண்டும்.

(1) கொம்பரக்கு : இது அவலரக்கு அல்ல. மரப்பட்டையுடன் ஒட்டிக்கொண்டிருக்கும். இது தான் தூய்மையானது; இயற்கையானது; கலப்பற்றது. இதை வாங்கிப் பொடித்து மரப்பட்டை முதலியவற்றை நீக்கிச் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

(2) சுக்கான் தூள் : சுக்கானில் பல நிறமும் இருவகையும் உண்டு. வெள்ளை நிறம் நன்று; கபில நிறம் கொள்ளலாம்; கருமை நிறம் கூடாது. இதைக்கொண்டு வந்ததும் முதலில் சிறிது சுக்கானைத் தூளாக்கி, அடுப்பில் காயும் இரும்புச் சட்டியிலிட்டு வறுத்துப் பார்க்கவேண்டும். படபட என்று உப்பைப் போல வெடித்தால், அவ்வகைச் சுக்கான் கூடவே கூடாது. ரவை, மணல் போல வெடிக்காமல் இருந்தால் அவ்வகைச் சுக்கான்தான் உகந்தது.

(3) குங்கிலியம் : துண்டுத்துகள், தூசி இல்லாமல் பொறுக்கி எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

(4) கற்காவி : இஃது அழுக்குச் சிவப்பு நிறமாகக் கட்டியாய் இருக்கும். பூங்காவி என்பதல்ல இது. கடைகளில் காவித்தூள் என்று பலவகைக் கலப்படங்கள் உண்டு, அவற்றை வாங்கக்கூடாது. கட்டிகட்டியாய் இருக்கும் கற்காவியையே வாங்கி, மேலே படிந்துள்ள தூசிகளைப் புடைத்துப் போக்கிவிட்டு, இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

(5) செம்பஞ்சு : இஃது இயற்கையாகவே வாதாம்கொட்டை நிறமுடையது. பீகார்ப் பக்கத்திலிருந்து வருவது. 'கோத்தி' என்று பெயர். இதுதான் உகந்தது. சிவப்புச் சாயம்

ஏற்றி அடை அடையாய்த் தட்டி வைத்துக் கொண்டு அதுதான் செம்பஞ்சு என்று ஏமாற்று வோரும் ஏமாறுவோரும் மிக அதிகம். கோத்தி' பஞ்சு கதர்க்கடைகளில் சொல்லி வர வழைக்கச் செய்யலாம். இதையும் சருகு. சொத்தை, காம்பு முதலியன இல்லாமல் பழுது நீக்கி வைத்துகொள்ள வேண்டும்.

(6) சாதிலிங்கம் : இதில் பலவகை உண்டு. உலாந்தாவிலிருந்து வருவதுதான் தரத்தால் உயர்ந்தது. கலவைப் பண்டம் எட்டிலும் விலை மிக்கது சாதிலிங்கமே. அட்டபந்தனத் தின் முக்கியமான பொருள் இது. விலை மிகுதியை எண்ணி அளவைக் குறைப்பதும், தரமற்ற மலிவுச் சரக்கை வாங்குவதும் இன்று மலிந்து காணப்படுகின்றன. அப்படிச் செய்வது முறை கேடாகும். இஃது இரும்பைப் போலக் கனமிக்க பண்டமாகும். இதைப்பொடி செய் தல் எளிது. இதையும் நன்கு பொடித்து வைத் துக்கொள்ள வேண்டும்.

(7) தேன்மெழுகு : இதில் இருவகை உண்டு. ஒன்று மஞ்சள் நிறமுள்ளது, அதை மஞ்சண மெழுகு என்பர். மற்றொன்று வெண்மை நிற மாக இருக்கும், மஞ்சண மெழுகில் தேன் கலந்திருக்கும், வெண் மெழுகில் தேன் இல்லை. இதுதான் உகந்தது. வெண் மெழுகு என்று சில இடங்களில் மெழுகுவர்த்திக் குழம்பை ஆறவைத்து ஏமாற்றுவார்கள். வாயில் சிறிது கிள்ளிப் போட்டுச் சுவைத்துப் பார்த்தால் உண்மை புலப்படும்

(8) எருமை வெண்ணெய் : பசுவின் வெண் ணெயில் கொழுப்புச் சத்துக் குறைவு. ஆகவே, அது கூடாது. எருமை வெண்ணெய் தான் உகந்தது. இதிலும் சிறிதும் நீர்ச்சத்தின்றி முழுதும் அகற்றப்பட வேண்டும். நெருப்பு, வெயில், வேறுவகை வெம்மை, பயன்படுத்தப் பட முடியாதவை. அவற்றால் வெண்ணெய் உருகிவிடும். ஆனதால் புதிய மண் பானையை எடுத்துப் பானைக்கு ஒரு வீசை வெண்ணெயைப் புறத்தில் கால் அங்குலக் கனமாக அப்பி வெம்மை தாக்காத குளிர்ந்த, இருண்ட அறை யில் பானையைக் கவித்து வைத்திருக்க வேண்டும். பானை வெண்ணெயில் உள்ள நீர்ச் சத்து முழுவதையும் உறிஞ்சிக்கொள்ள, வெண் ணெய் பக்குவமாய் ஆகிவிடும். தேவைக் கேற்பப் பானைகளின் எண்ணிக்கையைக் கூட் டிக்கொள்ள வேண்டும்.

எல்லாப் பண்டங்களும் ஆயத்தமான பிறகு மர உரலில் இடிக்க வேண்டும். கல்லுரல் கூடாது. ஒவ்வோர் உருண்டைக்கும்குறிப்பிட்ட அளவாக ஏழு பண்டங்களையும் உரலில் இட்டுத் தேவைக்கு ஏற்ப வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒவ்வோர் உருண்டை யையும் சுமார் அரைமணி நேரம் இடித்துப் பின்னர் உரலிலிருந்து எடுத்து உருட்டித் தலையில் ஆணிக் கொண்டையால் ஒரு குத்துக் குத்தி வைத்துக்கொள்ள வேண்டும், முதல் இடி முடிந்ததும் ஒரு குத்து. இரண்டாம் முறை இடித்தபின் இரண்டு குத்து. இப்படி எட்டு முறை இடிக்கவேண்டும். ஓர் இடிக்கும் அடுத்த இடிக்கும் இடையில் குறைந்தது இரண்டு நாள் இடைவெளி இருக்கவேண்டும்.

இனி அளவைப் பார்ப்போம். ஒவ்வோர் உருண்டைக்கும் :

சுக்கான் தூள் :	$25\frac{1}{2}$	தோலா
குங்குலியம்	9	,,
கற்காவி	$7\frac{1}{2}$	,,
சாதிலிங்கம்	$7\frac{1}{2}$	,,
அரக்கு	$3\frac{3}{4}$	,,
மெழுகு	$3\frac{3}{4}$	,,
செம்பஞ்சு	1	,,
எருமை வெண்ணெய்	$7\frac{1}{2}$	,,

(இஃது எட்டு இடிக்கும் சேர்த்துள்ள உத் தேச அளவு. சிறிது கூடவும் ஆகலாம்.)

இவற்றை எல்லாம் மர உரலில் ஒவ்வோர் சரக்காக இட்டு ஒன்றோடு ஒன்று கலந்து ஒன்று சேரும்படி இடிக்கவேண்டும். முதல் ஆறு பொருள்களும் செமண்டு, சுண்ணும்பு, மணல் போன்றவை. ஏழாவதாக உள்ள பஞ்சு கம்பி வலை போன்றது. வெண்ணெய்தான் இந்தக் காங்க்ரீட்டிற்கு நீர் போன்றது.

இந்த மருந்து கலந்து இடிப்பதில் பண்டத் தூய்மை, பண்டங்களின் சேர்மான அளவு, இடிக்கும் கால அளவு மூன்றும் மிக முக்கியம். அத்துடன் இடிக்கின்றவர்களின் உடல் தூய்மை

மனத் தூய்மை முதலியன மிக மிக முக்கியம். இடிக்கும்பொழுது இடிக்கும் ஆட்கள் ஆலயத்திற்கு ஏற்ப, ''சிவ சிவ'' ''நாராயணா'' அல்லது ''வேல் வேல் முருகா'' என்பன போன்ற இறைவன் திருப்பேர்களை உச்சரித்துக் கொண்டே இடிக்கவேண்டும். இப்படிச் செய்த அட்டபந்தன மருந்து சார்த்திக் குடநீராட்டுச் செய்த திருக்கோயில்களில் அம்மருந்து எவ்விதக் குறைபாடும் நேராது, மிக நீண்ட நாட்களாய் இலங்கி வருதலைக் கண்கூடாகக் காண முடிகிறது.

எனவே, இடிக்கப் புகுமுன் இடிப்போர்களைக் குளிக்கச் செய்து, திருநீறு முதலானவற்றை அணிந்துகொண்டு விநாயகர் வணக்கம் செய்துகொண்டபின் ஒவ்வொரு குத்துக்கும் ''சிவ—சிவ'' போன்ற நாமங்களைச் சொல்லிக் கொண்டே இடிக்கச் செய்யவேண்டும் என்பது எளியேன் ஏற்பாடு. இவற்றில் பெரும்பாலோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. வாண வேடிக்கை, பந்தல் அலங்காரம் யாகசாலைச் சோடனை போன்றவற்றில் ஆயிரம் ஆயிரமாகப் பொருள் விரயம் செய்பவர்கள் இன்றியமையாத அட்டபந்தன மருந்தைப்பற்றிக் கவலைப் படுவதே இல்லை. யார் யாரோ செய்யும் செங்கல் தூள் உருண்டைகளை ரூபாய் 3 அல்லது 4 கொடுத்து வாங்கிவந்து எப்படியோ வெண்ணெய்ப் பலத்தால் குழைத்து அப்பிவிட்டுக் 'கும்பாபிஷேகம்' என்ற பெயரில் பல்லாயிரம் ரூபாய்களை விரயம் செய்வதை எண்ணி வருந்தாதிருக்க முடியவில்லை. இதற்குக் காரணம் குடநீராட்டு விழாவின் உண்மைத் தத்துவத்தையும், அதன் இன்றியமையாத துறைகளையும் அறியாமையே என்னலாம்.

என்னைக் கேட்டால் அட்டபந்தன மருந்துதான் அனைத்திலும் தலையானதென்பேன். இதில் சிக்கனம் அல்லது அலட்சியம் காட்டுபவர்களை ஆத்திகர் என எங்ஙனம் கூறமுடியும்? மேலே கூறிய முறை, இருப்பிடத்தையும் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதற்குச் செய்வதாகும். இருப்பிடத்தையும், துணையிருப்பிடத்தையும் (பீடத்தையும், உப பீடத்தையும்) இசைப்பதற்குத் திரிபந்தனம் என்னும் முக்கூட்டுப் பொருளே உகந்தது. இதற்கு வேண்டியவை ; சுக்கான் தூள், சுத்தம் செய்த சர்க்கரை, முற்றக் கனிந்த பேயன் பழம் ஆகிய மூன்றுமே. சுக்கானைச் சோதித்து வெடி சுக்கான் அல்லாது நற்சுக்கான் கற்களை நன்கு பொடித்துப் பெருஞ்சல்லடையாகச் சலித்து அதில் வேண்டிய அளவை எடுத்து வாயகன்ற மண் அல்லது களிம்பேறாத ஒரு பாத்திரத்தில் இட்டுச் சிறிது சிறிதாகச் சர்க்கரையையும், தோல் கறுத்துக் கிட்டதட்ட அழுகியதுபோலத் தோன்றும் பேயன் வாழைக்கனியையும் சேர்த்துப் பிசைந்துகொண்டே வரும்பொழுது கை தாங்காத அளவு சூடு வந்ததும் கையை எடுத்துவிட்டு மத்து முதலிய் மரக் கருவியால் நன்கு குழப்பி மத்திக்கவேண்டும். கூழ்போல ஆனதும் எடுத்து இரு கற்களுக்கும் இடையில் அரைக் கால் அங்குல அளவு வைத்துக் கற்களை முறைப் படி ஒன்றின்மேல் ஒன்றாய்ப் படிய வைத்துவிட வேண்டும். கூட்டு முறை செம்மையாக அமைந்துவிட்டால் பிடிமானம் உறுதியாக இருக்கும்.

மெய்யான ஈடுபாடும் தெய்வ பக்தியும் உள்ளவர்களை எல்லாம் தொழுது வேண்டுகிறேன். நல்ல முறையில் மேலே கண்ட வண்ணம் ஆக்கித் தெய்வத் திருப்படிமத்திற்கு மருந்து சார்த்த வேண்டுமென்று. அன்றேல் கண்டவற்றை 'அட்டபந்தனம்' என்ற பெயரால் சார்த்துவதை விட 'டால்மியாபந்தனம்' செய்துவிடுவது மேலாகும். 'டால்மியா பந்தனம்' என்றால் என்ன? என்று கேட்கிறீர்கள். செமெண்டுக் கலவையைத்தான் இப்படிப் பெயரிட்டுக் கூறுகிறேன். சரிதானே ?

''கொம்பரக்குச் சுக்கான்தூள்,
குங்கிலியம், கற்காவி
செம்பஞ்சு, சாதிலிங்கம்,
தேன்மெழுகு—தம்பழுது
நீக்கி எருமைவெண்ணெய் கூட்டி
நன்கிடித்து
ஆக்கல் அட்ட பந்தனம் ஆம்.''

''சுக்கான்தூள், சர்க்கரை
தொல்பேயன் நற்கனியும்
ஒக்கக் கலந்தமைத்தல்
உற்றதிரி பந்தனம் ஆம்.''

மதிப்புரை

இராமலிங்க அடிகள் வரலாறு

இந்நூல், முன்னாள் முதலமைச்சர் திரு ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் தோற்றுவித்த வடலூர்ச் சுத்த சன்மார்க்க நிலையத்தின் செயலாளராகவும், வடலூர்த் திருவருட் பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்களின் அறங்காவலராகவும் இதுகாலை இருந்து பணியாற்றி வருகின்ற, சன்மார்க்க தேசிகன் என்னும் தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள் இயற்றியது. ''வடலூர் வரலாறு'' ''இராமலிங்கரும் தமிழும்'' என்னும் இரு சிறந்த நூல்களும் இவரால் முன்பே எழுதப் பெற்றுள்ளன. அடிகளாரின் வரலாற்றை அறிதற்குத் துணைபுரியும் அனைத்து நூல்களையும் வெளியீடுகளையும் பல்வேறு துணைகளையும் கருவிகளையும் பெரிதும் முயன்று ஒருங்கு தொகுத்துக்கொண்டு, மிகவும் உழைத்து முயன்று நுண்ணிதின் நுனித்து ஆராய்ந்து, இந் நூல் எழுதப் பெற்றுள்ளது.

அடிகளின் வரலாற்றைச் சென்னை வாழ்க்கை—வடலூர் வாழ்க்கை என இரு கூறுக வகுத்துக்கொண்டு, கந்த கோட்டப் பகுதி திருவொற்றியூர்ப் பகுதி, பூர்வஞான சிதம்பரப் பகுதி, உத்தர ஞான சிதம்பரப் பகுதி, சித்திவளாகப் பகுதி, என்னும் தலைப்புக்களில் ஆசிரியர் மிக விரிவாகவும் நுணுக்கமாகவும் அரிதின் ஆராய்ந்து எழுதியிருக்கின்றார். திருவருட்பாவிலுள்ள அகச் சான்றுகளையும், ஏனைய புறச் சான்றுகளையும் நன்கு ஆராய்ந்து, இலக்கண இலக்கியச் சிறப்புக்கள் உடையதாய், பல ஆண்டுகள் அரிதின் முயன்று உழைத்து, திருத்தமாகவும் சிறப்புற வும் இச் சிறந்த வரலாற்று நூல், ஆராய்ச்சி முறையில் செவ்விதின் எழுதப் பெற்றுள்ளது.

இராமலிங்க அடிகள் எழுதிய ஒழிவிலொடுக்கப் பாயிரவிருத்தி—தொண்டல மண்டல சதகத்தின் நூற்பெயர் இலக்கணம்—வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை—குடும்பகோரம்—அடிகள் அருட்பெருஞ் சோதி ஆண்டவரிடத்தில் செய்துகொண்ட நான்கு உரைநடை விண்ணப்பங்கள்—அடிகளின் உபதேசங்கள் ஆகிய திருவருண் மெய்ம்மொழி—மகோபதேசம் ஆகியவை கற்பவருக்குப் பெரிதும் பயன்படும் பொருட்டு முற்றிலும் எடுத்து நூலிற் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. இடையிடையே திறம்தெரிந்து தேர்ந்தெடுத்த பற்பல சிறந்த திருவருட்பாப் பாடல்கள் அரைகுறையாகவன்றி, முழுவடிவில் கொடுக்கப் பெற்றுள்ளன. அரிய பயன்மிக்க பதினேரு பின் இணைப்புக்கள் சேர்க்கப்பெற்றிருத்தல், இந் நூலின் சிறப்பை மேலும் மிகுதிப்படுத்துகின்றன,

இராமலிங்க அடிகளாரின், வரலாற்றை மிகவும் நுனித்தாய்ந்து உணர்வதற்கு, இந்நூல் பெரிதும் பயன்படும். சன்மார்க்க அன்பர்களுக்கு இஃது ஓர் ஒப்பற்ற அரும்பெரும் கலைக் கருவூல மாகும். ஆசிரியரின் நுண்மாண் நுழை புலமும், சிறந்த ஆராய்ச்சித் திறனும், செவ்விய இனிய தெளிவான நல்ல நடையும், பிறவும் பெரிதும் போற்றிப் பாராட்டுதற்குரியன.

"ஒரு நல்ல புத்தகம் என்பது, ஒரு சிறந்த ஆசிரியரின் உயிர்க்குருதியினைப் பிழிந்துவடித் தெடுத்த அரும் பெறற் சாறேயாகும்" என்று ஜான் மில்ட்டன் என்னும் ஆங்கில அறிஞர் கூறிய தன் உண்மையினை மெய்ப்பிக்க வல்லதாக இந் நூல் விளங்குகின்றது. ஒரு நூலை அறிவால் ஆராய்ந்து எழுதுதலைக் காட்டிலும், "தவத்தால் மனந்துயராய்" இறையுணர்வும் அருளும் பெற்று எழுதுதலே சிரிய முறை என்பர் சிவஞான சுவாமிகள். அதற்கு ஏற்ப, இராமலிங்க வள்ளலாரின்பால் எல்லையற்ற அன்பும் பக்தியும் கொண்டுள்ள இவ்வாசிரியர், நைட்டிகப் பிரம்மச்சரியம் மேற்கொண்டு தவத்திருவும் அமையப்பெற்று, இவ்வரிய இனிய அரும்பெறல் நூலை இயற்றியுள்ளார்கள். இந்நூல் ஊரன் அடிகள் அவர்களின் ஒப்புயர்வற்ற பண்பு ஒழுக்கம் புலமை பக்தி தியானம் தவம் ஞானம் முதலியவற்றின் பயனுகப் பழுத்துக் கனிந்து வெளிவந்துள்ளது எனச் சுருங்கக் கூறலாம். இஃது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை. சன்மார்க்க உலகம் இந் நூலைப் பொன்னினும் மணியினும் போற்றிப் பொதிந்துகொண்டு பயன்கொள்ளக் கடமைப்பட்டுள்ளது

சீரின் மிகும்நம் இராமலிங்க வள்ளல் சிறந்த வரலாற்றைப்
பேரன் பொடுதம் தவநலமும் பெரிதும் பிறங்க நுனித்தாய்ந்தே,
யாரும் வியந்து போற்றும்வணம் இனிதின் எழுதி அளித்தருளும்
ஊரன் அடிகள் தொண்டுகள்தாம் ஓங்கி வளர்ந்து வெல்க நன்றே!

—ந. ரா. முருகவேள்,

மதுரகவிகள்

மகாவித்துவான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்.

மதுரகவிகள், ஆழ்வார் திருநகரிக்கு அருகிலுள்ள திருக்கோளூரில் சித்திரை நாளில் திருவவதரித்தார். 'வகுளபூஷண பாஸ்கரோதயத்திற்கு அருணோதயம் போன்றது இவரது திருவவதாரம்' என்பர் பெரியோர். நம்மாழ்வாரிற்காட்டிலும் திருநட்சத்திரத்தில் இவர் மூதுவர் என்பது இதனால் விளங்கும்.

இவர் வேத சாத்திரங்களை இளமையிலே பயின்று செவிக்கினிய செஞ்சொற் கவிகளைப் பாட வல்லவராய், அதனால் மதுரகவி என்று திருநாமம் பெற்று, மெய்யுணர்வினால் நிறைந்து மகா விரக்தராய் விஷ்ணுபக்தி விஞ்சி, யோக நிஷ்டையிலும் தேர்ந்து தீர்த்த யாத்திரை திவ்விய தேச யாத்திரைகளிலே திருவுள்ளமுடையராய்ப் புறப்பட்டு சஞ்சரிக்கலுற்று, வடநாட்டுத் திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டுவந்தார். அங்ஙனம் வருகையில், திருவயோத்தியிலிருந்து ஒரு நாளிரவில் திருக்கோளூர் எம்பெருமானைத் திசை நோக்கித் தொழுபவராய்த் தெற்குத் திக்கில் கண் செலுத்தினர். அப்பொழுது அப்பக்கத்திலே வானுற வளர்ந்து விளங்குகின்றதொரு திவ்வியமான பேரொளியைக் கண்ணுற்று, அது இன்னதென்றறியாமல் திகைத்து நின்றார். அச்சுடர் முச்சுடரொளியிலும் மிக்கு விளங்கியதனால் வெகு வியப்புற்று, அச்சோதியையே குறியாகக் கொண்டு விரைவாக நெடுவழி கடந்து நடந்து வந்து ஆழ்வார் திருநகரியை அடைந்தார்.

அங்கு அவதரித்தருளியுள்ள சடகோப முனிவரது திருமேனி விளக்கத்தைச் சேவித்து, இதுவே அத்தனை நெடுந்தூரம் பிரகாசித்ததென்று அறிந்து வியந்து, அவ் ஆழ்வாரது நிலைமை முன்பு தாம் கேள்வியுற்றிருந்தபடியே அப்ராக்ருதமாயிருக்கக் கண்டு, அவர்க்குக் கட்புலனும் வாய்ப்புலமும் உள்ளனவா என்பதைச் சில உபாயங்களினால் பரிசோதிப்பவரானார். அப்பொழுது காரிமாறப்பிரான் கண்திறந்து கடாட்சித்து, இவர் கேட்ட கேள்விக்கு ஏற்ற விடை சொல்லியருள, அது கண்டு மதுரகவிகள் ஆழ்வாரது ஞான வைபவத்திற்கு அதிசயித்து ஈடுபட்டு, அவரையே ஆசாரியராகக் கொண்டு சரணம் புகுந்தனர்.

அவ்வாழ்வார், பக்தியின் பரிவாக ரூபமாக அருளிச்செய்த சதுர்வேத சாரமாகிய நான்கு திவ்வியப் பிரபந்தங்களை, இம் மதுரகவிகள் தாம் பட்டோலைகொண்டு, கைத்தாளமெடுத்துப் பண்ணிசையோடு அவற்றை எப்பொழுதும் பாராயணஞ் செய்துகொண்டு திருக்குருகூர்நம்பிக்குப் பிரதான சிஷ்யராய், பரதாழ்வானுக்கே பணிவிடை புரிந்து ஒழுகின சத்ருக்நாழ்வானைப்போல், பகவத் பக்தியிலும் பாகவதப் பிரதிபத்தியையே பரமானுஷ்டாநமாகத் தலைக்கொண்டு, அவ்வாழ்வார் விஷயமாக 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்ற திவ்வியப் பிரபந்தத்தைப்பாடி முமுட்சுக்களுக்கு உபகரித்தருளினர்,

பகவத் பக்தியிற் சிறந்தவர்களையே ஆழ்வார்களென்று சிறப்பித்துக் கூறுதலும், அவர்கள் அருளிய பிரபந்தங்களையே திவ்வியப் பிரபந்தங்கள் என்று கூறுவதும் சம்பிரதாயமாயிருக்கவும், ஸ்ரீமந் நாதமுனிகள் தொடக்கமான நம் பூருவாசாரியர்கள், இம்மதுர கவிகளை ஆழ்வார்களது கோஷ்டியில் சேர்த்து, இவரருளிய கண்ணிநுண் சிறுத்தாம்பையும் அருளிச்செயல்களினிடையே சேர்த்தருளினர் என்பது.

மணவாள மாமுனிகளின் உபதேசரத்தின மாலையில்,

"வாய்த்த திருமந்திரத்தின்
மத்திமமாம் பதம்போல்
சீர்த்த மதுரகவி
செய்கலையை,—ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள்
அருளிச் செயல்நடுவே
சேர்வித்தார் தாற்
பரியந் தேர்ந்து"

என்ற பாசுரத்தினால் அறியத்தக்கது. இப் பாசுரத்தின் உரையில் பிள்ளை லோகஞ் சீயர் "இதுதான் பயிலுஞ் சுடரொளி' 'நெடுமாற் கடிமை' தொடக்கமானவற்றின் அர்த்தத் தைப் பிரதிபாதிக்கையாலே, இதின் அர்த்த கௌரவத்தை விசாரித்து, நன்றாயிருப்பதொரு ஆரத்தைச் சமைத்து அது ஒளிபெறும்படி சிலாக்கியமாயிருப்பதொரு நாயகக்கல்லை அதன் நடுவே பதித்தாற்போலே, அருளிச் செயல்கள்தான் நிறம் பெறும்படி அவற்றின் நடுவே இதைச் சேர்த்தார்கள். சேர்த்த சேர்க் கையில் சாதுர்யத்தாலேயிறே முத்துமாலை தொடக்கமான ஆபரணாதிகள் நிறம் பெறுவது, அதுபோலேயாய்த்து இது"—என்றருளியுள்ள சூக்திகளும் குறிக்கொள்ளத்தக்கன.

கம்பர், தாம் ஆழ்வார் விஷயமாகச் சட கோபரந்தாதி பாடுவதற்கு, இக்கண்ணிநுண் சிறுத்தாம்பை வழிகாட்டியாகக் கொண்ட மையை, அவர் தாமே வெளியிட்டுரைத்த,

"மன்றே புகழுந் திருவழுந்தூர்
வள்ளல் மாறனைமுன்
சென்றே மதுரகவிப் பெருமாள்
தென்தமிழ்த் தொடையில்
ஒன்றே பதிக முரைத்
தவன்பொன்னடி யுற்றுநின்றான்
என்றே பதிகம் பதிகம தாக
இசைத்தனனே"

என்னும் பாயிரமும் இங்கு நினைக்கத்தக்கது.

ஆழ்வார்களுடைய நிஷ்டையிற் காட்டி லும் மதுரகவிகளின் நிஷ்டை மிகச் சீரியதாகப் போற்றப்படுகின்றது. ஸ்ரீவசந பூஷணத்தில் சரமபர்வ நிஷ்டாப்ரகரணத்தில் — "உண்ட போதொரு வார்த்தையும் உண்ணாதபோ தொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப்பே ருண்டிறே. அவர்கள் பாசுரங்கொண்டன்று இவ்வர்த்தம் அறுதியிடக்கடவது. அவர்களைச் சிரித்திருப்பாரொருவ ருண்டிறே, அவர் பாசு ரங்கொண்டு இவ்வர்த்தம் அறுதியிடக்கட வோம்" என்றருளிச்செய்துள்ள திவ்விய சூக்தி களை நோக்கினால், தத்வார்த்த நிஷ்கர்ஷ விஷ யத்தில் மதுரகவிகளின் ஸ்ரீ சூக்தியே சீரிய சிங் காசனத்தில் அமர்ந்திருக்க உரிமையுடையதா கும் என்று நிச்சயிக்கப்படும்.

இவர் நம்மாழ்வாருடைய அருளிச்செயல் களை ஆழ்ந்து நோக்கி, பகவத் பக்தியிற்காட்டி லும் பாகவத பக்தியே மிகச் சிறந்ததென்கிற தத்துவப்பொருளை உறுதியாகக் கைக்கொண் டார். ஆழ்வார் முதற் பிரபந்தமாகிய திரு விருத்தத்தில் தமக்கு நிருபகமாக "திருமால் திருப்பேர் வல்லார் அடிக்கண்ணி சூடிய மாறன்" என்றருளிச்செய்து, சரமப்பிரபந்த மாகிய திருவாய்மொழியின் முடிவில் "வந்தவர் எதிர்கொள்ள மாமணி மண்டபத்து, அந்தமில் பேரின்பத்து அடியரோடிருந்தமை" என்று தாம் திருநாட்டிலும் பாகவத கோஷ்டியில் அந்வயிக்கப் பெற்றதையே பேறாக அருளிச் செய்து தலைக்கட்டினார். இந்தச் சுவடறிந்த மதுரகவிகள் பாகவத நிஷ்டைக்கு மேற்பட்ட புருஷார்த்தம் இல்லை என்று துணிந்தார்.

ஸ்ரீ ராமாயண புருஷர் நால்வரில் ஒருவ ரான சத்துருக்நாழ்வானை, இவர்க்கு ஒப்புச் சொல்வர் பெரியோர். வேதத்தின் உபப் பிருங்கணமாக அவதரித்த ஸ்ரீராமாயணத்தில், இராம லட்சுமண பரத சத்ருக்நர் என்கிற நால் வரும் நான்கு அர்த்தங்களை அனுஷ்டித்துக் காட்டினர். 'பெரியோர் சொல்வதைச் சிறி யோர் செய்யக்கடவர்' என்கிற சாமான்னிய தரும முறையைப் பித்ருவாக்கிய பரிபாலநாதி முகத்தாலே ஸ்ரீ ராமபிரான் அனுஷ்டித்துக் காட்டினார், 'சேஷ பூதன் சேஷி விஷயத்தில் கைங்கரியம் பண்ணி சுவரூபலாபம் பெறக்கட வன்' என்கிற விசேஷ தருமத்தை இளையபெரு மாள் அனுஷ்டித்தார். பரதாழ்வானும் இந்த சேஷ சேஷி முறைமையையே பரிபாலித்தவரா யினும் இவர்க்கு விசேடமுண்டு; நிர்ப்பந்தப்

படுத்தி அடிமை செய்தார் இளையபெருமாள்; இவர் அங்ஙனன்றியே 'சேஷி உகந்த அடிமையே சேஷ பூதனுக்கு ஆதரணீயம்' என்னுமிடத்தை அனுஷ்டித்துக் காட்டினர். பெருமாளைப் பிரிந்து தரித்திருக்கமாட்டாமையாகிற தன் செல்லாமையைப் பாராது, பெருமாளுடைய திருவுள்ளத்தையே பார்த்துச் சித்திர கூடத்தினின்றும் மகிழ்ச்சியுடனே மீண்டாரன்றோ இவர். அப்படிப்பட்ட பரதாழ்வானை அல்லது வேறொன்றும் அறியாதே இருக்கையாலே, பகவத் சேஷத்வ காஷ்டையான பாகவத சேஷத்வத்தில் ஊன்றினர் சத்ருக்நாழ்வான்.

சத்ருக்நர்க்கு வால்மீகி முனிவர் விசேஷணமிடும்போது "நித்ய சத்ருக்ந" என்றார். பாஹ்ய சத்துருக்களை மாத்திரமேயன்றி, ஆந்தரசத்ருக்களான இந்திரியங்களையும் வென்றவர் என்று அதற்குப் பொருளுரைத்த பெரிய வாச்சான் பிள்ளை 'அவ்விந்திரிய ஜயத்தின் எல்லை எவ்வளவென்னில்? 'பும்சாம் திருஷ்டி சித்தாபஹாரிணம்' என்ற இராமசௌந்தர்யத்தாலேயாதல், அவருடைய வைலக்ஷண்யத்தாலே யாதலன்றிக்கே, தனக்கு உத்தேச்யனை பரதாழ்வான் உகந்த விஷயமென்று பற்றுகை'. என்றருளிச் செய்தார். மதுரகவிகளின் நிஷ்டையும் இப்படிப்பட்டதே என்பது ''தேவுமற்றறியேன்'' என்றதனாலும், ''திரிதந்தாகிலும்'' என்னும் பாசுரத்தினாலும் அறியலாம்.

''பகவத் பக்தியிற்காட்டிலும் பாகவத பக்தி சிறந்தது'' என்று சொல்லுவதன் தத்துவம் சிறிது விவரிக்கப்படுகிறது; ஒருவன் ஒரு வஸ்துவினிடத்தில் அன்பு வைத்தால், அவ்வன்பு அளவற்றதுமாயிருந்தால், அஃது அவ்வஸ்துவோடே நின்றுவிடாமல், அதனோடு சம்பந்த சம்பந்தம் பெற்ற வஸ்துக்களிலும் பெருகிச் செல்லுமென்பதை அனைவரும் தம் தம் அநுபவத்தாலறிவர், அப்படியே பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் எல்லை நிலமாகவுண்டாமது, பகவத் பக்தியின் உறைப்பையே பாகவத பக்தி வெளிப்படுத்தும். சுவாமியின் பாதுகைகளிலே நாம் ஆதரவு வைத்து அவற்றைக் கண்களிலொற்றிக் கொள்வதும், தலைமீது அணிந்துகொள்வதும், அலம்பித் தீர்த்தம் பருகுவதும் செய்கிறோம்; இதனால் நமக்கு சுவாமியிடத்துள்ள பக்தி அபாரமானது என்பதேயன்றோ வெளியாகின்றது. அதுபோலவே 'எம்பெருமானும் வேண்டா, அவன் உறையும் திருப்பதியும் வேண்டா, ஆழ்வாரும் அவருடைய அருளி செயல்களுமே உத்தேச்யம்' என்று பேசினாலும் பகவத் பக்தியின் முதிர்ச்சியே விளங்கிற்றாகும்.



திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் நடைபெற்ற தமிழர்ச்சனைத் தொடக்க விழாவில் நமது மாண்புமிகு அறநிலைய அமைச்சர், அறநிலைய ஆணையர், தவத்திரு குன்றக்குடி அடிகளார் எம். எல். ஸி. ஆகிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தல் (19—2—71)

சூரியனர் கோயில்

திரு. கே. எம். வேங்கடராமையா M.A.,

தலைவர் : செந்தமிழ்க் கல்லூரி

[திருப்பனந்தாள்]

முன்னுரை :

"ஊரானேர் தேவகுலம்" என்ற முது மொழிக்கிணங்கத் தஞ்சை மாவட்டத்தில் பெரும்பான்மையான ஊர்களில் திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் பலப்பல சைவசமய குரவர்களால் திருநெறிய மெய்ஞ்ஞானத் தமிழ் சூட்டப்பெற்றனவாம், அன்னேர் காலத்துக்குப் பிறகும் பல புதிய கோயில்கள் கட்டப் பெற்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயில், கங்கை கொண்ட சோழபுரத்துக் கங்கை கொண்ட சோழேச்சரம், தாரா சுரத்து இராச ராசேச்சரம், திருபுவனத்துத் திருபுவனவீரேச் சுரம் (கம்பஹரேசுவரர் கோயில்), சூரியனர் கோயில் முதலியவை இவ்வகையைச் சேர்ந்தன வாம். இவற்றுள் சூரியனர் சோயில் குறித்து இங்கு எழுதப் பெறுகிறது.

தலக்குறிப்பு :

ஆடுதுறைப் புகைவண்டி நிலையத்திலிருந்து திருப்பனந்தாளுக்குச் செல்லும் பாதையில், ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலக்குடி என்ற பாடல் பெற்றதலம் உள்ளது. இதற்கு அண்மையில் இருப்பது சூரியனர் கோயில் என்னும் தலமும் கோயிலும் ஆகும். சூரியனுக்குரிய கோயில் இருப்பதால் இவ்வூர்க்குச் சூரியனர் கோயில் என்று பெயர் வரலாயிற்று. சிவஞானசித்தியார் என்னும் ஞானசாத்திரத்திற்கு உரை எழுதியவர்களுள் ஒருவராகிய சிவாக்கிரயோகிகள் நிறுவிய மடம் ஒன்றும், இத்திருத்தலத்தில் உள்ளது. இத் தலத்துக்கு அருகில் திருமாந்துறை என்ற சிவத் தலம் உள்ளது. (சம்பந்தரால் பதிகம் பெற்ற திருமாந்துறை இதனின் வேறு). இத் திருமாந்துறைக்கு அருகில் இருப்பதால், சூரியனர் கோயில் திருமாந்துறையோடு இணைந்து வழங்கப் பெறுவதுண்டு.

பரிவார மூர்த்தித் தலங்களுள் ஒன்று :

திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மகாலிங்க சுவாமியை நடுநாயகமாக வைத்துப் பரிவார மூர்த்திகள் எழுந்தருளியுள்ள தலங்களாகச் சில தலங்கள் அமைந்துள்ளன ; திருவலஞ்சுழி—விநாயகர்தலம் ; திருவேரகம் (சுவாமி மலை)—முருகன் தலம் ; திருச் சேய்ஞுலூர்—சண்டேசுவரர் தலம் ; திருவாவடுதுறை—நந்தி தேவர் தலம் ; சூரியனர் கோயில்—சூரியன் (அல்லது நவக்கிரகத்) தலம்; சீர்காழி—பயிரவர் தலம் ; சிதம்பரம்—நடராசர் தலம் ; திருவாரூர்—சோமாஸ்கந்தர் தலம். இவ்வமைப்பை க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ், சப்பாணிப் பருவம், எட்டாவது பாடல், "திருவலஞ்சுழி ஐங்கரத்தன் ஆலயமென" என்று தொடங்கும் பாடலிலும், மகா

வித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள திருவிடைமருதூருலாவில் ''ஒப் பேதும் இல்லா வலஞ்சுழியே'' என்பது முதல் ''இடை மருதில் வீற்றிருக்கும் ஈசன்'' என்பது வரையிலும் விரிவாகக் காணலாம்.

கோயில் தோற்றமும் பெயரும் :

சூரியனார் கோயில், கி.பி, 1070 முதல் 1120 வரை அரசாண்ட முதற் குலோத்துங்க சோழனால் கட்டப்பெற்றது என்பர் ஆராய்ச்சி யாளர். இக் கோயிலில் முதற் குலோத்துங்க சோழனுடைய இரண்டு கல் வெட்டுக்கள் உள்ளன. முன்னதில் ''குலோத்துங்கசோழ மார்த்தாண்டாலய தேவர்'' என்றும், பின்ன தில் ''குலோத்துங்க சோழ மார்த்தாண்டா லயத்துச் சூரிய தேவர்'' என்றும், இக்கோயிற் பெயரும், இக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயரும் குறிக்கப் பெற்றுள்ளன. எனவே, இக் கோயிற்கு முன்னால் இடப்பெற்ற பெயர் குலோத்துங்க சோழ மார்த்தாண்டால யம் என்றும், இறைவன் பெயர் சூரியதேவர் என்றும் அறியலாம்.

கோயில் அமைப்பு :

இறையகத்தில் எழுந்தருளியுள்ளவர் சூரிய தேவர் ஆவர், அவர்தம் இருமருங்கிலும் உஷாதேவியும், பிரத்தியுஷாதேவியும் உளர். இறையகப் பகுதியும் முக மண்டபமும் கருங் கல்லால் அமைந்தவை. இறையகம் மேற்குப் பார்த்துள்ளது. சூரிய தேவரை நோக்கிய வண்ணமே பிரகஸ்பதி என்னும் வியாழன் எழுந்தருளியுள்ளார். அதாவது, வியாழன் கிழக்கு நோக்கியுள்ளார். கருப்பக்கிரகத்துக்கு வடக்கில் வரிசையாக இராகு சுக்கிரன் சன்னிதி களும்; கிழக்கில் கேது, சந்திரன், அங்காரகன் சன்னிதிகளும்; தெற்கில் புதன் சனி சன்னிதி களும்; சிறு கோயில்களாக உள்ளன, இவை செங்கற்களால் ஆனவையே. திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் சூரிய தேவர் என்று இருத்தலையும், சுற்றிலும் உள்ள கோயில்கள் செங்கற் கோவில்களாக இருக்கச் சூரியன் அமைந்த கோயில்மட்டும் கருங்கல்லால் இருத்தலையும் நோக்கி, சூரியன் தவிர்த்து, மற்றைக் கிரகங்களுக்குரிய கோயில்கள் பிற் காலத்தில் கட்டப் பெற்றனவாக இருத்தல் கூடும் என நினைக்க இடம் தருகிறது. இதனை ஒருதலையாகத் துணிதற்கு முடியவில்லை. வியாழன் இருக்கும் மண்டபத்துக்கு முன்உள்ள மண்டபம் சிறிது அகலமானது. இதில் காசி விசுவநாதர் எழுந்தருளியுள்ளார். அதற்கு முன் மண்டபம் இன்னும் சிறிது அகலமுள்ளது; இதில் வடக்குப் பக்கத்தில் உற்சவ மூர்த்திகள் வைக்கப்பெற்றுள்ளன; சூரியதேவரது உருவம் பெரிதாக உள்ளது. இம் மண்டபத்துக்கு முன் உள்ள மண்டபம், கோயில் கட்டிய காலத்துக் குப் பிற்காலத்தில் கட்டியதாதல் கூடும். இதில் பன்னிரண்டு தூண்கள் உள்ளன.

விசுவநாதர் விசாலாக்ஷி :

முகமண்டபத்துக்கு முன் உள்ள மண்டபத் தில் வடகிழக்கு மூலையில் ஒரு இலிங்கம் உள் ளது. அதனைக் காசிவிசுவநாதர் என்கிறார்கள். அம் மண்டபத்தில் வடக்குச் சுவரில் விசா லாட்சியம்மை எழுந்தருள்விக்கப் பெற்றுள் ளார். இவ்விருவரும் இருக்கும் இடத்தை நோக்கின், இத் திருக்கோயில் கட்டப்பெற்ற காலத்திலேயே இவர்கள் எழுந்தருள்விக்கப் பெற்றனர் என்று கருத முடியவில்லை. பல பிற கோயில்களிலும் பல தலத்து இலிங்கங்களும் எழுந்தருளச் செய்திருப்பது போல, இத்தலத் திலும் காசியாத்திரை செய்த ஒருவர் ஸ்ரீ விசுவ நாதர் விசாலாட்சியை எழுந்தருள்வித்திருப் பார் என்று கொள்ளலாம், இவர்களுக்கு என்று அமைத்ததாகவே இங்குள்ள சண்டேசர் கோயிலைக் கொள்ளலாம்.

சூரிய வழிபாடு :

சூரியனை வழிபடுதல் தொன்று தொட்டு இந்நாட்டில் உண்டு. தொல்காப்பியனாரும் ''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற, வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும், கடவுள் வாழ்த் தொடு கண்ணிய வருமே'' என்ற நூற்பாவில் கடவுள் வாழ்த்துக் கூறுதலோடு, ஞாயிறு திங்கள் ஆகியவற்றுக்கும் வாழ்த்துக் கூறுதலைக் கூ யுள்ளார். கொடிநிலை என்பதற்கு ஞாயிறு மண்டிலம் என்றும், வள்ளி என்பதற்குத்

திங்கள் மண்டிலம் என்றும் நச்சினார்க்கினியர் பொருள் கூறுவர்.

" ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான்."

என்று சிலப்பதிகாரத்து வாழ்த்துக் கூறியுள்ளமை, அந்நாளைய மக்கள் சூரியனை வழிபட்டமைக்கு எடுத்துக்காட்டாகும். சிலப்பதிகாரம், கனாத்திறம் உரைத்த காதையில், " பகல்வாயில் உச்சிக்கிழான் கோட்டம் " என்றுள்ளதினின்று சூரியனுக்கு அந்நாளில் புகார் நகரில் தனிக்கோயில் இருந்தமை புலப்படுகிறது. எனவே சூரியனுக்குத் தனிக்கோயில் எடுப்பித்து வழிபடும் வழக்கம் தொன்று தொட்டுத் தென்னாட்டில் உண்டு என்பது தெரியவரும்.

தனிக்கோயில்கள் :

சூரியனைத் திருக்கோயில்களில் ஒன்பது கோள்களில் ஒன்றாக வைத்தும், தனியாக வைத்தும் வழிபடுவது உண்டு. திருக்குடந்தைக் கீழ்க் கோட்டம், வைகன் மாடக்கோயில், நன்னிலத்துப் பெருங்கோயில், திருப்பருதிநியமம், திருஆவிநன்குடி என்ற சிவ தலங்களில், இறைவனைச் சூரியன் பூசித்துப் பேறுபெற்றமையின், இத் தலங்களில் சூரியனுக்குத் தனியிடம் அமைக்கப்பெற்றுள்ளது.

கல்லெழுத்துக்களில் :

பரகேசரிவர்மரது 9-ஆவது ஆட்சியாண்டுக் குரிய திருப்பாற்றுறைக் கல்வெட்டில் (1907-இன் 197), சூரியதேவர் படிவம் குறிக்கப்பெற்றுள்ளது. முதலாம் இராசராசனது 12-ஆவது ஆட்சியாண்டிற்குரிய உடையார் குடிக் கல்வெட்டில் (1920-இன் 606), பெரிய குந்தவையார் சூரியதேவருடைய படிமத்தை எழுந்தருள்வித்து, ஒரு விளக்கு எரிக்க 25 கழஞ்சு பொன் அளித்ததாக உள்ளது. விருத்தாசலத்தில் சூரியதேவர் முன் விளக்கு எரிப்பதற்கு 45 ஆடுகள் அளிக்கப்பெற்றதாக ஒரு கல்லெழுத்து (1918-இன் 56) இயம்புகின்றது: மூன்றாம் இராசராசனது 21.வது ஆட்சியாண்டுக்குரிய கோவிலூர்க் கல்வெட்டின் (1908-இன் 198 ; 1909, II 51-4) உசாத்தான முடையார் கோயிலில் கீழைத் திருநடையில் வடபுறத்தில் உள்ள சூரியதேவருக்கு வழிபாடு நடத்த விக்கிரமாபரணபுரத்து நகரத்தார் நிலமளித்த செய்தி சொல்லப்பெற்றுள்ளது. இவற்றாற் பல கோயில்களிலும் தனியாக சூரியதேவரை எழுந்தருள்வித்து வழிபட்டமை நன்கு புலனாகும்.

நவக்கிரகங்கள் ;

நவக்கிரகங்களைச் சிலாவிக்கிரகங்களாகச் சில திருக்கோயில்களில் ஆகம முறைப்படியும், சில திருக்கோயில்களில் வேத (வைதிக) முறைப்படியும் பிரதிஷ்டை செய்வர். சூரியன் பதும பீடத்தின் நடுவே இருக்கச் சந்திரன் புதன் பிரகஸ்பதி சுக்கிரன் நான்கு நேர்திக்கிலும், அங்காரகன் சனி இராகு கேது இந்நான்கும் நான்கு கோணதிக்கிலும் அமைந்து நிற்கப் பிரதிட்டை செய்வது சிவாகமப் பிரதிட்டையாகும். திருச்சி வித்துவான் திரு பட்டுசாமி ஓதுவார் அவர்கள் எழுதியுள்ள " நவக்கிரக மாண்பு " என்ற நூலில் இதனைக் காணலாம். இந்த முறையில்தான் சூரியனார் கோயிலில் நவக்கிரகங்கட்கும் கோயில்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

கங்கை கொண்ட சோழபுரத்தில் :

ஒரே கல்லில் ஒன்பது கோள்களும் கங்கை கொண்ட சோழபுரத்தில் செதுக்கப்பெற்றுள்ளன. அதனைச் " சூரிய யந்திரம் " என்கின்றனர். 16, 12, 8 தளங்களையுடைய பத்மங்கள், ஒன்றன்மேல் ஒன்று இக்கல்லில் அமைக்கப் பெற்றுள்ளன. கீழ்த்தளத்தில் அருணன் 7 குதிரைகளுடன் இருப்பது காணத்தக்கது. கந்தர்வ கின்னரர் உருவங்களும், நான்கு மூலைகளிலும் உண்டு. ஏறத்தாழ 90 செ.மீ. × 90 செ.மீ. × 45 செ,மீ. அளவில் இவ்வொற்றைக் கல் நவக்கிரகம் அமைந்துள்ளது. இதில் சூரியன் நடுவேயிருக்க மேற்கில் சனி, வடமேற்கில் கேது, வடக்கில் குரு, வடகிழக்கில் புதன், கிழக்கில் சுக்கிரன், தென்கிழக்கில் சந்திரன், தெற்கில் செவ்வாய், தென்மேற்கில் இராகு இருத்தல் காணலாம். இது வைதிக முறைப்படி அமைக்கப்பெற்றதாதல் வேண்டும். ஃ

இந்தோனேசியாவில் இந்து சமயப் பிரசாரம்

[திருவாசகமணியின் திருத்தொண்டு]

1970-வது ஆண்டு நவம்பர்த் திங்கள் தீபாவளி தினத்தன்று இங்கிருந்து இந்தோனேசியா சென்ற 'திருவாசகமணி' திரு, கே. எம். பால சுப்பிரமணியம் அவர்கள், ஐம்பத்தைந்து நாட்கள் அந்நாட்டில் தங்கித் தொண்டாற்றிவிட்டு, 1970-வது ஆண்டு டிசம்பர் மாதம் இருபத்தொன்றும் தேதி மீண்டும் மலேசிய நாடு வந்து சேர்ந்தார். இங்கே, வரும் மார்ச்சு மாதம் நான்காம் தேதி வரைத் தங்கியிருந்து அதன் பின் சிங்கப்பூர் முதலிய பிறநாட்டுச் சுற்றுப் பயணத்தை அவர் மேற்கொள்ளுவார்.

மேடானில் தொண்டு :

வடசுமத்திராவின் தலைநகரான மேடானில் உள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் நிர்வாகக் குழுவினரின் அன்பழைப்பின் பேரில் அங்குச் சென்ற திருவாசகமணி; அவ்வழைப்பு வரும் முன்னரே அந்த மாரியம்மன் கோவிலையும் அவள் திருவுருவத் திருக்காட்சியையும் தம் கனவில் கண்டு களித்திருந்தார்.

இதன் விளைவாக, அவர் மேடான் சென்ற சில நாட்களில் ''மேடான் மகா மாரியம்மன் திருப்பதிகம்'' என்றதொரு நூல் திருவாசக மணி அவர்களால் எழுதப்பெற்று அது மேடான் மாரியம்மன் கோவில் ஸ்தாபனத்தாரால் அச்சிடப்பெற்றது. 1970-வது ஆண்டு டிசம்பர் மாதம் ஒன்பதாம் நாள் அன்று திருவாசகமணியின் அறுபத்து மூன்றாவது பிறந்த நாளைக்கொண்டாடிய விழாவில் இந்நூல் ஆசிரியரால் அத்தேவி சந்நிதியில் பாடப்பெற்றுப் பன்னூறு மக்கள் கூடிய அச்சபையில் அரங்கேற்றப்பட்டது, அப்போது அந்த இந்து மக்களின் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாய் இருந்தது.

இந்து சமயத் தொண்டு :

மேடான் நகரில் மட்டும் சுமார் நாற்பத்தைந்து நாட்கள் தங்கியிருந்த திருவாசகமணி ஆற்றிய தமிழ்ச் சொற்பொழிவுகளில் இருபது பேச்சுக்கள் மகாமாரியம்மன் கோவிலிலேயே நிகழ்த்தப்பட்டவையாகும், அவையனைத்தும் இந்து சமயம் பற்றியவைகளே. விநாயகர் தத்துவம், முருகன் தத்துவம், சிவலிங்கத் தத்துவம், நடராஜத் தத்துவம், திருநீற்று மகிமை, பஞ்சாட்சர விளக்கம், திருவாசகம், சிவ-விஷ்ணு அபேதம், சிவக்காட்சி, அடியார் பெருமை, அப்பர், காந்தி, காரைக்கால் அம்மையார், அப்பூதி அடிகள், ஆலய வழிபாடு, கார்த்திகைத் தீபம், திருக்குறள் அறத்துப்பால் போன்ற பல வகைப்பட்ட தலைப்பில் திருவாசகமணி நிகழ்த்திய சொற்பொழிவுகளும், பற்பல மக்களால் கூட்டத்திலும் தனிமையிலும் அவ்வப்போது எழுப்பப்பட்ட சந்தேக நிவர்த்திகளும், கேட்கப்பட்ட வினாக்களுக்கு அவரளித்த விடைகளும் எல்லாமாகச் சேர்ந்து, மேடானில் உள்ள சுமார் பத்தாயிரம் இந்துத் தமிழர்களிடையே ஒரு சமயப் புரட்சியையே உண்டாக்கிவிட்டன. இதுவரை வரலாறு கண்டிராத அளவுக்கு மேடான் நகர இந்து மக்களிடையே புதியதொரு புத்துணர்வும், பெருமிதமும், புனிதமான கடவுட் பக்தியும், விஷய ஞானமும், விழிப்பார்வமும் முகிழ்த்தெழுந்து அவர்களது ஆன்மாக்கள் எல்லாம் ''புரோதாயம் ஆடப்பெற்று''ப் புனிதக்

கனல் ஒளிபரப்பி ஒளிரலாயின, இத்தகைய சமயப் புதுவாழ்வில் பெரும் பங்குகொண்டு பேரின்பம் நுகர்ந்தவர்களுள் அந்நகரப் பெண் மக்களே பெரும்பான்மையினர் எனக் கூறின், அது மிகையாகாது.

இந்து வாலிபர் சங்கம் :

மேடான் நகரில் நடைபெற்ற மற்ரெரு பொதுக்கூட்டத்தில் மேடானில் உள்ள இந்தோனேசிய இந்து வாலிபர் சங்கத்தினர் திருவாசகமணிக்கு வரவேற்பளித்து வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்துக் கௌரவித்தனர். அக்கூட்டத்தில் பேசிய திருவாசகமணி மேடான் வாழ் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து ஓங்கி உயர வேண்டுவதுபற்றி உணர்ச்சியுடன் விளக்கினர். அவரது பிரிவு உபசாரக் கூட்டத்திலும் அந்த வாலிபர் சங்கத்தினர் உற்சாகத்துடன் கலந்துகொண்டு திருவாசகமணிக்கு அவர் தொண்டினைப் பாராட்டிப் பத்திரம் வாசித்து வழங்கினர். மகாமாரியம்மன் கோவிலைச் சேர்ந்த இந்து வாலிப சங்கமும், திருவாசக மணியைப் பாராட்டிக் கௌரவித்தது.

ஆங்கிலப் பேச்சுக்கள் :

திருவாசகமணி மேடானில் ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவுகள் மூன்று, அவற்றுள் ஒன்று மகாத்மாகாந்தியைப் பற்றியதாகும். இந்தியக் கான்சல் ஜெனரல், ஸ்ரீ செத்தி அதற்குத் தலைமை வகித்தார். மற்ரெரு பேச்சு, சுவாமி விவேகானந்தரைப் பற்றியதாகும், இவற்றுள் குறிப்பிடத்தக்க மூன்ருவது ஆங்கிலப் பேச்சு மேடான் அமெரிக்கச் செய்தி நிறுவனத்தில் ஆற்றப்பட்டதாகும். பட்டம் பெற்ற இந்தோனேசிய முஸ்லீம் வாலிபர்கள் நிறைந்த அக்கூட்டத்தில் ''மூன்று சமயங்களின் ஒற்றுமை'' பற்றிப் பேசிய திருவாசக மணியிடம் இந்துமதக் கொள்கைகள்பற்றி அவ் வாலிபர்களால் வினவப்பட்ட சிக்கலான, நுணுக்கமான எண்ணிறந்த கேள்விகளுக்கெல்லாம் அவர் ஐயத்திற்கிடமில்லாத, தெளிவானதும் ஆணித்தரமானதும் ஆன விடைகளை அளித்து அவர்களது மனப்பூர்வமான பாராட்டுதலையும் பெற்றுர். இந் நிகழ்ச்சி மூலம் இந்தோனேசியரிடை இந்துமதம் பெரு மதிப்பைப் பெறலாயிற்று என்று இந்துக்களும் பாராட்டிப் பெருமிதம் அடைந்தனர்.

பிற சமயங்கள் :

ஸ்ரீமகா மாரியம்மன் கோவிலில் இந்து மதம் பற்றியே திருவாசகமணியால் ஆற்றப் பட்டு வந்த தமிழ்ச் சொற்பொழிவுகள் அனைத்திலும் ஒரு தனிச் சிறப்பு என்னவென்ருல், அவைகளில் கலந்து கொண்டு இன்பமும் பயனும் அநுபவித்தவர்களுள் எண்ணிறந்த இந்து மக்கள் மட்டும் அல்லாமல், பற்பல கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள், பௌத்தர்கள் ஆகிய பிற மதத்தினரும் இருந்தமைதான், இதற்குக் காரணம். திருவாசமணியின் சொற்பொழிவுகளினூடே இந்து சமய விளக்கங்களுடன் கூடப் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற பிறசமயக் கோட்பாடுகளுடன் கூடிய ஒப்புமை விளக்கங்களும் பெருவாரியாக விரவிக் கிடப்பதுதான். சமயக் காழ்ப்பின்றிச் சமயப் பிரசங்கம் ஆற்றுவதில் திருவாசகமணி தமக்கெனத் தனிப்பாணி ஒன்றினை வகுத்துக்கொண்டுள்ளதை அனைவரும் பாராட்டினர்.

ஆதலால் அவர், சர்வ சமயத்தினரும் அழைக்கப்பட்டிருந்த மற்றுமொரு கூட்டத்தில் இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மூன்று சமயங்களின் ஒற்றுமைக் கொள்கைகள் குறித்து விளக்கித் தமிழில் பேசினர். இதன் மூலம் மூன்று மதத்தினர் இடையே இருந்த மாறுபாடுகளும் வேறுபாடுகளும் மறைந்து மன ஒருமைப்பாடும் இன ஒருமைப்பாடும் பிறந்து மகிழ்ச்சிச் சூழ்நிலைமை சிறந்து வளரலாயிற்று.

பௌத்தம் :

திருவாசகமணி மேடானில் பேசிய இறுதிக் கூட்டம் மேடான் புத்த சங்கத்தில் நடைபெற்றதாகும். பௌத்தமதத்தைச் சார்ந்த ஏராளமான ஆண்களும் பெண்களும் விஜயம் செய்திருந்த அக் கூட்டத்திற்குப் பன்னூறு இந்துக்களும் வந்திருந்தனர். அப்போது பௌத்த மதம் பற்றித் தமிழில் பேசிய திருவாசகமணி இந்துமதம் பௌத்தமதம் பற்றிய ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கியதோடு, தமிழ் மக்கள் மதவேறுபாடு கருதாமல் மன

ஒற்றுமையோடும் இன ஒருமைப்பாட்டோடும் வாழுமாறு வற்புறுத்தினர். பல பேச்சாளர்கள், இந் நகர மக்களிடை ஒற்றுமை யுணர்வை நிலை நாட்டிய திருவாசகமணியைப் பாராட்டிப் பேசினர். புத்த சங்கத்தின் சார்பில் துவராடையும் வரவேற்பிதழும் வழங்கப்பட்ட திருவாசகமணிக்குப் பௌத்தப் பெண்கள் சார்பில் மோதிரப் பரிசொன்றும் அளிக்கப் பெற்றது.

வழியனுப்பு :

சுமார் நாற்பத்தைந்து நாட்கள் தம்மிடையேதங்கித் தெய்வத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றி மகிழ்வித்த திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமண்யத்திற்கு, மேடான் மக்கள் மிகச் சிறந்ததொரு பிரிவு உபசாரக் கூட்டம் நடத்தினர். ஏராளமான ஆண்களும் பெண்களும் ஆர்வத்துடன் குழுமியிருந்த அக் கூட்டத்தில் ஸ்ரீ மகா மாரியம்மன் சார்பிலும், இந்து தர்ம அருள் நெறி இயக்கச் சார்பிலும் முறையே பொன்னாடைகளும், மாலைகளும் மோதிரங்களும் பாராட்டிதழ்களும் திருவாசகமணிக்கு வழங்கப் பெற்றன. கோலாலம்பூர்த் திருவருட் செல்வி சரளாதேவி ராஜசுந்தரம் அம்மையாருக்கும், மாதர் சங்கத்தால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப் பெற்றது.

'சமரசச் சைவமணி''

அவ்வமயம், திருவாசகமணியின் சமரசச் சன்மார்க்க நெறித் தொண்டினைப் பாராட்டி மேடான் இந்து தர்ம அருள் நெறி இயக்கத்தவரால் ''சமரசச் சைவமணி'' என்ற ஒரு பட்டப் பெயரும் அவருக்குச் சூட்டப் பெற்றது. அவருக்குள்ள பட்டப் பெயர்கள் எட்டோடு இதுவும் ஒன்பதாவதாகச் சேர்ந்துள்ளது.

திருநீற்றுமகிமை :

மேடானில் உள்ள பத்தாயிரம் இந்துத் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளபுலால் மறுத்தலின் அவசியம் பற்றிய புத்துணர்ச்சியும் திருநீற்று மகிமையின் உணர்வும், திருவாசகமணியின் திருத்தொண்டின் நிரந்தரமான பலன்களில் இரண்டு ஆகும். ஒரு சில படித்த விடாக்கண்டர்களைத் தவிர ஏனைய ஆண்களும் பெண்களும் புலாலுணவை அறவே விட்டொழிக்கத் தம் வாழ்வியலும் சூழ்நிலையும் இடம் கொடாவிடினும், தமது உள்ளம் அறிய அவ்வுணவின் இழிவையும் பாவத்தையும் நன்கு உணர்ந்து விட்டனர். ஒருசில உறுதி மனம் படைத்தோர் புலாலை அறவே விட்டொழித்து விட்டனர். பெரிய புராணத்தின் அடியார்களில் வாழ்க்கையின் மூலம் திருநீற்றின் மகிமையை நன்கு உணர்ந்துகொண்ட மேடான் வாழ் இந்துத் தமிழர்களிற் பெரும்பாலோர் திருநீற்றை அணிவதோடுகூட, அதனைத்திருவாசகமணியிடம் வணங்கிப்பெற்று அணிவதில் ஆர்வம் காட்டினர். பலதரப்பட்ட உடல் நோய், மனநோய் முதலி வற்றுற் பீடிக்கப்பட்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் நாள்தோறும் திருவாசகமணியைக் கண்டு வணங்கித் திருநீற்றினைப் பெற்று அணிந்து, மன நிறைவுடன் சென்ற வண்ணம் இருந்தனர். திருநீறுகிய பிரசாதம் சர்வ நோய்களையும் தீர்க்கும் ஒப்பற்றதொரு மருந்து என்ற நம்பிக்கை, மேடான் இந்துக்களிடை அசைக்க முடியாதபடிவேரூன்றிவளர்ந்துள்ளது

ஜகர்த்தாவில் தொண்டு :

இந்தோனேசியாவின் தலைநகராகிய ஜகர்த்தாவிற்கும் விஜயம் செய்த திருவாசகமணி, அங்கே சுமார் பத்து நாட்கள் தங்கியிருந்தார். அங்குள்ள இந்தியத் தூதர் திரு. நாயர்முதலியோரைச் சந்தித்த திருவாசகமணி, இந்தோனேசியாவின் ஜனாதிபதியாகிய, புன்முறுவல் தலைவர், ஜெனரல் சுகர்த்தோவையும், அவரது மனைவியையும், சந்தித்துத் தமது திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு நூற் பிரதி ஒன்றினை அவருக்குத் தம் அன்பளிப்பாக வழங்கினார். மேலும், இந்தோனேசிய வெளி விவகார மந்திரி டாக்டர். ஆதம் மாலிக்கையும், அவரது மனைவியையும், மக்கள் காங்கிரஸ் தலைவர் ஜெனரல் நாசூத்தியான் தம்பதியரையும் சுதந்திரச் சிற்பிகளுள் ஒருவராகிய டாக்டர் மகமத் ஹட்டா தம்பதியரையும், ஜகர்த்தாவின் கவர்னர், மேஜர் ஜெனரல் ஆலி ஸிதிக்கெயின் தம்பதியரையும் திருவாசகமணி சந்தித்தார்.

ஆங்கிலப்பேச்சுக்கள் :

''மகாத்மா காந்தி'' ''சுவாமி விவேகானந்தர்'' ''மும்மதச் சம்மதம்'' ஆகிய தலைப்பில் மூன்று இடங்களில் திருவாசகமணி ஆங்கிலச் சொற்பொழி வாற்றினர். சிந்தியரும், பாரசிகரும் கிறிஸ்தவர்களும் அவற்றைப் பாராட்டினர். அவர் ஜகர்த்தாவின் சீக்கியரின் குருத்துவாராவில் 'குருநானக்' பற்றி ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவு குறிப்பிடத்தக்கதாகும். அது சீக்கியரால் புகழப்பட்டது. இவ்வளவு சிறப்பான ஆங்கிலப் பேச்சைத் தாம் அதுவரை கேட்டதில்லை என்று அனைவரும் கூறிமகிழ்ந்தனர்.

வானொலியும் - பத்திரிகைகளும் :

ஜகர்த்தாவிலுள்ள 'டைம்ஸ்' 'இந்தோனேசியா அப்சர்வர்' ஆகிய இரண்டு ஆங்கிலத் தினசரிகளும் திருவாசகமணியைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களை முறையே வெளியிட்டன, அத்துடன், இந்தோனேசியா வானொலியில் அவரது பேட்டி ஆங்கிலத்திலும், இந்தியிலும் ஒலிபரப்பப் பெற்றது.

அதேபோல, மேடானில் வெளியாகும் ஐந்து தினசரிகள் திருவாசகமணியின் செய்திகள் பலவற்றை இந்தோனேசிய மொழியில் அவ்வப்போது பிரசுரித்து வந்துள்ளன. மேடான் வானொலி நிலையமும் திருவாசகமணி பற்றிய செய்தியைத் தனது 'வார்த்தா பெரிட்டாவில்' மூன்று முறைகள் ஒலிபரப்பிற்று. திருவாசகமணியின் மேடான் நிகழ்ச்சிகளுக்கெல்லாம் இவைகள் சிகரம்போல் திகழ்ந்தன, மேடான் ஸ்ரீ மகா மாரியம்மன் கோவிலின் தலைவர் திரு. அ, ராமசுவாமியும், பொதுச் செயலாளர் திரு. ஒ. வி. வெங்கடாசலமும் ஏனைய நிர்வாகக் குழுவினரும், அருள்நெறி இயக்கத்தினரும் ஆற்றிய தொண்டும் உதவியும் என்றும் மறக்க முடியாதவை ஆகும்.

திருக்குறள் திருவா சகம்எனும் இவற்றைச்
சிறப்புற ஆங்கில மொழியில்,
கருத்தெழில் ஓங்கக் கவின்மிகப் பெயர்த்த
கலைத்திரு வாசக மணிதான்,
திருத்தக இந்தொ னிஷியநாட் டினுக்குச்
சென்றவண் இந்துநற் சமயம்
விரித்துரைத் துணர்த்தி வியன்பணி, புரிந்தார் !
வித்தகர் அவர்நீடு வாழ்க !

—ந. ரா. முருகவேள்

மதிப்புரை

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி: சிறந்த பெருங் கவிஞரும், திருமால் நெறிச் செல்வரு மாகப் புகழோங்கித் திகழும் மூதறிஞர் பெருந்தகையார், திருப்பத்தூர் திரு கா. அ. ஷண் முக முதலியார் அவர்கள் இயற்றியது இந்நூல், இவர்கள் பல ஆண்டுகட்கு முன்னரே நளாயினி வெண்பா, இராகவன் புகழ்மாலை முதலிய இலக்கியநலமும் கவிநலமும் சிறந்த தெய்விக நூல்களை இயற்றி அளித்திருப்பவர்கள். இவர்களின் செந்தமிழ்ப் புலமையும், சிறந்த கவிதைத் திறனும், உயர்வற உயர்ந்த பண்பொழுக்க நலன்களும், பிறவும் எவரும் வியந்து போற்றும் தகையனவாகும்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்னும் இந்நூல், ''அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் பிஞ்சாய்ப் பழுத்தவள்'' ஆகிய ஸ்ரீ ஆண்டாளின் வரலாற்றை அரி சமய தீபம் — ஆருயிரப்படி குரு பரம்பரை — திவ்விய சூரி சரிதம் முதலிய நூல்களைத் தழுவித் தூய இனிய தொண்ணூறு எண்சீர் விருத்தப் பாக்களால் எவருள்ளமும் கொள்ளை கொள்ளும் வகையில் அழகொழுகப் பாடி விளக்குகின்றது.

ஆசிரியருக்கு நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களிலுள்ள செவ்விய புலமையும், ஸ்ரீவைணஷ்ண திவ்விய தேசங்களிலுள்ள எல்லையற்ற ஈடுபாடும்; ஸ்ரீ வைஷ்ணவ சாத்திரங்கள் சம்பிர தாயங்கள் ஆகியவற்றிற் பல்காற் பயின்று பழகித் தேர்ந்து தெளிந்துள்ள ஞான நலத்தின் முதிர்ச்சியும், நினைத்தொறும் நினைத்தொறும் மிக்க வியப்பினை விளைவிக்கின்றன. இதன் கண் பெரியாழ்வாரின் வரலாறு, ஸ்ரீ ஆண்டாள் வரலாறு என்பன மட்டுமேயன்றி, திருவரங்க விமானம்—பாவை நோன்புபற்றிய செய்திகள்—திவ்விய தேசங்களின் சிறப்புகள் முதலிய மற்றும் பற்பல செய்திகளும் கூட, மிகவும் சுவை பெருக விவரிக்கப் பெற்றுள்ளன ''நாச்சியார் திருமொழி''யின் திருப்பதிகங்கள் பதினான்கிற்கும் தனித்தனியே ஒவ்வொரு பாட லிற் கருத்துச் சுருக்கம் தேம்பிழி சாரமாகச்செவ்விதின்தொகுத்துத் தரப்பெற்றுள்ளமை சாலவும் மகிழ்ந்து புகழ்ந்து போற்றுதற் குரியது.

ஆண்டாளின் திருமண நிகழ்ச்சிகளும், அவற்றில் நம்மாழ்வார் மதுரகவி முதலிய ஆழ்வார்களும், திவ்விய தேசத்து எம்பெருமான்களும், கலந்துகொண்டு மகிழ்ந்து வாழ்த்து தல் பற்றிய புனைவுரைகளும் பிறவும், காவிய நிலைக்கேற்பக் கவின்மிகப் பாடப் பெற்றிருக்கும் பான்மை, அன்பர்கள் அனைவரும் படித்துணர்ந்து சுவைத்துப் பயன்கொள்ளத்தக்கது. அரும் பதவுரையும் விளக்கமும் சேர்த்திருத்தல், இந்நூலின் பயனை மிகுதிப்படுத்துகின்றன. சிறந்த நல்ல தெய்விக நூல். விலை குறிக்கப்பெறவில்லை; கிடைக்குமிடம்- திரு. கா அ. ஷண்முக முதலியார், அஞ்சற்பெட்டி எண் 11, திருப்பத்தூர், வட ஆற்காடு மாவட்டம்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடிதன் மாட்சியினைப்
பாடிக் கொடுத்தார்; பலநலத்தால்—நீடித்த
செல்வர் திருப்பத்தூர்ச் சீர்க்கா. அ. சண்முகனார்!
சொல்வதென்யாம்? தூயதவர் தொண்டு!

—ந. ரா. முருகவேள்

திருவாய்மொழியின் தெளிபொருள்

நாவீறர் திரு. நா. ஸ்ரீ காந்தராமாநுஜ சுவாமிகள்,
ஸ்ரீ புனித நிலையம் காரைக்கால்

முன்னுரை :

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து'' என்று பாராட்டிப் புகழப்பெறும் சிறப்பு மிக்குடையது, நமது மேன்மை சால் தமிழ்நாடு, அகத்தியர் தொல்காப்பியர் முதலிய் தமிழ்ப் பெருஞ்சான்ரோர் தோன்றிய காரணம்பற்றி, அக்காலத்துத் தோன்றியுள்ள பனம்பாரனர். ''தமிழ் கூறும் நல்லுலகம் என்று இத்திருத் தமிழ்நாட்டைச் சீரிய வகையில் கவினுறப் பாராட்டுவராயினர்.

இலக்கண நூல் வகுத்துத் தந்தருளிய பெருமேன்மை, அகத்திய முனிவருக்கும் தொல்காப்பியனருக்கும் உண்டு. இத்தகு பெருமை சான்ற பெரியார்கள் எழுந்தருளியிருந்த ஏற்றம்பற்றி, இவ்வுலகம் 'நல்லுலகம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.

''தக்ஷிணதிக் க்ருத்யேந சரண்யா புண்ய கர்மண'' என்ற சிறந்த வடமொழி வாக்கியம் ஈண்டு நினைவில் எழுகின்றது, 'நல்லோனை அகத்திய முனிவனல் தென் திசையானது நமக்குப் புகலிடமாயிற்று' என்று, அந்நாளைய வடமொழிப் புலவர்கள் புகழ்ந்து பேசுகின்றனர். இதனல், வடமொழிப் புலவர்களும் போற்றி விரும்பத்தக்க சீர்மை வாய்ந்தது, தேனினும் இனிய தமிழ்மொழி என்பது துணியப்பெறுகின்றது.

அப்பெற்றிய முது பெருமொழியாம் தமிழில், மக்கள் மெய்யறிவு பெற்றுப் பெருநலம் பெறுவதற்காகப் பற்பல நூல்கள் தோன்றி நிலைபேறு பெற்றிருக்கின்றன. அந்நூல்கள் அனைத்தினும் திருத்தமிழ் மறையாம் திருவாய்மொழி, தலைசிறந்தது ஒன்ருகும்.

திருவாய்மொழியின் சீர்மை :

திருவாய்மொழி எனும் திவ்வியப் பிரபந்தம், தெய்வக் கவிஞரான ஸ்ரீ சடகோபர் எனும் சுவாமி நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பெற்றது என்பது உலகறிந்த செய்தியாகும். இத் திருவாய்மொழியின் சீர்மை செப்புந்திறத்ததன்று, உயிர்கள் செய்த உயர் தவப்பேறு அடியாகத் திருவாய்மொழி இவ்வுலகில் திருவவதரிக்கலாயிற்று என்பது உண்மையினும் உண்மையாகும்,

வடநாட்டவரான ஸ்ரீ உலோகசாரங்கமா முனிவர், தென்னட்டில் திருவாய்மொழி திருவவதரித்துள்ளமையைக் கேட்டு வியந்து, அக்கணமே வடநாட்டினின்றும் தென்னட்டிற்கு விரைந்து வந்தடைந்தனர் என்று சரித்திரம் கூறும் சான்று, சிந்தனைக்கு இனிமை பயப்பது ஒன்ருகும்.

திருவாய்மொழி 'ஆராவமுது' என்னும் திருப்பதிகம் பற்றிய முதற் பாசுர விரிவுரையில், விண்ணும் மண்ணும் விலைபெருத பேரறிவாளரான சுவாமி நம்பிள்ளை, இவ் இனிய வரலாற்றை இனி தருளிச் செய்துள்ளார். அதாவது,

''உத்தர பூமியிலே லோக சாரங்க மகாமுனிகள் வர்த்தியா நிற்க, இங்குத்தையான் ஒருவன் அங்கேறச் செல்ல, 'பிள்ளாய், தக்ஷிண பூமியில் விசேஷம் என் ?' என்று கேட்கத் திருவாய் மொழி என்று ஒரு பிரபந்தம் அவதரித்து சிஷ்டர்கள் பரிக்கிரகித்துப் போரக் கொண்டாடிப் போகா நின்றூர்கள்' என்ன, அதிலே உனக்குப் போவது ஒரு சந்தை சொல்லிக் காணுய்'' என்ன, ''ஆராவமுதே'' என்கிற இத்தனையும் எனக்குப்போம்' என்ன, நாராயணுதி நாமங்கள் கிடக்க, இங்ஙனேயும் ஒரு நிர்த்தேசம் உண்டாவதே என்று அதிருப்தராய், இச்சொல்லு நடையாடுகிற தேசத் தேறப்போவோம்' என்று, அப்போதே புறப்பட்டுப் போந்தார்' என்பன, முப்பத்தாறுயிரப் படிப்பேருரையான ஈட்டிற் கண்ட வாக்கியங்களாகும். இதனுல் அளப்பரிய தமிழின் இனிமையை அறிந்து வடநாட்டினர் ஈடுபட்டனர் என்பது தெளிய விளங்குவது ஒன்ருகும்.

ஆழ்வார் பரோபதேசம் :

இங்ஙனம், தேனினும் இனிய தெய்வத் தமிழ் மொழியில் 'இன்ப மாரியாய்' எழுந்து இலங்கும் தமிழ் மறையாம் திருவாய்மொழியில் நமது குலநாதரான சுவாமி நம்மாழ்வார் ''வீடுமின் முற்றவும்'' என்னும் இரண்டாம் திருவாய்மொழி மூலம், அரிய பல பேருண்மைகளை அருளிச் செய்தருளுகின்ருர். அடர்ந்த தமது பேரருளால், மக்களுக்கு அரிய அறிவுரை கூறி யருளுகின்ருர். அறப்பெரிய இறைவனை யொழிந்த உலக விடயங்களை அறவே விட்டு, இறைவனையே அரணுகப் பந்துக்கள், அங்ஙனம் பற்றினுல், நீங்கள் பெரும்பேறு பெற்று இன்புறலாம் என்று சொல்லியருளுகின்ருர்,

பயில இனிய பாசுரம் :

''வீடுமின் முற்றவும் வீடு செய்து உயிர், வீடுடையா னிடை வீடு செய்மினே''. குழவியிடத்தே துறந்த முதற் பெருங்குரவரான சுவாமி நம்மாழ்வார், உலகோர் விட வேண்டுவனவற்றைச் சொல்லி, அவைகளை விட்டு எம்பெருமானைப் பற்றுங்கோள் எனச் சொல்லியருளவேண்டும் முறை துறந்து, முந்துற முன்னம் '' வீடுமின் '' என்று விட்டு விடுங்கோள் என்று அருளிச்செய்வது, அவர் தமது சீரிய இயல்பினை இனிதே விளக்குவதாகும், நம் போன்ருர் மண்டிப்பற்றிக் கிடக்கும் உலக விடயங்களின் கொடுமை கண்டு அஞ்சி, அவற்றை அறவே விட்டுவிட்டு, இறைவனைப் பற்றுங் கோள் என்று, நாட்டுக்கு மன்ருடும் தம் நல்லியல்பு அடியாக அருளிச் செய்கின்ருர்.

அறியாச் சிறுவனெருவன் நஞ்சுடைய பாம்பு ஒன்றினைப் பிடித்துக்கொண்டு, கிடந்தால், அவனைக் கண்டார் முதலில், போடு; போடு என்று கூறிப் பின்னர், பாம்பு என்று சொல்லுவாரைப்போலேயும், இன்னும், ஒருவன் இல்லினுட்படுத்து உறங்கும்போது இல்லம் நெருப்புப்பற்றி எரியக் கண்டார். வந்துவிடு, வந்துவிடு என்று கூவிப் பின் நெருப்பு என்பாரைப் போலேயும், முந்துற இவரும் விடுங் கோள் என்று அருளிச் செய்கின்ருர்,

நல்லார் நவில் குரு கூர்ச் சடகோபரான இவர், தாம் இருக்குமிடம் வந்து, ''அடியேன் உய்திபெற நல்லுபதேசம் செய்தருளவேண்டும் என்று வணங்கி நிற்பான் ஒருவனுக்கு உபதேசிக்கின்ருர் அல்லர். பிறவித் துன்பம் அனைவர்க்கும் ஒத்திருக்கையால், விருப்பம் பிறந்த போதுயாராயினும் ஒருவருக்கு இது பயன்படட்டும் என்று அனைவர்க்குமாக, உபதேசித்தருளுகின்ருர் என்பது, ''வீடுமின்'' என்ற பன்மையினுல் அறிதல் தகும். எதை விடுவது என்ன முற்றவும் என்றருளிச் செய்கின்ருர். அகங்கார மமகாரங்களால் தூற்றப்பெற்று ஒதுக்கப்படும் அவற்றிலே, ஒரு சிலவற்றை வைத்துக் கொண்டு, சிலவற்றைமட்டும் விடுவது என்பது கூடாது, எல்லாவற்றையும் விடவேண்டுமாதலால், ''முற்றவும்'' என்று கூறியருளுகின்ருர்.

பாசுரப்பொருள் :

உலகில் மக்கள் அனைவரும் தம்மைப் போன்றே எம்பெருமானை அடைந்து இன்பம் துய்க்காது, உலகியல் விடயங்களில் ஈடுபட்டு உழல்வதைக் கண்டு, தம் அருளின் மிகுதியினுல் உலகினரை நோக்கி உபதேசித்தருளுகின்ருர்,

உலகப் பொருள்களின் மேற் செல்லும் எனது என்னும் புறப்பற்றையும், யான் என்னும் அகப்பற்றினையும் ஒழித்து; உம் உயிரை இறைவனிடம் சேருங்கள் என்று சொல்லியருளுகின்றார், இறைவனிடம் உயிரைச் சேர்த்தலாவது, இவ்வுயிர் எம்பெருமான் ஒருவனுக்கே உரியது என்றுணர்ந்து அவனை வணங்குதல் ஆகும். புறம்புண்டான இரு வகைப் பற்றுக்களையும் அறவே ஒழித்தல் அருமையான செயல் என்பது தோன்ற, ''வீடுமின் முற்றவும்'' என்ற இவ்வருளாளர் மீண்டும் ''வீடு செய்து'' என்று சொல்லியருளுகின்றார்.

''உம் உயிர் வீடுடையானிடை வீடு செய்மின்'' என்பது, உம் உயிரை வீட்டின்பத்திற்குரியவனை இறைவனிடம் சேருங்கள் என்றும், உயிரைத் தனக்கு வீடாக உடைய இறைவனிடம் சேருங்கள் என்றும், உம் உயிருக்கு வீடாக இருப்பவனிடம் சேருங்கள் என்றும் பல இன்சுவைப் பொருள் தந்து நிற்கும் அழகு ஈண்டு உணர்ந்து மகிழ்தற்குரியது. முற்றவும்—எல்லாவற்றையும், வீடுமின்—விட்டு விடுங்கள், வீடுசெய்து—அப்படி அறவே விட்டு, உம் உயிர்—உங்களுடைய உயிரை, வீடுடையானிடை — வீட்டின்பத்திற்குரிய இறைவனிடத்திலே, வீடுசெய்ம்மின்—சேர்ப்பியுங்கள்.

''வீடு செய்து'' என்கின்ற இந்தப் பதம் இல்லாமலே இருக்கலாம். ''வீடுமின் முற்றவும் உம்முயிர் வீடுயானிடை வீடு செய்மினே'' என்றிருந்தால் பாசுரம் பொருந்தி விடுமே; இடையே, வீடு செய்து' என்ற வினையெச்சம் ஏதுக்கு? என்று சிலர் எண்ணலாம். தீயனவற்றை விடுதல், நல்லனவற்றைப் பற்றுதல் என்னும் இரண்டு செயல்களுள், நல்லதைப் பற்றுதல் என்னும் இரண்டாம் செயல் நிறைவேறாமற் போனாலும், தீயனவற்றை விடுதல் என்னும் செயல்மட்டும் கூடினால் சாலும் என்ற கருத்தினைக் காட்டுதற்கே 'வீடு செய்து' என்று மீண்டும் சொல்லப் பெற்றதுபோதரும்.

முடிசூடி அரசாள வேண்டியவனை அரசகுமாரன் சிறைப்பட்டுக் கிடந்தானாகில், காட்டிலும் சிறை நீங்குகைதானே பெரும் பேறாயிருக்கும். அது போன்று பகவத் விஷயத்தைப் பற்றிக் களித்திருப்பதிற் காட்டிலும் உலக விஷயங்களை விட்டுத் துன்பம் தீருகையே நலமாயிருக்கும் அன்றோ.

திருமாலவன் கவியான சுவாமி நம்மாழ்வாரும், பொதுவாக உடையான் என்று அருளிச் செய்கின்றார்; அந்த உடையான் யாவன்? என்னில், ''வண்புகழ் நாரணன்'' என்று மேலே சொல்லியருளுகின்றார். வீடு பேற்றைப் பற்றிக் கூறும் வேதாந்த நூல், கடவுள்-உயிர்—உடல் ஆகிய இவற்றைப் பற்றிய மெய்யுணர்வை விளக்குதல், பிறவி ஒழிதற்கு அவ்விறைவனை வணங்குதல் என்ற முறையை விளக்குதல் என, இருபெரும் பிரிவுகளாக இருக்கும்.

அம்முறையில் இத்திருவாய் மொழியில் ''உயர்வற உயர் நலம்'' என்று தொடங்கும் முதல்திருப்பதிகம் மெய்யுணர்வைக் கூறுவது; ''வீடு மின்'' என்று தொடங்கும் இவ்விரண்டாம் திருப்பதிகம் வழிபடும் முறையைக் கூறுவது என ஆன்றோர் முடிவு செய்துள்ளனர். அன்றியும் முதல் திருவாய் மொழியால் பரம்பொருளாகிய திருமாலின் திருக்கலியாண குணச் சிறப்பு முதலிய பெரு நலன்களில் உளம் பதித்து, உயர் பேரின்பம் அடைந்த சுவாமி நம்மாழ்வார், இவ் விரண்டாம் திருவாய்மொழியில், உலகில் மக்கள் அனைவரும் அப்பேரின்ப மடையாமல், உலகியல் விடயங்களில் உளம் பதித்து உழல்வதைக் கண்டு அவர்களும் தம்மைப்போல் இறைவன் பால் உளம் பதியப் பெற்றால். அவர்களோடு தாமும் கலந்து அவ்வெம்பெருமான் சீர்மைகளைப் பேசி முன்னையிலும் சால இன்புறலாமே என்ற திருவுளத்தினாலும், பிறர் துன்பம் கண்டு சகியாத பேரருளாளர் ஆதலின், ''இவர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைவார்களாக'' என்ற கருணையினாலும், எல்லோரும் பேரின்பம் நுகர வாருங்கள்' என்று உலகினரை நோக்கி உபதேசித்தருளுகின்றார் என்றும் முடிவு செய்துள்ளனர். இவ்விரு முடிபுகளும் இவ்விரு திருவாய் மொழிகளுக்குப் பெரிதும் பொருத்தமானவைகளாயிருப்பதை உணர்ந்து பெரிதும் இன்புறலாம்.

அவன் சிறை நீங்கி முடிசூடி அரசாள்வதைக்

முடிவுரை :

இறையருள் கைவரப் பெற்ற தெய்வப் பெருஞ்சான்ஞேர் அனைவர்க்கும், குலநாதரான சுவாமி நம்மாழ்வார், தம்முடைய திருவுள்ளம் தமது திவ்விய அனுபவத்திற்குத் துணையாய் எவ்வாறு திருந்தி இசைந்திருக்கின்றதோ, அவ்வாறே உலகினர் அனைவரும் திருந்தும்படி, அவர்களை நோக்கி இறைவனைச் சார்ந்து முழு வாழ்வு பெற உபதேசித்தருளும் இத்திருவாய் மொழி, நம்மனோர்க்கு எய்ப்பினில் வைப்பாய், சேம நல் நிதியாய் இலங்கித் துலங்குவது ஒன்ருகும்.

வீடு செய்து மற்றெவையும்
மிக்க புகழ் நாரணன்ருள்
நாடு நலத்தாலடைய
நன்குரைக்கும் நீடுபுகழ்
வண்குடுகூர் மாறன்இந்த
மாநிலத்தோர் தாம்வாழ
பண்புடனே பாடியருள் பத்து.

The following are the particulars regarding the ownership of "THIRUKKOIL" the monthly newspaper published, as called for, by Rule 8 of the Registration of Newspapers (central) Rules. 1956.

FORM IV.

(See Rule 8)

1. Place of Publication	Nungambakkam, Madras-54.
2. Periodicity of Publication	Monthly.
3. Printer's Name	**Thiru. R. Rajagopalan,** General Printers, 14, Poonamallee High Road, Madras-3.
Nationality	Indian.
Address	14, Poonamallee High Road, Madras-3.
4. Publisher's Name	**Thiru. K. S. Narasimhan,** B. A, B. L., I. A. S. Commissioner, H.R.&C.E. (Admn.) Department.
Nationality	Indian.
Address	Nungambakkam, Madras-34.
5. Editor's name	**N. R. Murugavell,** M.A., M.O.L., Editor, H. R. & C. E. (A) Dept., Madras-34.
Address	Nungambakkam, Madras-34.
Nationality.	Indian.
6. Name and Addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital.	**Thiru. K. S. Narasimhan** B.A.B.L., I.A.S., Commissioner, H. R. & C. E. (Admn) Department, Madras-34.

I, K. S. Narasimhan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

Dated: 21—2—1971.
Madras-34.

Sd/- K. S. NARASIMHAN,
Publisher.

திருமுறைக் கருத்தரங்க விழா அருள் ஆசியுரை:

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம்

[திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்க சுவாமி திருக்கோயிலின் சார்பில், இந்து சமய அறநிலைய ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S. அவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றுத் தொடர்ந்து 1971 பிப்ரவரி மாதம் 12, 13, 14 தேதிகளில், முறையே வெள்ளி சனி ஞாயிறு ஆகிய மூன்று கிழமைகளில், நடைபெற்ற திருமுறைக் கருத்தரங்க விழாவிற்குத் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளியிருந்து வழங்கிச் சிறப்பித்த அருளாசியுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்,]

''மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்
துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்
பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.''

சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் மிகச் சிறந்த தெய்வ இலக்கியங்கள். அவை பரம்பொருளை அனுபவித்துணர்ந்த ஆசாரியர்களால், திருவருள்வழி நின்று, உலக மக்களின் நன்மையின் பொருட்டு அருளிச் செய்யப்பெற்றவை. அவற்றில், இறைவன் பொருள்சேர் புகழ் விளக்கும் தோத்திரமும், முப்பொருள் இயல்பும் ஞானயோக ஒழுக்க நெறிமுறைகளும் தெரிவிக்கும் சாத்திரமும், இவைகளைத் தெளிந்துணர்ந்து பக்திவைராக்கியங்களில் நின்று அருள்பெற்ற உண்மை நாயன்மார் வரலாறுகளும் அடங்கியுள்ளன. அவற்றை ஓதி உணரும் மனிதன் நிலவுலகில் தெய்வ வாழ்க்கை வாழலாம்.

இத்தகைய திருமுறைகளின் ஆழ்ந்த மேலான கருத்துக்களைத் தக்கவர்கள் சிந்தித்து வெளியிடவும், பலர் கேட்டுப் பயன்பெறவும் வாய்ப்பாக இங்கு இன்றுமுதல் மூன்று நாட்களில், திருமுறைக் கருத்தரங்க விழா ஸ்ரீ மகாலிங்கப்பெருமான் திருவருளால் அமைந்து நடைபெறுகின்றது.

இதில் தக்க அறிஞர்கள் வந்து பங்குபற்றுவது நமக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. பங்குபற்றும் தலைவர் பார்வையாளர் முதலிய பலரும், கேட்டுப் பயன்பெறும் அனைவரும் இம்மை மறுமை நலன்களும் சிவஞானமும் நிரம்பப்பெற்று உய்ய ஸ்ரீஞானமாநடராசப் பெருமான் திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—சிவஞான சுவாமிகள்

தைப்பூசமும், தெப்பத் திருவிழாவும்

ந. ரா. முருகவேள் M. A., M. O. L.,

முன்னுரை:

ஒரு நாட்டின் பண்பாடு என்பனவற்றை உணர்வதற்கு, அந் நாட்டு மக்களால் கொண்டாடப்படும் விழாக்கள் பெரிதும் துணை செய்வனவாகும். ''நாகரிகம் பெற்ற ஒரு சமுதாயம், உண்மை அழகு அருஞ்செயல் கலைத்திறன் அமைதிநலம் ஆகிய ஐந்து பண்புகளைச் சிறப்புறக் காட்டிக்கொண்டு திகழும்'' என அறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். அங்ஙனம் அவர் குறிப்பிட்ட ஐந்தனோடு, ஆறுவதாகத் திருவிழாக்களையும் (Festivals) கூட, நாம் சேர்த்துக் கொள்ளுதல் பொருந்தும்.

தைப்பூசம்;

இம்முறையில், நமது தமிழ்நாட்டின் தகைசான்ற உயரிய பண்பு நலன்களை விளக்கிக் கொண்டு, ஒளிரும் விழாக்கள் பலவற்றுள், தைப்பூச விழாவும் ஒன்றாகும். தைப்பூச நாள், தமிழ் மக்களால் சிறப்பாகப் போற்றப்பெறும் புனிதத் திருநாட்களில் ஒன்று. தமிழகம் எங்கணுமுள்ள சைவத் திருக்கோயில்கள் பலவற்றிலும் தைப்பூச விழா, தொன்றுதொட்டு மிகவும் சிறந்த முறையில் போற்றிக்கொண்டாடப் பெற்று வருகின்றது. திருஞானசம்பந்தப் பெருமான் சென்னைத் திருமயிலைக்கு எழுந்தருளி, அங்கம் பூம்பாவையாக்கிய அற்புதம் நிகழ்த்திப் பாடியருளிய தேவாரத் திருப்பதிகத்தில், ஒவ்வொரு மாதத்திலும் செவ்வி தின் நடைபெறும் திருவிழாக்களைக் குறிப்பிடுங்கால், தைத் திங்களில் பௌர்ணமி நாளை ஒட்டி நிகழும் தைப்பூசத் திருவிழாவையும், குறிப்பிட்டுப் பாடி யருளியுள்ளார்:

''மைப்பூசும் ஒண்கண்
 மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசும் நீற்றான் கபாலீச்
 சுரம் அமர்ந்தான்
நெய்ப்பூசும் வெண்புழுக்கல்
 நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசம் காணாதே
 போதியோ பூம்பாவாய்''

என்பது திருஞானசம்பந்தர் அருளிய திருமயிலைக் கபாலீச் சுரத்துத் தேவாரம். இதனால் இற்றைக்கு 1300 ஆண்டுகளுக்கும் மிக மிக முன்னரே, தைப்பூச நாள்விழா தமிழகம் எங்கணும் சிறப்புற நிகழ்ந்து வந்தமை தெளியலாம்.

தைந்நீராடல்

இக் காலத்தில் சித்திரை மாதமே, ஓர் ஆண்டின் முதல் மாதமாகக் கொள்ளப்பட்டு வருகின்றதாயினும், மிகப் பழைய காலத்தில்

---

*'' A Civilized Society exhibits the five qualities of Truth, Beauty, Adventure, Art, and Peace.''
—Prof. A.N. Whitehead, Adventure in Ideas.

தைம்மாதமே முதல் மாதமாகக் கருதப்பட்டு வந்ததென ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அத்தகைய பழைமையும் பெருமையும் சான்ற தைம்மாதத்திற்குப் பூச நட்சத்திரம் மிகவும் சிறப்புடையதாகும். பூச நட்சத்திரத்திற்குரிய அதி தெய்வம், தேவர்களின் குருவாகிய பிருகஸ்பதி என்பர். பிருகஸ்பதி பகவான் அறிவாற்றல் ஞானங்களில் மிகவும் சிறந்தவர். ஆதலின் அவருக்குரிய பூச நாளில் இறைவனை வழிபடுவோர், எல்லா அறிவாற்றல் ஞானங்களும் எய்தப்பெறுவர் எனப் பெரியோர் கூறுவர். அதுபற்றியே மார்கழி மாதத்திற் போலத் தைம்மாதத்திலும், தவமும் நோன்பும் மேற்கொள்ளும் பழக்கம் பண்டைக்காலம் முதலே நமது தமிழ்நாட்டிற் பயின்று வந்துள்ளது. ''தையொரு திங்களும் தரைவிளக்கித் தண்மண்டிலம் இட்டு'' எனவரும் ஆண்டாள் நாச்சியாரின் அழகிய திருப்பாடலும், இவ்வுண்மையினை இனிது வலியுறுத்தும். மார்கழி நீராடல் போலவே, தைந்நீராடலும் தமிழ் இலக்கியங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது

'' வையெயிற் றவர்நாப்பண்
வகையணிப் பொலிந்து நீ
தையில்நீர் ஆடிய தவம்
தலைப் படுவாயோ''

—கலித்தொகை, 59.

''செவியிற் கேட்பினும் சொல்லிறந்து
வெகுள்வோள்
கண்ணிற் காணின் என்னு குவள்கொல்?
நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந்து உண்ணும்நின் பரத்தை
மார்பே —ஐங்குறுநூறு, 84.

தாய் அருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்
—பரிபாடல், 11—90.

என்று, இவ்வாறு சங்க நூல்களில் புகழ்ந்து கூறப்பெறும் தைந் நீராடல் என்பது, தைப் பூசத் திருநாளை ஒட்டி நிகழ்வதே ஆகும் எனலாம். மார்கழித் திங்களில் திருவாதிரை முதன்மை பெறுவதுபோலத் தைத் திங்களில், பூசத் திருநாள் சிறப்புடையதாகப் போற்றப் பெறுகின்றது. சிவாலயங்களிலுள்ள புனித தீர்த்தங்களில், தைப்பூசத் திருநாளில் நீராடி வழிபடுதல் பெருநலம் பயக்கும்.

பழைமையும் பெருமையும்

தைப்பூசத் திருநாளில் மாதவத்தோர்களாகிய முனிவர்களும், வானவர்களும் ஏனையோர்களும் இவ்வுலகிற்குப் போந்து, தைப்பூசத் திருநாளில் நீராடி இறைவனை வழிபடுகின்றனர். தைப்பூச நீராடலால் உலகம் பொலிவெய்திப் பலவகை நலன்களைப் பெறுகின்றது.

''வருந்திய மாதவத்தோர் வானோர்
ஏனோர் வந்து ஈண்டிப்
பொருந்திய தைப்பூசம் ஆடி
உலகம் பொலிவெய்தத்
திருந்திய நான்மறையோர்
சீரால் ஏத்த இடைமருதிற்
பொருந்திய கோயிலே
கோயிலாகப் புக்கீரே''

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடலால், தைப்பூசத் திருவிழாவின் சிறப்பும் சால்பும் இனிது விளங்கும்.

வாசம் கமழ் மாமலர்ச்
சோலையில் வண்டே
தேசம் புகுந்து ஈண்டி ஓர்
செம்மை யுடைத்தாய்ப்
பூசம் புகுந்து ஆடிப்
பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற
இடைமருது ஈதோ''

என்னும் பிறிதொரு தேவாரப் பாடலிலும், பூசவிழாவின் சிறப்பினைத் திருஞானசம்பந்தர் போற்றிப் படியிருத்தல் காணலாம், இங்ஙனமே நமது திருநாவுக்கரசர் பெருமானும்,

''பாசம் ஒன்றிலராய்ப் பல பக்தர்கள்
வாச நாண்மலர்கொண்டு அடி வைகலும்
ஈசன் எம்பெருமான் இடை மருதினில்
பூசம் நாம்புகுதும் புனல் ஆடவே''

எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தல், இங்கு நாம் அறிந்து பெரிதும் இன்புறத் தக்கது இவ்வாற்ருல் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் வாழ்ந்திருந்த ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கும் மிக முற்பட்ட காலத்திலிருந்தே, தைப்பூச விழா மிகவும் சிறப்புற நிகழ்ந்து வந்தமை தெளியலாம்.

மணிவாசகர்

தைப்பூச நாளில் புனலாடி இறைவனை வழிபடுதலால் உலகம் பொலிவெய்தும் எனவும், தேவர்களும் முனிவர்களும் தைப்பூச நாளில் புனலாடுவதற்காகப் பெருந்திரளாக ஈண்டி வந்து திருவிடை மருதூரில் கூடுகின்றனர் எனவும், திருஞானசம்பந்தர் பாடியிருத்தலை மேலே கண்டோம். இங்ஙனம் நிகழும் தைப்பூசப் புனலாடு விழாவின் தத்துவ நுண்பொருள் யாதோ எனின், அஃது இறைவனின் பெருங் கருணையாகிய தடங்கடலில் நம்மனோர் அனைவரும் சென்று படிந்து, மகிழ்ந்து திளைத்து இன்புறுதல் வேண்டும் என்பதன் அறிகுறியே யாகும்.

''மருவினிய மலர்ப்பாதம் மனத்தில்
வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச்
சிவபெருமான் என்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத்
தடங்கடலிற் படிவாமாறு
அருள்எனக்கு இங்கு; இடை மருதே
இடம்கொண்ட அம்மானே''

எனவரும் திருவாசகப் பாடலில், மணிவாசகப் பெருமான் இதனைக் குறிப்பிட்டிருத்தல், நாம் இனிதறிந்து போற்றுதற்குரியது. தேவர்களும் முனிவர்களும் திரண்டுவந்து திருவிடைமருதூரில் பூசநாளிற் புனலாடுதலை உணர்ந்து வியந்து, அதன் நுண்பொருட் குறிப்பினை விளக்கும் நிலையில், ''சிவபெருமான் என்று ஏத்திப் பருகி நின் பரங்கருணைத் தடங்கடலில் படிவு ஆமாறு அருள் எனக்கு இங்கு'' என்று, இடைமருதூர் இடங்கொண்ட அம்மானை, மணிவாசகர் ஆரா அன்பிற்பாடி வேண்டும் திறன், நம்மனோர் சிந்தித்துத் தெளியற்பாலது.

இராமலிங்க அடிகளார் :

இத்தகைய பல சிறப்புகளை உடைமை பற்றியே, இராமலிங்க அடிகளார், உத்தர ஞான சிதம்பரம் என்னும் வடலூர்ப் பெருவெளியில் தாம் அமைத்தருளிய சத்திய ஞான சபையில், தைப்பூசத் திருநாளில் சோதி தரிசனம் செய்தலை, அன்பர்களின் பொருட்டு ஏற்பாடு செய்தருளினர். தைப்பூசத் திருநாளில் தான், தில்லைச் சிதம்பரப் பெருந்தலத்தில், நடராஜப்பெருமான் வியாக்கிரபாத முனிவருக்குத் தமது ஐந்தொழிற் றிருக்கூத்துக்காட்சி (பஞ்ச கிருத்தியப் பரமானந்தத் தாண்டவ தரிசனம்) வழங்கியருளினர் என்பர்.

ஓர் ஆண்டிற்குரிய பன்னிரண்டு மாதங்களையும், மேஷம், ரிஷபம், மிதுனம் முதலிய ராசிகளை ஒட்டி வழங்குவது, சௌரமானம் என்னும் முறையைச் சேர்ந்தது. சைத்திரம் வைசாகம் ஜேஷ்டம் ஆஷாடம் முதலிய நட்சத்திரங்களை ஒட்டி, முறையே சித்திரை வைகாசி ஆனி ஆடி என வழங்குதல், சாந்திரமானம் என்னும் முறையாகும்.

இந்தச் சாந்திரமான முறையைத் தழுவிக் கடைப்பிடிக்கப் பெறுவதே தைப்பூசப் பெருவிழா. சந்திரனுக்குரிய நாட்கள் பிண்டசித்தி என்னும் உடற்பேற்று நலத்திற்கு உரியனவாகும். தைம்மாதத்தின் கடக நல்லோரையில் புனர்பூசம் பூசம் ஆயில்யம் என்பவைகளுள், நடு நட்சத்திரமாகிய பூச தினத்தில் தான், சந்திரன் பூரணமாய்த் தன் வீட்டில்

அமர்ந்திருந்து ஒளி வழங்கி அருள்கின்றான். ஆதலின், அந்நாளில், இறைவனை முறைப்படி அன்புடன் வழிபடின், பிண்டசித்தி முதலிய பெரு நலன்களை எளிதிற் பெறலாம் என்பது, பெரியோர்கள் கண்டுணர்ந்த அரியதோர் அனுபவ உண்மை. அதுபற்றியே திருவருட்பிரகாச வள்ளலார் ஆசிய இராமலிங்க அடிகளார், வடலூரில் தைப்பூசத் திருவிழாவைச் சிறப்புற நிகழ்த்துமாறு வகுத்து வைத்து அருளினர். அவர் தமது திருவுருவைக் கரந்து இறைவன் திருவருள் ஒளியிற் கலந்தருளியதும், தைப்பூசத் திருநாளை ஒட்டியேயாதல், நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

தெப்பத் திருவிழா

தைப்பூசத் திருநாளை ஒட்டித் தெப்பத் திருவிழா நிகழ்த்துவது, தமிழகமெங்கணுமுள்ள சிவாலயங்களிற் பெரிதும் வழக்கமாக இருந்து வருகின்றது. பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்கும் சிற்றுயிர்களாகிய நமக்கெல்லாம் ஒரு தெப்பம்போல இருந்து உதவி புரிந்து, இறைவன் நம்மை வீடு பேறாகிய கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்தருளுகின்றான் என்னும் உண்மையினை உணர்த்தும் ஓர் அடையாளமே (Symbolism), தெப்பத்திருவிழா எனலாம்.

திருவள்ளுவர்

நாம் புரியும் நல்வினை தீவினைகளின் பயனாக வரும் பிறவியை, காரண காரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதல்பற்றிப் ''பிறவிப் பெருங்கடல் என்றும்''; அதன் கண் அழுந்தி வருந்தாமல் நம்மைக் காப்பாற்றுதல் பற்றி இறைவனின் திருவடிகளைக் குறிப்பினால் தெப்பம் என்றும், உருவகம் செய்து;

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடி சேரா தார்''

என்று நம் திருவள்ளுவர்பெருமான் அருளிச் செய்திருத்தலை அனைவரும் அறிவர்.

திருவள்ளுவர் பெருமான் தமது திருக்குறளில் இங்ஙனம் மிகச் சுருக்கமாக அறிவுறுத்தருளிய கருத்தினையே, நமது மணிவாசகப் பெருமான் மிகவும் வியந்து போற்றித் தழுவிக் கொண்டு, தமது திருவாசகத்தில் விரித்துரைத்து விளக்கி அருள்கின்றார் :

மணிவாசகர்

''பிறவியாகிய பெரிய கடலில் விழுந்து, துன்பமாகிய அலைகளால் தாக்குண்டு, பரத்தையர் ஆகிய புயற்காற்றில் சிக்கி, காமம் என்னும் சுறாமீனின் வாயில் அகப்பட்டுக் கொண்டு, இனி உய்யும் வழியாது என்று பல வகைகளில் எண்ணிக் கவலைப்பட்டு, திருவைந்தெழுத்து ஆகிய தெப்பத்தினையே துணையாகப் பற்றிக்கொண்ட என்னை, வீடுபேறு ஆகிய கரையிற் சேர்த்து நீ ஆட்கொண்டருளினாய்'' என்னும் கருத்து அமைய,

''தனியனேன் பெரும்பிறவிப்
பவ்வத்து, எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு,
பற்றொன் றின்றிக்,
கனியைநேர் துவர்வாயார்
என்னும் காலாற்
கலக்குண்டு, காமவான்
சுறவின் வாய்ப்பட்டு,
இனிஎன்னே உய்யுமாறு
என்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக்
கிடக்கின் றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய்
மூர்க்கனேற்கே''

என மணிவாசகர் அருளிய திருவாசகப் பாடலிலும், பிறவியைக் கடலாகவும், இறைவனைக் கரை சேர்த்தருளும் முதல்வனாகவும், உருவகம் செய்து உணர்த்தியிருத்தல் காணலாம்.

பட்டினத்தடிகள்

பிறவி என்பது ஒரு பெருங் கடல், அதன் கண் மக்களாகிய நாம், உடம்பு என்னும் கப்ப லில் அறியாமை - தீய நடத்தை-பொய்-பிணி இடும்பை என்னும் பலவகைச் சரக்குகளை மிகுதியாக ஏற்றிக் கொண்டிருக்கின்றோம். வினை என்னும் மீகாமன், கருப்பம் என்னும் துறைமுகத்தினின்றும், வாழ்க்கை என்னும் வளம் தேடுதற் பொருட்டு, அக் கப்பலை ஓட்டிச் செல்கின்றான். வழியில் ஐம்புலன்கள் ஆகிய திமிங்கலங்கள் நம்மை எதிர்த்து மோதித் தொடர்ந்து வந்து துன்புறுத்துகின்றன. துய ரம் என்னும் அலைகள் கடுமையாகப் பொங்கி எழுந்து தாக்கி அலைக்கழிக்கின்றன. குடும்பம் என்னும் பாரம் மிக்க ஒரு பெரிய பாறைக்கல் மேலே வந்து விழுந்து, நிறை என்னும் கூம்பு முறிந்து போகவும், நல்லுணர்வு என்னும் பாய் மரம் கிழிந்து சிதறவும் செய்கின்றது. இவற் றால் உடம்பு ஆகிய கப்பல் கவிழ்ந்துவிடுமோ என்னும் கவலை நிலை ஏற்படுகின்றது. அங்ங னம் நேராமல், இறைவனே தன் திருவருள் ஆகிய கயிறு கொண்டு சேர்த்துக் கட்டி, தன் னுடைய திருவடி என்னும் கரையில் நம்மை யெல்லாம் சேர்த்துக் காத்தருள்கின்றான்.

''அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை
ஈட்டமும்
இனையன பலசரக்கு ஏற்றி, வினைஎனும்
தொல்மீ காமன் உய்ப்ப, அந்நிலைக்
கருஎனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலன்எனும் கோள்மீன் அலமந்து
தொடரப்,
பிறப்பெனுங் பெருங்கடல் உறப்புகுந்து
அலைக்குந்
துயர்த்திரை உவட்டில், பெயர்ப்பிடம்
அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து,
நிறைஎனுங் கூம்பு முறிந்து குறையா
உயர்புஎனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம், அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ்
சடிலத்துப்
பையரவு அணிந் தெய்வ நாயக!
தொல்எயில் உடுத்த தில்லை காவல!
வம்பலர் தும்பை அம்பல வாண! நின்
அருள்எனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா
செய்யே''

என்பது பட்டினத்தடிகள் ''கோயில் நான் மணிமாலை'' என்னும் நூலில், பதினொன்றாம் திருமுறையிற் பாடியிருக்கும் சிறந்த இனிய உருவாக அணியியற் பாடல் ஆகும்.

முடிவுரை

தெப்பத் திருவிழாவின் நுட்பக் கருத்தை ஒருவகையில் விளக்குவது, இனிய நல்ல இப் பாடல் எனக் கொள்ளலாம், இத்தகைய சிறந்த தைப்பூசத்துத் தெப்பத்திருவிழாவினைத் தரிசித்து வழிபட்டு, நாம் அனைவரும் கற்பகாம் பாள் உடனுறை திருமயிலைக் கபாலீச்சுரப் பெருமானின் திருவருளைப் பெறுவோமாக!

— ஆசிரியர்.

துன்பக் கடலிடைத் தோணித்
தொழில் பூண்டு, தொண்டர் தம்மை
இன்பக் கரை முகந்து ஏற்றும்
திறத்தன; மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி
செய்யும்; அப் பொய் பொருந்தா
அன்பர்க்கு அணியன காண்க;
ஐயாறன் அடித்தலமே

—திருநாவுக்கரசர்,

148688

அடியவர்க்கு மெய்யன்

ஸ்ரீ. உ. ப. ஸ்ரீவித்வான் திருவஹீந்திரபுரம் ஈ. தே. ஸ்ரீநிவாஸாசாரியசுவாமிகள்.

திருவஹீந்திரபுரத்தில் ஸ்ரீ தேவநாதனுக்கு அமைந்த திருநாமங்களுள் 'அடியவர்க்கு மெய்யன்' என்பது முக்கியமானது. இந்தத் திருநாமத்தைத் திருமங்கையாழ்வாரும் ஸ்ரீ தேசிகனும் உகந்து அநுஸந்தித்திருப்பதைப் பெரிய திருமொழியில் திருவயிந்திரபுரத் திருப்பதிகத்திலும் (3-1), ஸ்ரீ தேசிகன் அருளிய மும்மணிக்கோவையிலும், நவரத்தினமாலையிலும் காணலாம். 'அடியவர்க்கு மெய்யன்' என்பதனால் அடியவர்கள் அல்லாதவர்க்கு மெய்யனல்லன் என்பதும் ஒருவாறு பெறப்பெறும். அதனால்; 'மெய்யனாகும் விரும்பித் தொழுவார்க்கெல்லாம், பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்' என்று நம்மாழ்வார் திருவாய்மொழி, ஒன்பதாம் பத்து, 7-ஆம் பாட்டில் அருளிச்செய்திருப்பதைத் திருவுள்ளத்தில் கொண்டு, திருமங்கையாழ்வாரும் ஸ்ரீ தேசிகனும் இந்தத் திருநாமத்தை, 'இது இந்த எம்பெருமானுக்கே தகும்' என்று கருதி, ஸ்ரீ தேவநாதனுக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

''தேவர் தானவர் சென்று சென்று இறைஞ்சத்தன் திருவயிந்திரபுரத்து மேவு சோதி'' என்று திருமங்கையாழ்வார் பாடியிருப்பதனால், 'தேவரோடு அசுரரோடு வாசியறத் தம் தம் தெய்வமாகக் கொண்டாடப் பெறுகிறவன் சிலருக்குப் பொய்யனாகக் கூடுமோ?' என்ற கேள்வியும் எழலாம். தேவர், அசுரர், மனிதர், ராக்ஷஸர் முதலிய யாராக இருந்தாலும், தாஸபூதர்களுக்கு அவன் மெய்யான அருளைத் தருகிறவன்; தாஸபூதர் அல்லாதவர்க்குப் பொய்யன். அதாவது தன் ஸ்வரூபத்தையும், தன்னை அடையும் உபாயத்தையும், அடையவேண்டிய புருஷார்த்தத்தையும் காட்டாமல் மறைப்பவன் என்பதே இங்கு அறியவேண்டிய கருத்து.

ஸத்யனாக இருப்பது பரமனுக்கு ஸ்வபாவிகம். ஆனால் அஸத்யனாக இருப்பதோ வந்தேறியான தன்மை. அது அந்த அந்த வ்யக்தியைப் பொறுத்ததேயாகும். ஸத்யஸ்வரூபியாகிய பரமனை ஸத்யந்தனாகவே காண்பது ராமாவதாரத்தில். தன்னை அறிந்தார்க்கு ஸத்யனாகவும், தன் பெருமையை உணராதவர்க்கு ஓரளவு பொய்யனாகவும் பரமன் விளங்குவது கிருஷ்ணாவதாரத்தில். தேவர்களையும் பக்தர்களையும் துன்புறுத்துவதே இயல்பாக உடைய அசுரர்களாகிய திரிபுரர்களை அழிக்க வேண்டிப் பொய்யனாகவே தன்னைக் காட்டியருளியது புத்தாவதாரத்தில். இந்த மூன்று அவதாரங்களையும் ஒரே பாட்டில் அமைத்துப் பாடி, 'அடியவர்க்கு மெய்யன்' என்ற திருநாமத்தை விளக்குகிறார் ஸ்ரீ தேசிகன். (நவரத்தின மாலை மூன்றாம் பாட்டு.)

'' புரமுயர்த்த அசுரர்கட்கோர்
புறமுரைத்த பொய்யினன்
வரையெடுத்து மழைதடுத்த
மழையொடொத்த மெய்யினன்
திரைநிரைத்த கடலெரித்த
சிலைவளைத்த கையினன்
அருள்கொடுத்து வினைதவிர்க்கும்
அடியவர்க்கு மெய்யனே.''

முதலில் கூறியது புத்தாவதாரம். அதில் மாயவன் பூர்ணமாகப் பொய்யனாய்த் தன்னைக் காட்டினான். இரண்டாவதாகக் கூறியது கிருஷ்ணாவதாரம். அந்த அவதாரத்தில் பொய்யனாகவும் மெய்யனாகவும் தன்னைக் காட்டியருளியமை பிரசித்தம். மலையேந்தித் தம்மைக் காப்பவன் கண்ணன் என்று அறிந்திருந்தும், 'ஏழு நாள் மலைதூக்கி நிற்கும் நீ யார்? என்று அந்த ஆயர் கேட்டார்கள் என்றால், அவர்களுக்குக் கண்ணனுடைய ஸ்வரூபம் பூர்ணமாகத் தெரியவில்லை என்றுதானே பொருள்? அத்துடன், தன் கோபத்தைப் பயனில்லாததாகச் செய்து, ஆயர்களைக் காப்பாற்றும் கண்ணன் தனக்கும் பெரிய தெய்வம் என்பதைத் தேவேந்திரனும் அறியவில்லை. அதனால் கிருஷ்ணாவதாரத்தில் அவ்வப்போது தன் ஸ்வரூபத்தை மறைத்துப் பொய்யனாகி யிருந்தமை கண்கூடு. ஆனால் ஸத்யமொன்றையே துணையாகக் கொண்ட ராமாவதாரத்தில் சிறிதும் பொய்யின் வாஸனையும் தொடராமல் பரமன் பொலிந்தான் என்பது, பெரியோர் அறுதியிட்டுப் பேசிய விஷயம்,

இப்படி முழுவதும் பொய்யனாக இருந்த புத்தாவதாரத்தை முதலிலும், அடியவர்க்கு மெய்யனாகவும் அல்லாதவர்க்குப் பொய்யனாகவும் தெளிவாகத் தன்னைக் காட்டியருளிய கிருஷ்ணாவதாரத்தை இரண்டாவதாகவும், ஸத்ய ஸ்வரூபனாகவும் ஸத்ய ஸ்வபாவனாகவும் ஸத்யப்ரதிஜ்ஞனாகவும் தன்னைக்காட்டியருளிய ராமாவதாரத்தை மூன்றாவதாகவும் காட்டி, அப்படி அவன் செய்வதும் அருளைக் கொடுக்கவும் வினை தவிர்க்கவும் என்று பேசி, 'அவன் தான் அடியவர்க்கு மெய்யன்' என்று காட்டியருளுகிறார் நிகமாந்த மஹாதேசிகன் என்பது இங்கு உணரத்தக்கது.

O2 N71. N59TK
N71.13,6



திருவாரூர் வட்டம் திருப்புகலூர் ஸ்ரீ அக்கினீசுவர சுவாமி கோயிலிலும், மாயூரம் வட்டம் பேரளுந்தூர் ஸ்ரீ ஆமருவியப்பர் கோயிலிலும் நடைபெற்ற பாவை விழாக்களில், நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், B.A., B.L., I.A.S. அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தல்.







சென்னைத் தியாகராயநகரத் தருமபுர ஆதீன சமயப்பிரச்சார நிலையத்தின், 17-ஆம் ஆண்டு நிறைவு விழாவில், நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B. A. அவர்களும், சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞானம், M. L. A. அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தல்.

Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at General Printers, 14-Poonamallee High Road, Madras-3. Editor: N.R.MURUGAVELL, M.A.,M.O.L.,